# இந்து ஒளி

தீபம் 21 சுடர் 4
HINDU OLI



ஏவிளம்பி வருடம் - சித்திரை - வைகாசி
April - May 2017

அகில இலங்கை இந்து மாமன்ற ஆன்மீக இதழ்
Religious Journal of All Ceylon Hindu Congress

# 26-03-2017 அன்று பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் இடம்பெற்ற, 'மனிதநேயமாமனிதர்' அமரர் திரு. வி.கயிலாசபிள்ளை அவர்களின் அஞ்சலி நிகழ்வும் ஆத்மசாந்திப்பிரார்த்தனையும்




மாமன்றத் தலைவரின் தலைமையுரை



சக்தி இல்ல மாணவியரின் இறைவணக்கம்



அமரர் வி.கயிலாசபிள்ளை அவர்களுக்கான அஞ்சலி செலுத்தப்பட்டவேளை



அஞ்சலி செலுத்தப்பட்டவேளை




சக்தி இல்ல மாணவ மாணவியரால் அமரர் வி.கயிலாசபிள்ளை அவர்களுக்கான அஞ்சலி செலுத்தப்பட்டது.



பார்வையாளர்களில் ஒருபகுதியினர்







(இடமிருந்து - வலம்) மகன் க.அரவிந்தன், மகள் திருமதி.செ.அருந்ததி, மருமகன் வைத்தியகலாநிதி சி.செல்லையா, அமரரின் மனைவி திருமதி கயிலாசபிள்ளை, அமரரின் தம்பி வைத்தியகலாநிதி வி.அம்பலவாணர் ஆகியோர் அமரரின் திருவுருவப்படத்திற்கு மாலை சூட்டி அஞ்சலி செலுத்தினர்.







(இடமிருந்து - வலம்) மாமன்றத்தின் சார்பில் திரு.மா.தவயோகராஜா, திருக்கேதீஸ்வர ஆலய திருப்பணிச்சபை சார்பில் திரு.இராமச்சந்திரன், இந்து வித்தியாவிருத்திச் சங்கத்தின் சார்பில் திரு.வே.கந்தசாமி, கதிர்காம தொண்டர்சபை சார்பில் திரு.சி.த.சி.அருளானந்தம், மாத்தளை முத்துமாரி அம்மன் ஆலயம் சார்பாக திரு.புண்ணியசீலன், ஆகியோர் அமரரின் திருவுருவப்படத்திற்கு மாலை சூட்டி அஞ்சலி செலுத்தினர்.




(இடமிருந்து - வலம்) கொழும்பு சைவமுன்னேற்றச் சங்கம்சார்பாக திரு.சி.தனபாலா, சக்தி இல்ல மாணவியர் ஆகியோர் அமரரின் திருவுருவப்படத்திற்கு மாலை சூட்டி அஞ்சலி செலுத்தினர்.



சக்தி இல்ல மாணவியரின் நடன ஆற்றுகை.




அமரரின் நினைவுச் சிறப்பு 'இந்து ஒளி' யை முன்னைநாள் பிரதம நீதியரசர் மாண்புமிகு க.ஸ்ரீபவன் அவர்களிடமிருந்து பெற்றுக் கொள்ளும் திருமதி கயிலாசபிள்ளை, மகன் க.அரவிந்தன்.

உ
சிவமயம்

# இந்து ஒளி

தீபம் - 21 சுடர் - 04

ஏவிளம்பி வருடம் சித்திரைத் திங்கள் 27 ஆம் நாள் (10.04.2017)

## பஞ்சபுராணம்

திருச்சிற்றம்பலம்

### தேவாரம்

முற்றலாமையிள நாகமோடேன முளைக்கொம்பவை பூண்டு
வற்றலோடுகல னாப்பலிதேர்ந்தென துள்ளங்கவர் கள்வன்
கற்றல்கேட்டலுடை யார்பெரியார்கழல் கையால்தொழு தேத்தப்
பெற்றம்ஊர்ந்தபிர மாபுரம்மேவிய பெம்மானிவ னன்றே

### திருவாசகம்

உடையாள் உன்றன் நடுவிருக்கும்
உடையாள் நடுவுள் நீயிருத்தி
அடியேன் நடுவுள் இருவீரும்
இருப்பதானால் அடியேன்உன்
அடியார் நடுவுள் இருக்கும்
அருளைப் புரியாய் பொன்னம்பலத்தெம்
முடியாமுதலேஎன்கருத்து
முடியும் வண்ணம் முன்னின்றே

### திருவிசைப்பா

ஒளிவளர் விளக்கேஉலப்பிலாஒன்றே
உணர்வுசூழ் கடந்ததோர் உணர்வே
தெளிவளர் பளிங்கின் திரள்மணிக் குன்றே
சித்தத்துள் தித்திக்குந் தேனே
அளிவளர் உள்ளத் தானந்தக் கனியே
அம்பலம் ஆடரங் காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயைத்
தொண்டனேன் விளம்புமாவிளம்பே

### திருப்பல்லாண்டு

மிண்டுமனத்தவர் போமின்கள்
மெய்யடியார்கள் விரைந்துவம்மின்
கொண்டும் கொடுத்தும் குடிகுடியீசற்காட்
செய்மின் குழாம்புகுந்
தண்டங்கடந்தபொருள்அளவில்லதோர்
ஆனந்தவெள்ளப்பொருள்
பண்டும் இன்றும் என்றும் உள்ளபொருள் என்றே
பல்லாண்டு கூறுதுமே

### திருப்புராணம்

உலகெலாம்உணர்ந் தோதற் கரியவன்
நிலவுலாவியநீர்மலிவேணியன்
அலகில் சோதியன் அம்பலத் தாடுவான்
மலர்சிலம்படிவாழ்த்திவணங்குவாம்.

திருச்சிற்றம்பலம்

## சமய நிறுவனங்கள் எதிர்கால திட்டமிடலுடன் செயலாற்ற வேண்டும்

இந்து சமய நிறுவனங்கள் நிகழ்கால எதிர்காலத் திட்டமிடலில் அதிகம் அக்கறைகொள்ள வேண்டும். எந்தவெரு பணியையும் சீராக மேற்கொள்வதற்கு பொருளாதாரத் தேவையையும், மனிதவலுத் தேவையையும் கருத்தில் கொள்ளல் அவசியமாகும். நம் முன்னோர்கள் கோவில்களின் வளர்ச்சிக்காகவும், மடங்களின் நிர்வகிப்புக்காகவும் நிலபுலங்களையும் அறக்கட்டளைகளையும் நிறுவி எதிர்காலத்தில் அவை குறைவின்றித் தொடராகச் செயற்பட வழிசெய்தனர். தஞ்சைப் பெருங்கோவிலைக் கட்டிய இராசராச சோழன், கோவிற் சுற்றாடலில் வேளாண்மை நிலங்களை கோவிலுக்குத் தானமாக வழங்கினான் என்பது வரலாறு. சிதம்பரம் கோயிலின் பூசை வழிபாட்டுக்கு எந்தக் காலத்திலும் குறைவரக்கூடாது என்பதற்காக எம்மண்ணிலும் பலர் சிதம்பரத்துக்குத் தமது நிலபுலங்களை வழங்கும் பண்பாடு பலவருடகாலமாக இருந்து வந்துள்ளது. எம்முன்னோர்கள் திட்டமிடற் செயற்பாடுகளில் வெற்றிகண்டனர்.

எங்கள் இந்து மாமன்றத்தை வழிநடத்திய சான்றோர், இந்து மாமன்றத்துக்கு நிரந்தர அலுவலகத்தை கொழும்பில் நிறுவ முயற்சிசெய்தவேளை நன்கு திட்டமிட்டுச் செயற்பட்டதனால் இன்றுவரை அதன் பயனை நாம் உணரக்கூடியதாகவுள்ளது. காணி குத்தகைக்கு கிடைத்தபோதும் கட்டடத்தை நிறுவ நிதி வசதியின்றித் தவித்த போது அன்றைய நிர்வாகிகள் நல்லவண்ணம் திட்டமிட்டனர். காப்புறுதி நிறுவனம் ஒன்றின் உதவியை நாடி அவர்களிடம் முற்பணத்தைப் பெற்று ஐந்துமாடிக் கட்டடத்தைப் பூர்த்தி செய்து நான்கு மாடியை வாடகைக்கு கொடுத்துவிட்டு ஐந்தாவது மாடியில் மாமன்ற அலுவலகத்தை நிறுவி பணிகளைத் தொடர்ந்தனர். காப்புறுதி நிறுவன ஒப்பந்த அடிப்படையில்

மறுபக்கம் பார்க்க...

## வாழ்த்து

வையம் நீடுகமாமலைமன்னுக
மெய் விரும்பியஅன்பர்விளங்குக
சைவநன்னெறிதான் தழைத்துஓங்குக
தெய்வவெண்திருநீறுசிறக்கவே.

அவர்களது வாடகைப்பணம் கணக்கிடப்பட்டு குறிப்பிட்ட காலப்பகுதில் மாமன்ற கட்டடம் தொடர்பான கடன் யாவும் பூர்த்தியானமை அனைவரும் அறிந்ததே. இந்து மாமன்ற கட்டடத் தொகுதியால் ஆண்டுதோறும் கிடைத்துவரும் வருவாயைப் பயன்படுத்தி கடந்த இருபது ஆண்டுகளுக்கு மேலாக அகில இலங்கை இந்து மாமன்றம் செய்து வரும் பணிகள் மெச்சத்தக்கவை.

ஏழைமாணவரின் கல்வித் தொண்டு முதல் பல சமூகநலப் பணிகளை மாமன்றம் மேற்கொள்வதற்கு மேற்குறித்த திட்டமிடற்பணியே பெரிதும் காரணம் என்பதை நினைந்து பெருமை கொள்ளக்கூடியதாகவுள்ளது. யாழ்ப்பாணம் நல்லூர் வரலாற்று மண்ணில் மூன்று அடுக்கு மாடிக்கட்டடத்தில் பிராந்திய அலுவலகம் அமைவதற்கும் இந்நிதியே பெரிதும் உதவியது. வவுனியா ஆலயத்தில் மண்டபம் அமைவதற்கும், கீரிமலையில் சிவபூமி யாத்திரிகர் விடுதி அமைவதற்கும், தற்போது வன்னிப் பெருநிலப்பரப்பில் முறிகண்டியில் சரவணப்பொய்கை நிலையம் அமைவதற்கும் எமது மாமன்றத்தை இன்று வரை வழிநடத்திய சான்றோர் உருவாக்கிய நன்முயற்சிகளே காரணமாகும்.

எதிர்காலத்திலும் நாம் நல்ல பயன் மிக்க திட்டங்களையும், பொருளாதார வசதிகளையும் உருவாக்கவேண்டும். இது காலத்தின் கட்டாயமாகும்.


**இந்து ஒளி** | அகில இலங்கை இந்து மாமன்ற இந்து ஆராய்ச்சி நிலையத்தின் வெளியீடு

**சித்திரை – வைகாசி 2017**



ஆசிரியர் குழு : திரு. கந்தையா நீலகண்டன்
சைவஞானபானு கலாநிதி ஆறு. திருமுருகன்
திரு.வே. கந்தசாமி
கலாநிதி ம. பாலகைலாசநாத சர்மா
சிவஸ்ரீ க. வைத்தீஸ்வரக் குருக்கள்
திரு. த. மனோகரன்



| | |
|---|---|
| *ஒரு பிரதியின் விலை* | ரூபா 50.00 |
| *வருடாந்தச் சந்தா (உள்நாடு)* | ரூபா 300.00 (தபாற் செலவு தனி) |
| *வருடாந்தச் சந்தா (வெளிநாடு)* | US டொலர் 15 |

**அகில இலங்கை இந்து மாமன்றம்**

**தலைமையகம்:** 91/5, சேர் சிற்றம்பலம் ஏ. கார்டினர் மாவத்தை, கொழும்பு – 2, இலங்கை.
தொலைபேசி (கொழும்பு) :0112434990, தொலைநகல் : 0112344720
மின்னஞ்சல் : hinducongress@gmail.com

**யாழ் பணிமனை :** 211/17, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி (யாழ்ப்பாணம்) : 0212221075, தொலைநகல் : 0212217280
மின்னஞ்சல் : hinducongressjaffna@gmail.com
இணையத்தளம் : http://www.hinducongress.lk

*இந்து ஒளியில் வெளியிடப்பட்டுள்ள கட்டுரைகளில் தெரிவிக்கப்பட்டுள்ள கருத்துக்கள் ஆக்கியோன்களுடையதே.*

**HINDU OLI** | *Publication of* HINDU RESEARCH CENTRE OF ALL CEYLON HINDU CONGRESS

April - May 2017



**Editorial Board :** Mr. Kandiah Neelakandan
Dr. Aru. Thirumurugan
Mr. V. Kandasamy
Dr. M. Balakailasanatha Sarma
Sivasri K. Vaitheeswara Kurukkal
Mr. D. Manoharan



| | |
|---|---|
| Price | Rs. 50.00 |
| Annual Subscription (Inland) | Rs. 300.00 (Excluding Postage) |
| Annual Subscription (Foreign) | US $ 15 (Including Postage) |

**ALL CEYLON HINDU CONGRESS**

**Head Office:** 91/5, Sir Chittampalam A. Gardiner Mawatha
Colombo - 2, Sri Lanka.
Telephone No.: 011 2434990, Fax No.: 011 2344720
E-Mail : hinducongress@gmail.com

**Jaffna Office :** 211/17, Temple Road, Nallur, Jaffna.
Telephone No.: 0212221075, Fax No.: 0212217280
E-Mail : hinducongressjaffna@gmail.com
Website : http://www.hinducongress.lk

**Views expressed in the articles in Hindu Oli are those of the contributors.**

**ISSN : 2012 - 9645**

# ஆன்மீகச் சுடரின் அருள்மடல்





## யோகசுவாமி அறநெறிப்பாடசாலை



முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள புதுக்குடியிருப்பை அண்மிய ஓர் சிறிய கிராமம் வேணாவில். கடந்தகால யுத்தத்தினால் பெரிதும் பாதிக்கப்பட்ட கிராமங்களில் இதுவும் ஒன்றாகும். இக்கிராமவாசிகள் பெரும்பாலானோர் விவசாயிகளாகவும், அன்றாட கூலிவேலை செய்பவர்களாகவே உள்ளனர். சமயம், கலை, கலாசாரம் என்பதைப் பேண வேண்டும் என்பதில் மிகவும் அக்கறை செலுத்துகின்றனர் இக்கிராம மக்கள். இந்த கிராமத்தின் மத்தியில் ஓர் சிறு முத்துமாரியம்மன் ஆலயம் அமைந்துள்ளது. இந்த ஆலயத்தின் முன்பாக உள்ள பெரிய ஆலமரத்தின் கீழ் எழுபது பிள்ளைகளுடன் ஓர் அறநெறிப்பாடசாலை இயங்கிவருகின்றது. சமயபாடத்தைப் போதிப்பதோடு மாணவர்களுக்கு கரகம், கிராமிய நடனம் போன்ற பண்டைய பாரம்பரிய கலைகளையும் போதித்து வருகின்றார்கள். அண்மையில் இந்த பாடசாலைக்கு விஜயம் செய்த நாம் அந்த மாணவர்களையும், மாணவர்களின் ஊக்கத்தினையும், ஆசிரியர்களின் சேவை மனப்பாண்மையையும் பார்த்து ஆனந்தமடைந்தோம். இறையருளாலும், அமெரிக்காவில் வாழும் தாராள குணமுடைய ஒரு குடும்பத்தின் உதவியுடனும், மனித நேய அறக்கட்டளையின் ஊடாக முத்துமாரியம்மன் ஆலயத்திற்கு பக்கத்தில் ஓர் கட்டிடம் அமைக்கப்பட்டு சிவயோக சுவாமிகள் அறநெறிப்பாடசாலை என்ற பெயருடன் பெப்ரவரி 18ஆம் திகதி சம்பிரதாயபூர்வமாக திறந்துவைக்கப்பட்டது. ஆலமரத்தின் கீழ் பல கஷ்ரத்தின் மத்தியில் கல்வி கற்ற மாணவர்களுக்கு இப்பாடசாலை ஒரு பெரும் வரப்பிரசாதமாக அமைந்துள்ளதாக கிராமத்து மக்கள் போற்றினர்.

சைவசமய சிறுவர்களைப் பொறுத்த மட்டில் அறநெறிக் கல்வி என்பது மிகவும் முக்கியமான விடயமாகும். தென்பகுதியில் பௌத்த சமய பிள்ளைகள் ஞாயிறு தோறும் வெள்ளை ஆடை அணிந்து விகாரைக்கு சென்று தமது சமயத்தை பக்தியுடன் பயிலுகின்றனர். பெரும்பாலும் கிழக்கு மாகாணத்தில் இஸ்லாமிய பிள்ளைகள் பாரம்பரிய சமய உடையணிந்து பள்ளிவாசலில் பயிலுகின்றனர். அதுபோலவே கிறிஸ்தவ தேவாலயத்திலும் ஞாயிறு தோறும் சமய போதனை நடைபெறுகிறது. இந்துக்களைப் பொறுத்தவரையில் ஆலயங்களில் அறநெறிப் போதனை என்பது அரிதாகவே காணப்படுகிறது. மலையகம், வன்னி, கிழக்கு மாகாணம் போன்ற இடங்களில் அறநெறிப் பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டு நடாத்தப்பட்டு வந்தாலும் யாழ் மாவட்டத்தில் குறிப்பாக நகரப்பகுதிகளில் அறநெறிப்பாடசாலை என்பது அரிதாகவே உள்ளது. இந்துக்கள் தமது பிள்ளைகளை தனியார் கல்வி நிறுவனங்களுக்கு காலை மாலை என்று அனுப்பி அவர்கள் பரீட்சையில் சித்தியடையவேண்டும் என்று நினைக்கிறார்களே தவிர தமது பிள்ளைகள் சமயக்கருத்துக்களையும், அறநெறிக்கோட்பாடுகளையும் கற்று வாழ்க்கையில் நல்லவர்களாக வாழவேண்டும் என்பதை பெற்றோர் கவனத்தில் கொள்வதாக தெரியவில்லை. பிள்ளைகள் சிறு வயதாக இருக்கும் போதே அவர்களுடைய மனங்களிலே அறநெறிக் கோட்பாடுகளை பதிய வைக்கவேண்டும். இந்த இளமையில் கற்கும் இந்த நீதிநெறிகளே அவர்களின் எதிர்கால வாழ்க்கைக்கு உதவுவதாக அமையும். இந்த நீதிநெறிக் கோட்பாடுகளை பாடசாலை புத்தகங்களில் மட்டும் எதிர்பார்க்கமுடியாது. அமைதியான ஒரு ஆலயம் சார்ந்த ஆன்மீகச் சூழலில் அறநெறிக் கோட்பாடுகளை பக்திபூர்வமாக படிக்கும் போது

அது சிறார்களின் மனதில் பசுமரத்தாணிபோல் பதிகின்றது. இதுவே எதிர்காலத்தில் அவர்களை நல்லவர்களாக வாழ வகுக்கின்றது. அறநெறிப்பாடசாலை ஆசிரியர்களும் பிள்ளைகளுக்கு தேவாரங்களை மட்டும் கற்பிக்காது ஆத்திசூடி, கொன்றைவேந்தன், திருக்குறள் போன்ற நீதி நூல்களை கதைகள் மூலமாகவும், உவமானங்கள் மூலமாகவும் மாணவர்களுக்கு விளக்கிக் கூறவேண்டும். ஒரு பண்பாடான எதிர்கால தலைமுறையினரை உருவாக்குவதற்கு சமயம் சார்ந்த அறநெறிக்கல்வி மிகவும் முக்கியமானதாகும். பண்டைக்காலத்தில் குருகுலக்கல்வி மூலம் ஆன்மீகச் சூழலில் மாணவர்கள் அறநெறியைக் கற்று தம்வாழ்வை மேம்படுத்த வழி அமைத்து கொடுக்கவேண்டும். இன்று நம் ஆலயங்கள் கோபுரங்கள் அமைப்பதும், திருமண மண்டபங்கள் அமைப்பது, ஆடம்பர திருவிழாக்கள் செய்வதுடன் நின்று விடுகிறார்கள். எதிர்கால சந்ததியினர் நல்ல முறையின் சமய நெறியைப் பேணவேண்டும் என்பதில் அக்கறை கொள்வதில்லை. எமது அனுபவத்தில் மலையகத்திலும், வன்னியிலும், கிழக்கு மாகாணத்திலும் நேரடியாக பார்க்கும்பொழுது சிறு ஆலயங்களாக இருந்தாலும் அங்கு வாழும் மக்கள் வறியவர்களாக இருந்தாலும் அங்கு அவர்கள் அறநெறிப்பாடசாலைகளை நடாத்தி எதிர்கால தலைமுறையினருக்கு தமது சமயத்தையும் கலாசாரத்தையும் ஊட்டுகின்றனர். அவர்களின் இந்த சேவையை போற்றுகின்றேன். மகாத்மாகாந்தி அடிகள் கூறியது போல கிராமங்களே ஒரு நாட்டின் உயிர்நாடி. எமது நாட்டிலும்கிராமந்தோறும்உள்ளஅறநெறிப்பாடசாலைகளில் கற்று வரும் மாணவர்கள் எதிர்காலத்தில் நீதி நெறி வழுவா நற்குடிமக்களாக வாழ்வார்கள் என்பதில் ஐயமில்லை.இந்த அறநெறிப்பாடசாலைகளை எல்லா இடங்களிலும் அமைய இயன்ற உதவிகளை செய்யவேண்டியது இந்த நாட்டின் இந்துக்களாகிய எம் எல்லோருடைய தலையாய கடமையாகும்.

## மாமன்றத்தில் எழுந்தருளிப் பேரருள்பாலிக்கும்

# ஸ்ரீ சிவகாமி அம்பாள் சமேத ஸ்ரீ நடராஜப் பெருமான்

இலங்கை இந்துமன்ற அமைப்புக்களினதும், ஆலய நம்பிக்கைபொறுப்புகளினதும் ஒன்றியமாகவும் இலங்கைவாழ் இந்து மக்களின் ஏகோபித்த குரலாகவும் ஒலித்துக் கொண்டிருக்கும், தலைநகர் கொழும்பில் தலைநிமிர்ந்து நிற்கும் அகில இலங்கை இந்து மாமன்றத்தின் தலைமைச் செயலகக் கட்டடத்தின் 5வது மாடியில் எழுந்தருளி பேரருள்பாலித்து அருளாட்சி செய்துகொண்டிருக்கும் ஸ்ரீ சிவகாமி அம்பாள் சமேத ஸ்ரீ நடராஜப் பெருமான் ஆலயத்தின் மகா கும்பாபிடேகம் நடைபெற்ற அருள்நிறைந்த தினம் இன்றைய சித்திரைப் பூரணை தினமாகும்.

கலியுக வருடம் 5098 ம் வருடத்துக்கு சமனான தாது வருடம் சித்திரைத்திங்கள் 19ம் நாள் (01-05-1996) காலை கொழும்பு கொம்பனித்தெரு அருள்மிகு சிவசுப்பிரமணிய சுவாமி கோயிலிலிருந்து ஸ்ரீ சிவகாமி அம்பாள் சமேத ஸ்ரீ நடராஜப் பெருமான் விக்கிரகங்களை ஊர்வலமாக எடுத்துவந்து அன்றும் மறுநாளும் ஆகமவிதிப்படி கிரியைகள் சிவாச்சாரியார்களால் நடாத்தப்பெற்று சித்திரை 21ம் நாள் (03-05-1996) வெள்ளிக்கிழமை சித்திரைப் பூரணை நிறைநாளில் காலை 08-44 முதல் 09-56 வரையான சுபவேளையில் மகாகும்பாபிடேகம் நடைபெற்றது.

மகாகும்பாபிடேகத்தினை சிவஸ்ரீ குஞ்சிதபாதக் குருக்கள் தலைமையிலான சிவாச்சாரியார்கள் நடாத்தி வைத்தனர். காஞ்சிபுரத்திலிருந்து சிவஸ்ரீ க.ராயப்பு குருக்கள் அவர்களும் அந் நிகழ்வுகளில் கலந்து சிறப்பித்திருந்தார்.



மாமன்ற தலைமையக வழிபாட்டு மண்டபத்தில் மாமன்றப் பிரதிநிதிகள் (1996)

அன்றைய தினம் முதல் பிரதி வெள்ளிக் கிழமைதோறும் நண்பகல் வேளை உச்சிக் காலத்தில் எம்பெருமானுக்கும் அம்பாளுக்கும் பரிவார மூர்த்திகளுக்கும் பூசை வழிபாடுகள் நடைபெற்றுவருவதுடன் விசேட விரத உற்சவ தினங்களான மகாசிவராத்திரி, திருவாதிரை மற்றும் நடேசர் அபிடேக தினங்களில் விசேட அபிடேக ஆராதனைகளும் நடைபெற்று வருகின்றது. ஆண்டுதோறும் சித்திரப் பூரணை நிறைநாளில் வருடாபிடேகம் நடைபெற்று வருகின்றமையும் இங்கு விசேடமாகக் குறிப்பிடக்கூடியதாகும்.

# சித்திரா பௌர்ணமி

சிவநெறிச்செல்வர். சைவநன்மணி, ஞானவாரிதி
**இரா.மயில்வாகனம்**
*முன்னைனாள் முகாமைப்பேரவை உறுப்பினர்*

பாரெல்லாம் நிறைந்து ஊரெல்லாம் அறிந்து
பேரெல்லாம் வலியனாய் நின்றவனே - சீராய
ஈஸ்வரனாய் பெற்றதொரு பேர்நிலைக்க இந்து ஒளி
பூஸ்கரனாய் போற்ற அருள் தா.

வருமீன் திருவாதிரை இரவொன்பான் நிமிடம் ஏழாம் வாக்கியத்தில்
திருக்கணியில் ஈரைந்தாம் இரவைம்பத் தொரு நிமிடம் ஈன்றாளாம் ஈஸ்வரனை
திருக்கணியும் வாக்கியமும் சேராமல் இருப்பதற்கு திசைமுகனும் திருமாலும்
விதிவலியால் தேடியும் காணாது திகைத்து இருப்பதுவும் இதுவாமே.

சிவனையே முழுமுதற் கடவுளாகக் கொண்ட சைவர்களாய நாம் விரதமிருந்து வேண்டியதை ஆண்டவனிடம் விரும்பிக் கேட்டு வாழ்ந்து வருகிறோம்: இன்றைய தினம் சித்திரா பௌர்ணமி. அதாவது சித்திரை மாதத்துப் பூரணை. இது, மிக மிக வேண்டிய, போற்றுதற்கு, உரிய நாளாகும். இதையிட்டு தேர்ந்த அறிவாளிகள் பலவாறாகக் கூறுவர்.

இல்வாழ்வான் என்பான் இயல்புடைய மூவரில் பிதுரர்களை நினைந்து அவர்கள் முன்வேண்டியதைத் தேடிக்கொடுத்து வணங்குவதாகப்பாவனை பண்ணுவர். சித்திரையில் பூரணையும் ஆடியில் அமாவாசையும் மிகச் சிறந்தன. மாதாவுக்கு பூரணையும் பிதாவுக்கு அமாவாசையும் உலகத்தில் சிறந்தன. நாம் தைப் பூசம், மாசி மகம், சித்திரை பூரணை, வைகாசி விசாகம், ஆனி உத்தரம், ஆடி அமாவாசை, ஆவணி மூலம், புரட்டாதி சனி, ஐப்பசி வெள்ளி, கார்த்திகைக் கார்த்திகை, மார்கழி ஆதிரை என்று அடுக்கிக் கொண்டே விரதமிருந்து வாழ்ந்து வருகிறோம். ஆனால் சித்திரைப் பூரணை அவசியமாக விரதமிருக்க வேண்டிய ஓர் நாள். இதற்கு ஓர் சிறிய உதாரணம். ஓர் வியாபாரி பல சரக்குகளுடன் கடைவைத்து பல சிப்பந்திகளுடன் வியாபாரஞ் செய்து காலை மாலை என்று வேறுபாடின்றி உழைத்து வருந்திப் பணம் தேடி வாழ்க்கையைச் சிறப்பாக நடத்துகின்றான். ஓர் இரத்தினக்கல் வியாபாரி வருடத்தில் ஓர் நாள் ஒரு கல்லை விற்று பெரும் பொருள் தேடி இறும் பூதுகிறான். அது போன்றதுதான் சித்திரையில் பூரணை விரதம்.

மாதாவை நினைத்து சோதிடர் சொன்னது போல மாதுருகாரர்கள் எனச் சந்திரனை நோக்கி நமஸ்கரித்து விரதமிருக்க வேண்டும். அல்லும் பகலும் அணைத்து, உணவூட்டி, தாலாட்டி, நீரூட்டி, கோலகலமாக உடையணிந்து வளர்த்து வாழ்வளித்த அன்னையை நினைக்கும் ஓர் திருநாள்.

சித்திரை மாதம் தேவர்களுக்கு பகல் பதினைந்து நாளிகை முதல் இருபது இரவு நாளிகைப் பொழுது ஓர் மத்தியானப் பொழுதாகும். பிதுர்காலமும் இதுவே. சித்திரை மாதமென்பது சித்திரை நட்சத்திரத்தோடு சந்திரன் நிற்கும் காலம். அச்சமயம் பூமி மேடராசியில் நிற்கிறது.

(மறுபக்கம் பார்க்க...)

## அகில இலங்கை இந்து மாமன்றத்தின் அஞ்சலி



அகில இலங்கை இந்து மாமன்றத்தின் உபதலைவர்களில் ஒருவராகவும், மாமன்றக் கல்விக்குழுத் தலைவராகவும் மாமன்றப்பணிகளில் எங்களோடு தோளோடு தோள் நின்று உழைத்து வழிகாட்டிய கல்விமான் திரு.க.அருணாசலம் அவர்களின் மறைவு கேட்டு நாம் மிகவும் வேதனையடைகின்றோம்.

இந்நாட்டில் பல வேதனைகளும் சோதனைகளும் நிறைந்த காலகட்டத்தில் அகில இலங்கை இந்து மாமன்றத்தின் கல்விக்குழுவிற்குத் தலைமை தந்து அவர்தந்த காத்திரமான ஆதரவையும் உதவிகளையும் நாங்கள் மறக்கமுடியாது.

வடகிழக்கு பிராந்திய பாடசாலைகளின் பழைய மாணவர் சங்க ஒன்றிய கொழும்புக் கிளை ஆரம்பித்தபோதும் அதற்கு தலைமைதந்து, அன்று பல பிரச்சினைகளை எதிர்நோக்கிய வடகிழக்கு பாடசாலைகளின் வளர்ச்சிக்கும் உறுதுணையாக இருந்தவர்.

கல்விமான் அருணாசலம் அவர்களை இழந்து வாடும் குடும்பத்தினரின் துயரில் நாமும் பங்குகொண்டு அன்னாரின் ஆன்மா சாந்தியடைய எல்லாம்வல்ல ஸ்ரீ சிவகாமி அம்பாள் சமேத ஸ்ரீ நடராஜப்பெருமான் பாதாரவிந்தங்களைப் பிரார்த்தித்து நிற்கின்றோம்.

**கந்தையா நீலகண்டன்**
தலைவர்

சித்திரை மாதத்தில் பிறந்தமையால் சித்திரபுத்திரனார் எனவும், இவ்விரதத்தை சித்திரகுப்த விரதமென்றும் அழைக்கின்றோம். இந்திரன் விமானத்தில் இருந்து வந்து பூசித்தான் என்றும் பிதுர்கடன் தீர்த்தானென்றும் சோதிடகாரர் சோடிப்பர். இதை நாம் அறிவது திருவிளையாடற் புராணத்தில். தமிழ்நாட்டில் விசேடமாக இந்நாளைப் பொன்னாளாகப் போற்றுவர். நாமும் விரதமிருந்து நமது சமய ஆசாரியார் அவர்கட்கு இயன்ற அளவு தானம் தருமம் இயற்றி மாதாவை மனதில் நினைத்து கொடுத்து மகிழ்விப்போமாக.

இதை நினைவு கூர்வதுபோல சித்திரபுத்திரனாரையும் நினைவு கூரவேண்டும். உலகங்கள் உய்வதற்கு அவரவர் தாம் செய்யும் பாவ புண்ணியங்களை சிறிதளவாவது உணர வேண்டும். இதற்காக நமது சிவமூர்த்தியானவர் உமையம்மையார் மூலம் தங்கப் பலகையை அழைப்பித்து உருவமைத்தருளினார். அதை உமையம்மை உணர்ந்து அதிசயப்பட்டு கருவுருவாய்ப் பேசும்படி கிருபைபாலிக்க வேண்டுமென இரந்தார். மூர்த்தியும் அப்படியே கிருபை செய்து மந்திரம் உபதேசித்து சித்திரபுத்திரன் என்று பெயர் சூட்டி அருள் புரிந்தார். அம்மையின் அருள் ஒளியே சித்திரபுத்திரனார். இவரும் சித்திரை மாதச் சித்திரை மீது வரும் இவ்வுருவைப்பார்த்து தேவாதி தேவனும் தேவர்களைக் காத்து அருளும் திருமாலும் பூர்வகாலங்களின் உயிர் ராசிகளும் செய்த புண்ணிய பாவங்களை உய்த்துணர்ந்து எமக்கு உணர்த்த வேண்டுமென்று கட்டளையிட்டார். இவ்வாறே கைலையில் இருந்து கொண்டே சித்திரபுத்திரனார் தினமும் கணக்கெழுதி வந்தார்.

இங்ஙனமாகத் தேவேந்திரன் மகா ஆசை கொண்டு புத்திர மேட்டு யாகமும் செய்து தவமிருந்தான். தேவேந்திரனின் திருவுளத்து உண்டாய எண்ணத்தை நிறைவேற்ற வெண்ணி காமதேனுவை அழைத்து இந்திரன் இந்திராணி தவத்தையெடுத்துரைத்து பின்னர் சித்திரபுத்திரனை இந்திரனுக்கும் புத்திரனாகப் பிறந்து அவன் வாஞ்ஞையைத் தீர்க்குமாறு அருள்புரிந்தருளினார். அங்ஙனனே சித்திரபுத்திரனார் காமதேனுவின் வயிற்றில் உதித்து பாவபுண்ணியங்களை பகுத்து உணர்த்தி வந்தார்.

"இந்நாட்களில் சைவாலயங்களில் சித்திரபுத்திரனார் கதை படித்து விரதபூர்த்தியை முடித்துக் கொள்வார்கள். இதனைச் சித்திரபுத்திரனார் கதை என தலைப்பூட்டி புகழேந்திப் புலவர் பாடியுள்ளார்.

"ஆயிரம் இங்கிலியர் அசைக்க வொண்றாகப் புத்தகமும் பொன்னின் எழுத்தாணியும் பொற்பாபக் கைப்பிடித்து" என்று தொடங்கி பாடியுள்ளார். இக்கதைப்படிப்பு வரங்கொடுத்தருளும் வரதவிநாயகர் ஆலயங்களில் பத்தியாகப் படிக்கப்படும். அன்றியும் இயன்ற அறங்காவலர் அப்பனை வேண்டி முன் அன்னதானமும் கொடுப்பர். சில ஆலயங்களில் சித்திரைக்கஞ்சி என்னும் பெயரோடு கஞ்சி கொடுப்பர்.

நாம் இறந்து விட்டோம் என்று எண்ணி அத்துடன் விட்டு விடுகிறோம். அப்படியல்ல ஆன்மா ஒன்றுதான் உடம்பை விட்டுப் போனது. உடம்பு அழிந்துவிட்டது. ஆனால் ஆன்மா அழியவில்லை அது தன்னை ஆக்கிய ஆண்டவனைத் தேடி அலைந்து பிறப்புக்கு வழிதேடி தக்கதாகவுள்ள உடலை அடைகிறது. ஆகவே நாம் நம் தாயாராகிய பிதுர் இருக்கிறார் என்பதை உணரவேண்டும். தூல சூக்கும, திரவ, திட பொருள்கள் உலகில் இருப்பதுபோல உலகங்களும் எழுவகைப்பட்டனவாய் காமக் குரோதங்களுக்கு தக்கதாக பாதாள சுவர்க்கலோகங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன என்பது கொள்கை. இவ்வாறே இறந்தவர்கள் யமலோகத்தில் அழைக்கப்பட்டு கணக்கின்படி வேறு உடல் எடுப்பர். இங்கேதான் பாவ புண்ணியங்கள் பகுத்தறியப்படும். அவ்வேளை மாதாவாகிய பிதுருக்கு நாம் செய்யும் கடமை உய்த்துணரப்படும். இக்கோட்பாடு உண்மை, பொய், என்பவற்றை உய்த்துணராது நினைந்து நினைந்து உருகி தர்ப்பணித்து நமக்குரிய கடமையைச் செய்வோமாக.

*இக்கட்டுரையானது இந்து ஒளி தீபம் 01 - சுடர் 03இல் பிரசுரிக்கப்பட்டது*

**பிரம்ம முகூர்த்தம் என்றால் என்ன?**

உலகம் தோன்றியது, உயிர்கள் பிறந்தன என்று சொல்கிறோம். தோன்றுதல், பிறத்தல் ஆகியவற்றை சிருஷ்டி என்கிறது சாஸ்திரம். இதைச் செய்பவர் பிரம்மா. அன்றாடம் பகலில் இயங்குவதும், இரவில் உறங்குவதும் மீண்டும் அதிகாலையில் எழுந்து பணிகளைத் தொடங்குவதும் உயிர்களின் இயல்பு. உறக்கத்தில் இருந்து எழுவது மறுபிறவி போன்றது. அதிகாலை 4.30-.6 என்பது பிரம்மா எழும் காலமாக (உலக இயக்கத்தின் சிருஷ்டி துவக்க நேரம்) இருப்பதால் அவரின் பெயரால் 'பிரம்மமுகூர்த்தம்' என்றனர். எந்த தோஷமும் இல்லாத நேரம் இது. காலை ஐந்து மணிக்கு விளக்கேற்றி வழிபடுவது மிகச் சிறந்தது. மேலும் இந்த அதிகாலை நேரத்தில் மாணவர் எழுந்து கல்வி கற்றால், கற்பது அவர்களின் மனதில் ஆழமாகப் பதியும் என்பது யதார்த்தம். இந்நேரத்தில் யோக நிலையில் இருப்பதும், பிரணாயாமம் முதலிய யோக கலைகளை செய்வதும் சிறப்பாக மனதை ஒருநிலைப்படுத்தி உளச்சமநிலையைப் பேணுவதற்கும் பொருத்தமான நேரமாகும்.

## மாமன்றச் செய்திகள்

# அகில இலங்கை இந்து மாமன்றத்தின் புத்தாண்டுச் செய்தி

ஜனநாயக ஆட்சியை நிறுவும் போராட்டத்தில், ஜனவரி 2015 இல் இந்த நாட்டின் சர்வாதிகார போக்கற்ற ஒரு ஆட்சியை அமைக்க இணைந்து கொண்ட தமிழ் மக்கள், இன்று, இராணுவ – பௌத்த அரசியல் இந்த நாட்டில் அரசாங்கத்தால் ஊக்குவிக்கப்படுவதுடன் மேலும் வளர்க்கப்படுகின்றது என்பதைக் கண்டு ஏமாற்றமடைந்துள்ளனர். அதுவும், நல்லாட்சிக் குரல்கொடுத்து எங்களது மக்களின் பேராதரவைப் பெற்றவர்கள் அந்தக் கொடுமையில் ஈடுபட்டிருப்பது இன்னும் ஏமாற்றத்தை அளிக்கின்றது.

இந்த துரதிஷ்டவசமான போக்கு தமிழ் மக்களுக்கு தங்கள் நாட்டில் இருக்க வேண்டிய அரசியல் ஜனநாயக உரிமைகளில் பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தும். இந்த நிலைமை மேலும் தொடராமல் நிறுத்தப்படாவிட்டால் இன்னும் ஏமாற்றமும் பாரதூரமான மோதல் நிலையும் ஏற்படும். கடந்த அரசின் காலத்தில் ஆயிரக்கணக்கான ஏக்கர் காணி ஆயுதப்படைகளின் வசம் இருந்ததாக அறிக்கைப்படுத்தப்பட்டுள்ளது. இராணுவத்தால் அங்கீகாரமின்றிச் சுவீகரிக்கப்பட்ட காணிகளை உரிமையாளர்களுக்குத் திருப்பிக் கொடுப்போம் என்ற உறுதிமொழியை ஆட்சியாளர்கள் நிறைவேற்றவில்லை. இதுவரை அத்தகைய காணிகளில் சிறு விகிதமே விடுவிக்கப்பட்டுள்ளது.

ஆயதப்படைகளால் மட்டுமல்லாது தொல்பொருள் ஆராய்ச்சித் திணைக்களம்கூட அரசின் அங்கங்களாக எங்கள் மக்களின் உரிமைகளை நசுக்க முற்படுவது துரதிஷ்டவசமாகும்.

கிழக்கில் கன்னியாவில் இருக்கும் சுடுநீர்க் கிணறுகள் ஆரம்பகாலத்திலிருந்து எங்கள் இந்து ஆலயம் இருந்த ஒரு புராதன புனித தலமாகும். ஆலயத்துக்கு வரும் அடியார்கள் இக்கிணறுகளில் குளித்துவிட்டு ஆலயத்தைத் தரிசிப்பது பல ஆண்டுகளாக இருந்து வந்த எமது சமய மரபாகும். ஆனால் இப்போது அந்த வளாகம் பௌத்த வழிபாட்டுத்தலமாக கோலமிடப்பட்டுள்ளது. மேலும் சுடுநீர்க் கிணறுகளைப் பார்க்க வருபவர்கள் பௌத்த ஆலயத்துக்கு கட்டணம் செலுத்த கட்டாயப்படுத்தப்படுகின்றார்கள்.

கன்னியா வாழ் மக்களின் வகை அரசாங்கத் திட்டங்களால் மாற்றப்பட்டு வருகின்றது. சுடுநீர் கிணறுகளை நோக்கி நடக்கும்போது சிங்களக் கடைகளும் சிங்கள குறியீட்டு பலகைகளும் பௌத்த கொடியும்தான் வருவோரை வரவேற்கின்றன. மேலும் இந்த இடத்தை ஒரு பௌத்த பூமியாக எடுத்துக் காட்டும் தொல்பொருள் ஆராய்ச்சி அறிவிப்புக்களையும் காணலாம். சிவன் கோயிலுக்குப் பக்தர்கள் சென்று வழிபடமுடியாத நிலை ஏற்பட்டு அந்த ஆலயம் அழிவுறும் நிலையிலுள்ளது.

திருகோணமலை நகரைச் சேர்ந்த மடத்தடி முத்துமாரியம்மன் ஆலய பரிபாலனத்திலேயே ஆலயமும் சுடுநீர்க் கிணறுகளும் இருந்தன. பின்பு அவை உள்ளூ ராட்சி அமைப்பின் கீழ் கொண்டு வரப்பட்டன. பௌத்த அமைப்புக்களை அரச அமைப்புகள் ஆயுதப்படை மூலம் விஸ்தரிக்கின்ற நடவடிக்கைகளுக்கு இது ஓர் உதாரணம். இது உடன் நிறுத்தப்பட வேண்டும்.

வடக்கு கிழக்கில் மக்களுக்குச் சொந்தமான காணிகள் இன்னும் திருப்பிக் கொடுப்பதற்குப் போதிய நடவடிக்கைகள் எடுக்கப்படாது தொடரும் அதே நிலையில் எத்தனையோ தமிழ் அரசியற் கைதிகள் சிறையில் விசாரணையின்றி வாடுகின்றனர். தங்களின் மகன்களையும் கணவர்மார்களையும் ஆயிரக்கணக்கான தாய்மாரும் மனைவிமாரும் தேடிக் கொண்டிருக்கின்றனர்.

இந்தச் சூழ்நிலையில்தான் புதுவருடம் பிறக்கின்றது. இணக்கப்பாடும் மீள்புனருத்தாரணமும் பற்றிக் கதைக்கப்பட்டாலும் போதிய – திருப்திகரமான எந்த நடவடிக்கையும் அவ்வழியில் அரசாங்கத்தாலும் அரச நிறுவனங்களாலும் எடுக்கப்படவில்லை.

தேசிய ஒருமைப்பாடுபற்றி, ஒருங்கிணைப்புப் பற்றியெல்லாம் கதைப்பதற்கு முன் எங்கள் மக்கள் தங்கள் சுதந்திரத்தையே முதலில் நாடிநிற்கின்றனர். இது அரசாங்கத்திற்குப் புரியாத விடயம் அல்ல. ஆனால் அடுத்தடுத்து இந்த நாட்டை ஆள வந்தவர்கள் புரிந்தாலும் புரியாதமாதிரியே நடிப்பதுதான் வேதனை.

நாட்டின் சகல பகுதிகளிலும் வாழும் இந்து மக்களின் உணர்வுகள் இவை. எனவே அவர்களின் அபிலாசைகளை மெச்சி அவர்களுக்குரிய நிவாரணங்களை வழங்குமாறு ஒவ்வொருவரையும் வேண்டுகிறோம். அது நடக்காவிட்டால் புதுவருடத்தினை அவர்கள் கொண்டாடுவதை எதிர்பார்க்க முடியாது.

அதே சமயம் இந்த நாட்டிலும் வெளி நாட்டிலும் வாழுகின்ற இந்து மக்களிடம் நாம் விடுக்கும் வேண்டுகோள், அவர்கள் எல்லோரையும் புத்தாண்டில் பிரார்த்தனையிலீடுபடுமாறும், அவர்கள் பல ஆண்டுகளாக எதிர்பார்க்கும் பிரச்சினைகள் தீர இறையருள் கிடைக்கும் என்றும் நம்பிக்கையுடன் எல்லாம்வல்ல பரம்பொருளைப் பிரார்த்திப்போம்.

**கந்தையா நீலகண்டன்**
தலைவர்

**வே. கந்தசாமி**
பொதுச்செயலாளர்




# சைவ ஆசாரங்களும் சிரார்த்தமும்

- கலாபூஷணம், கலாநிதி குமாரசாமி சோமசுந்தரம் -
- நம்பிக்கை பொறுப்பாளர்சபை உறுப்பினர் -

## சைவ ஆசாரங்கள்

சைவ ஆநுட்டானங்கள், ஆசாரங்கள் என்பன நம் முன்னோர்களால் வகுக்கப்பட்டும், கடைப்பிடிக்கப் பட்டும்,வழிவழியாக உணர்த்தப் பெற்றும் வந்தவை. இவை வாழ்க்கையோடு இணைந்து விட்டவை. வாழ்க்கைக் கடமைகளாகக் கைக்கொள்ளப்பட்டு, பல நூற்றாண்டு காலம் மக்களின் வாழ்க்கையை வளப்படுத்தி வந்துள்ளன. மனித வாழ்க்கை என்பது உண்டி,உடை,உறையுள் ஆகிய அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்வதுடன் மாத்திரம் மட்டுப்படுத்தப்படுவதில்லை. அதற்கப்பாலும், ஆத்மீகம்,பண்பாடு, கலை,கலாசாரம், அறிவியல், தொழில்நுட்பம் எனப் பல்வேறு அம்சங்களையும் உள்ளடக்கியதாகவே மனித வாழ்க்கை மிளிர்கிறது. மனிதர்கள் இவ் வையத்தில் வாழ்வாங்கு வாழ்வதற்கும் வளமாக வாழ்வதற்கும் இவையனைத்தின் ஒன்றிணைந்த ஆற்றல் தேவை. இவற்றில் ஒன்று குறைந்தாலும் மனித வாழ்க்கை சத்து அற்றதாகவும் சக்தி இழந்ததாகவும் ஆகி விடுகின்றது.இதனாலேயே சைவசமயம் உலகியலையும் ஆத்மீகத்தையும் ஒருங்கே வலியுறுத்துகின்றது. இல்லறம் துறவறம் ஆகிய இரண்டையுமே அறங்களாக ஏற்றுக் கொள்கின்றது. வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து வானுறையும் தெய்வநிலையை மனிதர்கள் அடையப் பெறுவதற்கு வழியாகச் சைவநெறி விளங்குகின்றது. நமது சமயத்தில் சமயமும் மெய்யறிவும் ஒன்று சேர்ந்துள்ளன. சமய அநுட்டானங்கள் சமய ஆசாரங்கள் ஆகியவற்றிற்குப் பின்னால் அறிவு பூர்வமான தத்துவங்கள் உள்ளன. சமூக உயர்வு, சமூக உறுதி, சமூக கட்டுக்கோப்பு, சமூக சமநிலை ஆகியவற்றை வளர்க்கவும் பேணவும் காலங்காலமாக உதவி வந்துள்ளன. பல்வேறு இடர்ப்பாடுகளையும் வாழ்க்கையில் ஏற்பட்ட துன்பங்கள் துயர்களையும் பயம் பீதி குழப்பங்கள் அழிவுகள் என்பனவற்றையும் துணிச்சலுடன் எதிர்கொண்டு அவற்றிலிருந்து மீண்டு சாந்தி சமாதானம் அமைதிபெற்று நல்வாழ்வு வாழ்வதற்கு வேண்டிய பலத்தையும் பண்பையும் ஆற்றலையும் ஆதாரத்தையும் சமய ஆசாரங்கள் மனித குலத்திற்குக் கொடுத்துத் துணை செய்து வந்துள்ளன. அவை மூடப் பழக்கவழக்கங்கள் என்றால் என்றோ மறைந்திருக்க வேண்டும். பயனற்றவை தொடர்ந்து இடம் பெற்று வரமுடியாது. எனவேஅவை பண்பும் பயனும் நிறைந்தவை.





அர்த்தமுள்ள பயன்நிறைந்த சைவ ஆசாரங்களும் அநுட்டானங்களும் தற்காலங்களில் கைவிடப்பட்டும் நையாண்டி செய்யப்பட்டும் வருதல் நன்மைக்கு இட்டுச் செல்கின்றன என்று கூறுவதற்கில்லை. மாறாக மனித குல நாசத்திற்கே இது வழிவகுக்கின்றது என்பது மக்களால் உணரப்பட வேண்டியது. இன்று மனித குலம் எதிர்நோக்குகின்ற அவலங்கள், துன்பங்கள் ,அல்லல்கள், தொல்லைகள், அழிவுகள் ஆகியவை. தற்கால மனிதர்கள் ஆண்டாண்டுகாலமாகப் பேணப்பட்டு வந்த மனிதப்பண்புகள், விழுமியங்கள், சமய ஆசாரங்கள் ,சமய நெறிகள், ஆத்மீக செயற்பாடுகள் ஆகியவற்றின் பெறுமானத்தைக் குறைத்து மதித்து அவற்றை மூட நம்பிக்கைகள் என விலக்கி வைத்ததன் விளைவேயாகும். தினை விதைத்தவன் தினையைத் தானே அறுவடை செய்ய முடியும். தினையை விதைத்து விட்டு நெல் விளையும் என எதிர்பார்ப்பது எத்துணை பேதமையோ அதைவிடப் பன்மடங்கு பேதமை சமயச் செயற்பாடுகள், ஆத்மீகச் சிந்தனைகள், மனித விழுமியங்கள் நல்லொழுக்கப் பண்புகள் ஆகியவற்றை மனித வாழ்க்கையினின்றும் பிரித்து வெளியேற்றி விட்டு அமைதி வாழ்க்கை சாந்தி சமாதானம் நீதி நியாயங்கள் ஆகியவற்றை வாழ்வில் எதிர்பார்ப்பது ஆகும்.

நல்வாழ்க்கை நெறிகளை சமயத்தோடு தொடர்புபடுத்தி மக்களிடையே பரப்புவது அதனால் சமூக வாழ்க்கையை மேம்படுத்துவது என்பது சைவ சமய உத்தியாகப் பயன்படுத்தப்பட்டு வந்தமை குறிப்பிடத்தக்கது. இந்த வகையில் சமயச் செயற்பாடுகள், ஆசாரங்கள், சடங்குகள் ,கிரியைகள், விழாக்கள் விரதங்கள் என்பன நிகழ்த்தப்பட்டு இவற்றிற்கு விதிகள் பிரமாணங்கள் முறைகள் ஆகியனவும் வகுக்கப்பட்டன. இவற்றினால் மனிதர்கள் அகப்புறத்தூய்மையராய் உலக ஈடேற்றமும் ஆன்ம ஈடேற்றமும் பெற்று உயர்ந்தனர். இவ்வாறு நம்முன்னோர்கள் எமக்களித்த அருள்செல்வங்களையும் காட்டிய வழிமுறைகளையும் அலட்சியம் செய்வது அறிவு ஆகாது அறியாமையே ஆகும். மதிநுட்பம் ஆகாது மடமையின் அதி உச்சம் எனலாம். அன்பும் அறனும் இணைந்து காணப்படும் மனித வாழ்க்கையே இன்பம் கொழிக்கும் வாழ்க்கை .இதுவே

சமய வாழ்க்கையும் ஆகும். அன்பையும் அறனையும் மனிதனிடம் சேர்த்து வைப்பது சமயநெறிகள் சமய ஆசாரங்கள் அனுட்டானங்கள் என்பதை நினைவுபடுத்திக் கொள்ளுதல் அவசியம். இவையனைத்தும் எமது சமயப் பண்பாட்டுக் கூறுகள். இத்தகைய சைவசமயப் பண்பாடுகள் பல இன்றைய சந்ததியினரால் மறக்கப்பட்டும், மறுக்கப்பட்டும் ,மறைக்கப்பட்டும், மற்றையோர் பின்பற்றாது மறிக்கப்பட்டும் வருவது விசனிக்கத் தக்கது. இதனைவிட இவற்றை மேற்கொள்ளும் சிலர் மனம் போன போக்கிலே இவற்றின் விதிமுறைகளையும் தாற்பரியத்தையும் கருத்திற்கொள்ளாது நவநாகரிகத்திற்கேற்ப சமயப்பண்பாடுகளைத் திரித்தும் புதுக்கியும் பிறபண்பாடுகளிலிருந்து சேர்த்தும் அடிதலை மாற்றி தம் வசதிகளுக்கு முன்னுரிமை கொடுத்து செயல்படுவது கவலைக்குரியதாக உள்ளது. இவர்கள் குளிக்கப்போய் சேறுபூசியவர்கள் ஆகின்றனர். மேலும் இவையனைத்தையும் கண்டும் காணாதவர்களாக வாழாவிருக்கும் சிலரும் கண்டு அவற்றை ஏற்றுக் கொள்ளும் சிலரும் பிழையென்று தெரிந்தும் நியாயப்படுத்துபவர்களும் வழிகாட்டவேண்டிய அறிஞர்கள் மத்தியில் காணப்படுவது மேலும் விசனத்தைத் தருகின்றது. வழிவழி வந்த பண்பாடுகளையும் நடைமுறைகளையும் கற்றுப் பேணி அடுத்த தலைமுறையினருக்குக் கையளிக்க வேண்டிய பொறுப்பு அறிஞர்கள் பெரியோர்களுடையது என்பது கருத்தில் கொள்ளப்படவேண்டியது.

நமது சமுதாயம் சமயப் பண்பாடுகளை அடியொற்றியே வளர்ந்து வருகின்றது. இதனை மாற்றியமைக்க வேண்டிய தேவையுமில்லை. அது எளிதான காரியமுமல்ல. சமய ஆசாரங்களும் அநுட்டானங்களும் வாழ்க்கையை வளம்படுத்துவன. சீர் குலைப்பன அல்ல வாழ்வில் பிடிப்பினையும், நம்பிக்கை உணர்வையும் ஏற்படுத்துவன. ஒற்றுமையையும் உறுதியையும் நல்குவன. வேற்றுமையையும் வேண்டாதனவற்றையும் களைவன. மனிதர்களுக்கு மனிதத் தன்மையையும் தெய்வீகத் தன்மையையும் தருவன. அவர்களுள் ஆழ்ந்து கிடக்கும் நல்லனவற்றையெல்லாம் வெளிக்கொணர உதவுவன. இவை மறைந்து போக விடாமல் காப்பாற்றப்படவேண்டும். இந்த உலகம் மனிதர்கள் வாழத்தகுந்த இடமாக உருவாக்கப்படுவதற்குச் சமயப் பண்பாடுகள் பேணப்படவேண்டியது அவசியமாகின்றது.

## சிரார்த்தம் பிதிர்வழிபாடு

இந்த வகையில் சைவ சமய ஆசாரங்களில் ஒன்றான சிரார்த்தம் என்பது தந்தை தாயார் இறந்த பின் ஆண்டுதோறும் அவர்களின் தீவினைகள் நீக்குதற் பொருட்டும் அவர்களின் ஆத்ம சாந்திக்காகவும் அவர்களை நினைந்து சிரத்தையுடன் புத்திரர்களால் நிறைவேற்றப்படும் தானதருமங்கள் ஆகும். "அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்" என்பது ஆன்றோர் வாக்கு. எனவே தந்தை தாய் ஆகிய இரு முதுகுரவரும் கண்கண்ட தெய்வங்களாக அவர்கள் உயிரோடு வாழுங்காலத்து அன்போடு அவர்களைப் பேணி அவர்களின் தேவைகளை விருப்போடு நிறைவேற்றி அவர்களின் சொல்வழி நின்று நல்வழியில் ஓம்புதல் தான் அவர்களை வழிபடுதல் என்பது ஆகும். அவர்கள் இறந்த பின் அவர்களின் ஆத்மா சிவபதம் அடைவதற்கு ஏதுவாக புத்திரகளால் சிரத்தையோடு செய்யப்படுகின்ற கிரியைகள் அபரக்கிரியைகள் எனப்படுகின்றன. அபரம் என்பதன் பொருள் பிந்தியது என்பதாகும். எனவே ஒருவர் இறந்தபின் அவரை நினைந்து செய்வது அபரக்கிரியை ஆகும். இவ்வாறு இறந்த தாய் தந்தையரைக் குறித்து அபரக் கிரியைகளை முறைப்படி செய்து வழிபாடு செய்தல் புதல்வர்களின் கடன் ஆகக் கொள்ளப்படுகிறது. தென்புலத்தார் வழிபாடு என்றும் பிதுர் வழிபாடு என்றும் இதனை நம்முன்னோர் குறிப்பிடுகின்றனர். சைவத்தமிழ் மக்களிடையே மிகப் பழைய காலந்தொட்டு இத்தகைய வழிபாட்டுமுறை இருந்து வந்தமைக்குச் சான்றுகள் உண்டு.

" தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்கல் தானென்றாங்கு
ஐம்புலத்தாறு ஓம்பல் தலை"

என்பது வள்ளுவர் வாய்மொழி

தென்புலத்தார் தெய்வம் விருந்தினர் சுற்றத்தார் தான் என்ற ஐந்து வகையினரும் இல்வாழ்வானால் ஓம்பப்பட வேண்டியவர்கள் என்பது பழந்தமிழர் கொள்கை. தென்புலத்தார் என்பது பிதுர்கள் இறந்த ஆத்மாக்கள். இவை பூமண்டலத்திற்குத் தென்திசையில் உள்ள தென்புலத்தில் உறைவதால் பிதுர்கள், தென்புலத்தார் எனப்படுகின்றனர். திருவள்ளுவர் தென்புலத்தாரை முதன்மைப்படுத்துவதால் தென்புலத்தார் வழிபாட்டிற்குத் தமிழ் மக்கள் கொடுத்து வந்த முக்கியத்துவம் புலப்படுகிறது.

தந்தை தாயாரைச் சிரத்தையுடன் சிந்தித்து அவர்கள் நற்கதியடைய வேண்டுமென்று சிரத்தையுடன் அவர்களைக் குறித்து அவர்கள் இறந்தபின் குறித்த கால வேளைகளில் புத்திரர்களால் சிரத்தையோடு செய்யப்படுகின்ற பிதிர் கருமங்கள் தானதருமங்கள் என்பன சிரார்த்தம் எனப்படும் சிரத்தையோடு செய்யப்படுவது சிரார்த்தம். அப்பொழுதுதான் பலன் உண்டு. சிரத்தையின்றி ஊர் ஒப்புதலுக்காக அல்லது மனத்தை வேறு இடங்களில் அலைய விட்டுச் செய்யப்படுவது சிரார்த்தம் ஆகாது. ஆண்டு தோறும் இறந்த மாதமும் திதியும் சேர்ந்த நன்நாளில் சிரார்த்தம் செய்யப்படவேண்டும். திவசம் திதி என்றும் சிரார்த்தம் அழைக்கப்படுகிறது. இத்தினத்தில் இறந்த தந்தை தாயாரை நினைந்து சிரத்தையோடு ஓமாதிகள் செய்தும் பிண்ட தானம் தர்ப்பணம் ஆகியவற்றைச் செய்தும் வழிபட்டு சற்பாத்திரப் பிராமணர்களுக்குப் போசனம் முதலிய தானங்களைக் கொடுப்பது சிரார்த்தம் ஆகும். இத்தினத்தில் வறியவர்கள் சுற்றத்தவர்கள் ஆதரவற்றவர்களுக்கு அன்னம், வஸ்திரம் முதலிய பொருள்களை அவரவர் இயல்புக்கேற்ப வழங்கும் வழக்கமும் இருந்து வருகிறது. சிரார்த்தம் தன்னுடைய வீட்டிலோ திருக்கோயிலிலோ தீர்த்தக் கரையிலோ செய்யலாம். செய்யப்படும் இடம் கோமியத்தினால் மெழுகிச் சுத்தம் செய்யப்படல் வேண்டும்.

சிரார்த்தமானது நித்திய சிரார்த்தம் முதலாகப் பலவகையாக உள்ளது. சிராத்த வகை தொண்ணூற்றாறு ஆகும். இத்தினங்களில் பிதிர்களுக்குச் சிரார்த்த தருப்பணங்கள் செய்தல் முறையாகும். புண்ணிய காலங்களிலே பிதிர்களைக் குறித்துத் தருப்பணம் முதலியன செய்யப்படுவதால் அவை திருப்தியும் நற்கதியும் அடைகின்றன. நம்மையும் காத்தருளுகின்றன.

இவையனைத்தையும் செய்யமுடியாவிட்டாலும் தந்தை தாயார் இறந்த மாதமும் திதியும் ஆண்டுதோறும் வரும் தினத்திலாவது சிரார்த்தம் செய்வது நன்று. நைமித்திய சிரார்த்தம் என்றும் ஆண்டுத்திவசம் அல்லது ஆண்டுத்திதி என்றும் இதனைக் கூறுவர். தாய் தந்தை என்போர் இறந்த மாதம் பட்சம் திதி ஆகியவை தெரிந்திராத நிலையில் தாயாருக்கு சித்திரை மாதத்துப்பூரணையிலும் தந்தைக்கு ஆடி அமாவாசை அன்றும் சிரார்த்தம் செய்யும் வழக்கம் உள்ளது. மேலும் எந்த வம்சத்தில் பிறந்தோமோ அந்த வம்சத்தைச் சேர்ந்த எல்லாப் பிதுர்களும் இச்சிரார்த்தம் மூலம் பிரீதி செய்யப்படுகின்றன. வம்சம் தழைக்க மக்கட்பேறு வேண்டுமென்பது இங்கு கவனிக்கற்பாலது. சந்ததியைத் தொடரவைக்கப் பிள்ளைகள் இல்லாதவிடத்து சிரார்த்தம் செய்ய உரித்தாளர் இல்லாமல் போய்விடுவர். அதனால் தாய் தந்தைக்கு மட்டுமல்ல அவர்களுக்கு முந்திய பிதுர்களுக்கும் பிரீதி செய்யமுடியாத ஏற்பட்டு விடுகின்றது. இவ்வாறு இருக்க சந்ததியில் பிள்ளைகள் இருக்கும்போது தந்தை தாயாருக்கு திவசம் செய்யாது விடுதல் எத்துணை பிழையானது என்பது உயத்துணர்தற்பாலது.

பிதுரர் குறித்து சிரார்த்தம் தர்ப்பணம் செய்யக் கூடிய புத்திரனையுடையவனே சுவர்க்கத்தை அடைவான் என்று மத்தியந்த முனிவர் தமது புத்திரராகிய வியாக்கிரபாத முனிவருக்குக் கூறியதாக உமாபதி சிவாச்சாரியர் கோயிற்புராணத்தில் குறிப்பிட்டுள்ளார். "புத்" என்ற பெரு நரகத்திலிருந்து தந்தை தாயார் பிதுர்கள் ஆண் காப்பாற்றுபவன் என்பதினால் புத்திரன் என்று மகன் அழைக்கப்படுகிறான். சிரார்த்தம் செய்வதன் மூலம் இது சாத்தியமாகின்றது. ஈமக் கடன் நீர்க்கடன் பிதுர்கடன் என்பன செய்தே தீர வேண்டிய கருமங்கள் என்பதால் கடன் என்று கூறப்படுகின்றன. இவை தட்டிக்கழிக்கக் கூடியவையல்ல திருவள்ளுவப் பெருந்தகையும்

"எழுப்பிறப்பும் தீயவை தீண்டா பழிபிறங்காப்
பண்புடை மக்கட் பெறின்" என்கிறார்.

எனவே பிதுர்களுக்கு சிரார்த்தம் செய்பவர்கள் இம்மையில் பூரண ஆயுளையும் சகல சம்பத்துக்களையும் நற்சுகத்தையும் நன்மக்கட் பேற்றையும் தெய்வ அனுக்கிரகத்தையும் அடைவார்கள். எண்ணியவை எண்ணியாங்கு எய்தப்பெறுவர். பிதுர்கள் காவல் தெய்வங்கள். அகால மரணங்கள் விபத்துக்கள் வறுமை கொடிய நோய்கள் என்பன அணுகாமல் எம்மைச் சதாநேரமும் காவல் காத்துவருபவை. தென்புலத் தெய்வங்கள் மேலும் பெற்றோர் பிள்ளைகள் பாசம் பிணைப்பு என்பன ஏற்படவும் காலமான பெற்றோர்களுக்கு அன்புக்காணிக்கையைச் செலுத்தவும் இத்தகைய பிதுர் வழிபாடு உதவுகின்றது. இதனைப் பார்த்துக் கொண்டிருக்கும் பிள்ளைகளும் தாமும் தம் பெற்றோர்களுக்கு இவ்வாறு வழிபாடுகளை ஒரு காலத்தில் செய்ய வேண்டும் என்ற உணர்வை பெறுகின்றனர்.

பிதுர்களுக்கு ஒரு நாள் எம்முடைய ஒரு வருட காலத்திற்குச் சமமானது. சிரார்த்தம் செய்வதன் மூலம் அவர்களுக்குத் தினம் உணவு கொடுப்பது போன்று ஆகிவிடுகின்றது. எள்ளும் தண்ணீரும் இறைத்தல் தர்ப்பணம் செய்தல் மூலம் பிதுர்களுக்கு தாகம் தணிக்க தண்ணீர் வழங்குவது போன்று ஆகிவிடுகின்றது.

**மஹாளய சிரார்த்தம்**

மாளய சிரார்த்தம் பிதுர்களின் பொருட்டுச் செய்யப்படவேண்டியது. புரட்டாதி மாதத்துக் கிருஷ்ண பக்கப் பிரதமைத் திதியிலிருந்து அமாவாசை வரை உள்ள தினங்கள் மகாளய தினங்கள் எனப்படுகின்றன. இத்தினங்களில் பிதுர் தேவதைகள் தென்புலத்திலிருந்து பெயர்ந்து வந்து தத்தம் குடும்பத்தினருடன் தங்குவதாக நம்பிக்கை இருந்து வருகின்றது. மகா + லயம் என்பது எல்லாப் பிதுர்களும் ஒன்று கூடுதல் என்ற பொருள் ஆகும். எனவே மாளய சிரார்த்தம் சிறப்பாகக் கொள்ளப்படுகிறது. ஆண்டுத் திதியில் சிரார்த்தம் செய்யாதவர்கள் கூட மாளய சிரார்த்தத்தை விடாது செய்வதைப் பார்க்கின்றோம். மாளய சிரார்த்தம் பிதிர்களுக்கு இரவு போசனம் கொடுப்பது போன்று அமைகின்றது.

பண்டைய தமிழ் மக்கள் இறந்தவர்களைப் பெரிய தாழியில் வைத்து நிலத்தின்கீழ் புதைத்துவிடுவர். இங்கு இறந்தவர்களின் ஆவி நிலைபெற்று விடுகிறது என்ற நம்பிக்கையில் ஆவி வழிபாடு செய்தனர். திதி, சிரார்த்தத்தின் தொடக்க நிலையை இங்கு காண்கிறோம்.குண்டுக் கற்களை அவற்றிற்கு எவ்வித உறுப்புக்களும் கற்பிக்காது, தெய்வமாக வழிபட்டனர் எனக் கூறப்படுகிறது. குண்டுக் கல் வழிபாடு இருந்த காலத்தில், பிண்டத்தைச் சமாதியில் வைத்து வழிபாடு செய்தனர். இதனைப் பிண்ட தானம் என்னும் கிரியையுடன் ஒப்பிட்டுப் பார்க்கலாம்.

சைவ நெறிப்படி இல்வாழ்வான் என்பான் ஐந்து பெரும் வேள்விகளைச் செய்ய வேண்டியுள்ளது. பஞ்சமகா யக்ஞம் என நூல்கள் கூறுகின்றன. பிரம்ம யக்ஞம், தேவ யக்ஞம், பிதிர் யக்ஞம், பூதயக்ஞம், மனித யக்ஞம் என்பனவே இவ்வைந்தும் ஆகும். பிரம்ம யக்ஞம் என்பது வேதமோதுதல். இதன்மூலம் முனிவர்கள் மகிழ்கின்றனர். தேவ யக்ஞம் என்பது அக்கினி வளர்த்து ஓமஞ் செய்தல் இதனால் தேவர்கள் திருப்தியடைகின்றனர். பிதிர் யக்ஞம் என்பது பிதிர்சிரார்த்தம், தருப்பணம் ஆகியவற்றைக் குறிக்கின்றது. இதனால் பிதிர்கள் திருப்தியாகின்றனர். பூதயக்ஞம் மூலம் பசு, காக்கை முதலியவைகளுக்கு உணவளித்தல். மனித யக்ஞம் என்பது விருந்தினர், சுற்றத்தார், ஏழைகள், துறவிகள் என்போர்க்கு உணவளித்து உபசரித்தல். இவற்றுள் தென்புலத்தார் வழிபாடு ஆக பிதிர்யக்ஞம் பழந்தமிழ் மக்களால் கொள்ளப்பட்டது என்பது திருக்குறள், கந்தபுராணம், திருவிளையாடற்புராணம் முதலிய நூல்களிலிருந்து அறியமுடிகிறது. இறந்தோர்க்கு நடுகல் நட்டு வழிபடுதல் பண்டைத்தமிழர் முறை. இம்முறை இன்றும் கருமாதியிற் காணப்படுகிறது. எள்ளின் பிறப்பிடம் தமிழ்நாடு. எள்ளும் தண்ணீரும் பிதுர் வழிபாட்டில் பயன்படுத்துவதும் பிண்டதானம் செய்வதும் பழங்காலத்திலிருந்து நடைமுறையில் இருந்து வருகிறது.

தெய்வ வழிபாட்டைப் பக்தியுடனும்,பிதுர் வழிபாட்டைச் சிரத்தையுடனும் செய்து வரவேண்டும் என்று கூறுவர். எனினும் இரண்டிற்குமே பக்தி சிரத்தை இரண்டும் தேவை என்பதை மறுப்பதற்கில்லை. சிரார்த்தம் முதலிய பிதுர்க்காரியங்களை நாங்கள் செய்வது பிதுர்களைத் திருப்திப்படுத்துவதோடு, அவர்களின் நற்கதிக்கு வழிசெய்வதுடன், நம்முடைய நன்மைக்கும் மனத்திருப்திக்காகவும் தான் என்பதை மனதில் நிறுத்திப் பிதுர்க் கடன்கள் நிறைவேற்றி உய்வு பெற்று வாழ்வோமாக.!

# WAY OF LIFE BY DOING KIRIYAI

**The role of Kiriyai**

**Worship of Vinayaga Guru**

That which is the original matter is called Pranavam. And the one that heads is the Shiva Sakthi called Vinayagar. The meaning of Vinayagar is :

vi – without
nayagar – one above

There is nothing or no one above the leader Vinayagar. Therefore the first Kiriyai is worship of Vinayagar. For a deed to be done successfully it is necessary to worship God Vinayagar the Guru the head of all religious activities, and God Shiva manifests himself in a Guru, devotees will worship the Guru too. The meaning of Guru:-

Gu – impurities
ru – removes

A make do Pillaiyar could be done using Sandal wood paste, turmeric paste or fresh cowdung and keeping a few Arugampul (a grass of the cynadon sp.) on the top and worshipped.

**Wearing the thatpai** (holy grass)

Make a ring out of the holy grass thatpai and wear it on the ring finger. The reason for wearing the thatpai ring is to be protected from the sins caused by thoughts that may cross the mind while the Kiriyai is going on.

**Sangatpam** (resolution or a solemn vow)


A brief explanation is – at such a time, at such a place as such an aim I will perform a Kiriyai and concentrate on it. From this could be realized the pride of an era gone by and the deterioration of the present times and the spiritual enhancement.

**Way to carry out the solemn vow**

Keep the holy grass, a flower, turmeric, and rice on the right hand and keep it above the left hand and press the left hand thumb with the right thumb and place the hand on the right knee, in a seated position.

**The meaning of the Sangatpa statement**

It is God Shiva's decree that Brahma would perform. His function. According to this decree, during a certain era, the first part of Kali Yuga (Iron age) in the sub continent of Bharath, South of the mountain Mehru, out of the sixty Hindu years at a particular year, at a certain place at



a particular season, at a particular month, at a particular star galaxy, and week and day at a particular beneficial hour I am going to perform this Kiriyai.

**Placing a Kumbam** (pot)

Worship the Kumbam as God Himself. The Kumbam is considered as the body. A plantain leaf with its tip facing north or east is placed. On it some paddy or raw rice is put. The pot filled with water is placed on it. Five, seven or nine mango leaves are kept in it, with an upturned coconut on it. A thread is wrapped round and round the pot, and it is covered with a silk cloth.

The coconut is the crown of the head, the pot is the flesh, the mango leaves are the matted hair, the thread is the blood vessel, the silk cloth is the skin and the water is the blood. If some precious stones are put in side they are considered as the bones.


**Certain customs in daily Kiriyai**


Mango leaf - this is held as an auspicious object and is also used for decoration. Mango leaves are used as symbols of auspiciousness in temples, festivals and marriages.

When a Kumbam is placed at the functions the mango leaves are consider as the matted hair. To use the leaves in decoration three methods are adapted.

For auspicious functions and during temple festivals.


1) Wedding halls. During happy occasions at home bend the leaf stalk forward and pierce it through the ventral side of the leaf and hang up the leaves. This should appear as though the leaves are receiving guests with bowed heads. Five or seven leaves could be used.






2) In the Kumbam the leaves kept under the coconut should be about five, seven or nine.

3) For inauspicious occasions During funerals at home the leaf stalk should be bent backwards to pierces the leaf on the dorsal side and hung up. This denotes the sad event.



### The banana plants


These should be uprooted and tied at the entrance of temples and houses where there are auspicious happenings. The plant is of much value and worth to man. Food is served on these leaves. Its sheaths, fruit ripe and unripe and the spadix are food to man. The fiber is used to string flower gardens. People also must be like the plantain and be of use to others. It cannot be destroyed because it is symbol of unbroken lineage. That is why it is tied at the entrance. If the bunch of fruits are ripe and yellow it is most auspicious. During funerals the ash plantain is chosen. It denotes sorrow. The leaf is used in the following way.



For a Kumbam, the tip of the leaf should face east or north. When eating the tip should be on the left hand side. For sorrowful occasions the tip should face the south.

### Decoration (Thoranam)

These are made with tender coconut leaves. The tip should face downwards for auspicious occasions, and the reverse for inauspicious occasions. Care should be taken when cutting the leaves to suit the occasion.



Auspicious occasions Inuspicious occasions

# DAILY WORSHIP AND PRAYERS

We who worship God Shiva are Saivaites. Shiva is our foremost God. Vinayagar, Subramaniar, Vairavar, Veerpathrar, Goddess Uma and certain aspects of Shiva are also worshipped by Saivaites. By worshipping different aspects of Shiva one actually sees them as Shiva Himself and worship.

Saivaites have their own life style, Saivaites have their own qualities, Saivaites have their own form. On seeing one, it could be concluded as Saivaites. To such an extent does the life of look of Saivaites impress a person. All one's activities evolve round Saivaite way of living.

To complete the morning ablutions, cleaning the house environs, keeping oneself clean get involved in Poojah and worship, getting provisions, preserving and eating early habits living within one's means all point to the fact that all one's activities are based on Saivaites way of living.
Saint Sekilar's Periyapuranam which sheds light on the life-history of realised saints make us understand Saivaite qualities and way of life easily. Their life teaches us the Saiva way of life: when getting up in the morning utter "Shiva, Shiva" or "Muruga" these should happen automatically but everything to God Almighty.

### Saiva Custom

A lot is said about Saiva custom, what does it mean? In our daily life we follow moral conducts, cleanliness, orderliness, purity and so on. All these put together is Saivaism. The lives of the realized saints of Saivaism are an example of Saivaite life. Their lives were of high moral standards, orderly, pure, clean and also regular. By praising all these, we can also be of good manners and morals. In short we can be followers of good Saivaite customs. Our forefathers knew nothing about the computer or modern technology, but in following the Saivaite way of life, they tower above their fellow men. They lived as Saivaites; hence their lives were of a high standard and quality.

### Daily Worship

Daily worship of God generally means going to the temple and worshipping idols. This is what everybody thinks. Next, whenever we start a duty or event, prayers are performed. Could this mean daily worship? There is confusion. If daily prayers means going to the temple then should worshipping at home be stopped?

So, daily prayers include both going to the temple and praying and also performing prayers at home. Between these two, daily worship at home is something that can happen always. So, a detail explanation regard this is necessary.

### Daily Worship at home

All events that take place in the home are begun with prayer. These also should be included in the prayers at home. On getting up in the morning we utter "Shiva, Shiva" or "Muruga". Then itself without our knowledge worship begins. Next put Vibuthi on the forehead is what Srila Sri Arumuga navalar has instructed. In the text a catechism on Saivism Navalar has mentioned the number of times Vibuthi must be put. "Before going to sleep, on getting up, after cleaning the teeth, at

sunrise and at sunset, after a bath, before betaking of a meal and after a meal Vibuthi must be put on the forehead" is what Navalar says. All these are included in daily worship. This is followed by chanting "Thevaram". There is thought of Shiva even when performing morning ablutions. While bathing say Shiva, Shiva and bathe. When pouring water on the head too the mind must be directed towards God Shiva. When drying the hair too think of God Shiva or chant a Thevaram . This need not be sung aloud but to one's own hearing is good enough. The idea is to concentrate on God Shiva.

Before bathing clean the house and clean the environment then mix cowdung in water and sprinkle it all over the compound. If it cannot be done daily then sprinkle water in which turmeric powder is dissolved. In an urban area the court yard may be cemented hence it can be washed.

Draw a kolam in front of the house. If the floor is sandy smear the area with cowdung and then put the kolam. There is no harm in drawing the kolam daily. If due to pressure of work kolam cannot be drawn, do so on special occasions – like on New Year Day, on Thaipongal Day, in the month of December, Navarathri, Wedding Day, engagement Day, on Gold melting Day (Ponnuruku) Age attaining Day, on the 31st Day of death, on Death Anniversary, on Avani Sathurthi (the fourth day after new moon in the tamil month of August), Thaipoosam and Sivarathri are the special Days when a kolam must be drawn. The kolam must indicate the special function in the house. These events create sentiments and thoughts of Shiva. The kolam must be put with white rice flour. Now-a-days people think of making a decoration and use coloured materials to put a kolam. But these interrupt thought of Shiva. Hence this must be avoided. It must be kept in mind a kolam need not be put on an inauspicious occasion (like a funeral).

After this only should one bathe. The place where worship takes place is considered a sacred area. Therefore light a lamp at that place and make the offerings and say the prayers. While making the offerings one need not worry about things missing. Keep a book of "Thirumuraihal", a book of sacred songs "Thevarams" and worship. If the sacred book is not available use a book of "Thiruvasagam". Even if that is not available keep a book, in which there are sacred songs like a book in memory of a dead person. (Kalvettu) and worship. Keeping in mind the duties to be done further and without causing any ill effects worship could be performed. Following this with thought of God, part-taking of meals does not take place. One could also go to the temple at that time. This may not be possible for everybody. We have observed that many saivaites when part-taking of a meal sprinkle water on the food, and put aside a little of the food and worship.

After sunset light the lamp and worship. When all these duties have been done, retire to bed with thoughts of God Shiva. While in bed go through in the mind the religious songs. If all could not remember at least a few could be recalled. If that is not possible chant at least a few songs you remember. When we sleep we have no clue as to what would happen later. So go to sleep in a state of complete surrender to God.

### Daily worship at place of work

Whether students or adults before writing anything put on top the sign உ and below write Sivamayam and proceed to write. To those who are writers this is a form of daily worship. Those who drive a vehicle, think of God and worship and then start to drive. This is also a prayer at work place.

The one who sells his goods in a market does with thought of God Shiva and set aside a little money as dedication to God before starting the trade. Daily the shop keeper lights a lamp and worships God before he starts his business.
Those who make short eats offer the ones baked first to God and proceed with their business. This could be daily observed in those workers who have no education. Whoever it is this type of workers set a aside a certain amount to God Shiva and continue to work. This happens daily in their work site. Officers who seated at their desks go through the files and sign them, also think of God Shiva and start their duty. This is a form of daily worship in their place of work. In some officers they have pictures of Hindu deities and worship them with lighted camphor and then start work.

In schools only after chanting of Thirumuraihal (religious songs) they start learning. Those who do carpentry, the black smiths, and the sculptors keep their instruments at the shrine in their work place and pray and then only start working. Thus thinking of God daily becomes a continuous process. Daily worship means thought of God every day and at all times.

### Daily Worship at a temple

It is not possible for everyone to go the temple and worship daily. Those who leave for work early morning and return late at night could only stand at the entrance to the temple and worship. Those who are unclean, like those returning after a funeral should not even stand at the entrance to the temple. It is taboo. Those elderly people who have retired can go to the temple and perform daily prayers. They should follow Navalar's code of ethics in worshipping at the Shiva Temple.

*Courtesy : "The Comependium For Hindus' - All Ceylon Hindu Congress*



**மனிதநேய மாமனிதர் அமரர் வி. கயிலாசபிள்ளை அவர்களின் ஞாபகார்த்தமாக 26.03.2017 அன்று மு/திருமுறிகண்டி இந்து வித்தியாலயம், மு/கற்சிலைமடு அ.த.க பாடசாலைகளிலிருந்து சிவதொண்டர் அணியைச் சேர்ந்த தலா பத்து மாணவர்களுக்கு கல்விக்கான புலமைப்பரிசிலாக தவணைக்கு ரூபா 3000 வழங்கப்பட்டது.**



# போட்டி முடிவுகள் - 2016

அகில இலங்கை இந்து மாமன்றம் கடந்த 2016 தீபாவளி திருநாளை முன்னிட்டு அகில் இலங்கை ரீதியில் நடாத்திய மது மற்றும் போதைப்பொருள் ஒழிப்பு என்னும் தொனிப்பொருளிலான கட்டுரை, கவிதை, சித்திரப் போட்டிகளின் முடிவுகள் இங்கே தரப்படுகின்றன.

## கட்டுரைப் போட்டியின் முடிவுகள்

### கீழ்ப்பிரிவு

**முதலாம் இடம்** - மீனாசுந்தரம் அபிஷேக் (தரம் : 8C - D.S. சேனனாயக்க கல்லூரி, கொழும்பு – 7, (தமிழ்ப்பிரிவு))

**இரண்டாம் இடம்** - T. சதுநிஷா (தரம் : 8C - CP/HZ/. கவரவில த.ம.வி. சாமிமலை.)

**மூன்றாம் இடம்** - சு. லோசனா (தரம் : 8B - யா/உடுப்பிட்டி மகளிர் கல்லூரி.)

**ஆறுதல் பரிசுகள் :**

1. G.கிஷோபிகா (தரம் 8B - மாத்தளை பாக்கியம் தேசிய பாடசாலை)
2. ரக்ஷித்தா யுரெக்ஷினி சிவானந்தன் (ஹைலாண்ட்ஸ் கல்லூரி - ஹட்டன்)
3. சிவராசா தனுஷ்வினி (தரம் 7B - மே.மா/ஹோம.சீ.சீ.தமிழ் மகா வித்தியாலயம், புவக்பிட்டிய)

### மத்தியபிரிவு

**முதலாம் இடம்** - ரூபவதனா துரைராசா (தரம் : 11 - யா/ யாழ்ப்பாணக் கல்லூரி)

**இரண்டாம் இடம்** - லோகநாயகம் கம்சி (தரம் : 11 - மட்/ வின்சன்ற் மகளிர் உயர்தர பாடசாலை.)

**மூன்றாம் இடம்** - சிவபாலு வேணுஜா (தரம் : 11 - யா/ மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை.).

**ஆறுதல் பரிசுகள் :**

1. கல்யாணகுமார் சௌமியா (மாத்தளை பாக்கியம் தேசிய பாடசாலை)
2. எஸ்.துஷாந்தினி (மாத்தளை பாக்கியம் தேசிய பாடசாலை)
3. ஜி.சுவர்ணப்பிரியா (தரம் 10B - கவரவில தமிழ் மகாவித்தியாலயம்).

### மேற்பிரிவு

**முதலாம் இடம்** - A. சர்ணியா (தரம் : 12 - வ/ ஓமந்தை மத்திய கல்லூரி)

**இரண்டாம் இடம்** - ரோசானி சிங்கராசா (தரம் : 13 - வ/ வவுனியா தமிழ் மகா வித்தியாலயம்)

**மூன்றாம் இடம்** - ஞானசேகரன் ஜனனி (தரம் : 13 - கமு/ சது/ ஸ்ரீ/ கோரக்கர் தமிழ் மகா வித்தியாலயம், சம்மாந்துறை.).

**ஆறுதல் பரிசுகள் :**

1. எஸ்.குகன்யா (இ/இந்துக் கல்லூரி, எல்லாரவ, பலாங்கொடை)
2. ரா.பிரபாசினி (பது/பசறை தமிழ் மகா வித்தியாலயம் தேசிய பாடசாலை, பசறை)
3. மா.உமாதேவி (பது/பசறை தமிழ் மகா வித்தியாலயம் தேசிய பாடசாலை, பசறை).

## கவிதைப் போட்டியின் முடிவுகள்

**கீழ்ப்பிரிவு:**

**முதலாம் இடம்** - தீபிகா மகேந்திரன் (தரம் : 7 - யா/ வேம்படி மகளிர் உயர்தரப்பாடசாலை) .

**இரண்டாம் இடம்** - சித்திரவேல் நதீஷா (தரம் : 8 - மா/ பாக்கியம் தேசிய கல்லூரி – மாத்தளை)

**மூன்றாம் இடம்** - கயாநிதி கற்கண்டு (தரம் : 8 - யா/புற்றளை மகா வித்தியாலயம்).

**ஆறுதல் பரிசுகள் :**

1. ரி. விலாசினி (தரம் 8 - மாத்தளை பாக்கியம் தேசிய பாடசாலை)
2. கலாறஞ்சன் ஜனனி (யாழ் நடேஸ்வராக் கல்லூரி)
3. றோகன்ராஜ் கிருஷ்ணா (மாத்தளை பாக்கியம் தேசிய பாடசாலை)

**மத்தியபிரிவு:**

**முதலாம் இடம்** - நா.விஜித்தா (தரம் : 10 - யா/ மூளாய் சைவப்பிரகாச வித்தியாசாலை – சுழிபுரம்)

**இரண்டாம் இடம்** - மகேசன் விஜித்தா (தரம் : 9 - யா/புற்றளை மகா வித்தியாலயம்)

**மூன்றாம் இடம்** - சுமேதா மணிவண்ணன் (தரம் : 9 - மட்/ வின்சென்ற் மகளிர் உயர்தரப் பாடசாலை).

**ஆறுதல் பரிசுகள் :**

1. பா.சங்கீத்தா (தரம் : 9 - யாழ். கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலயம் - நீர்வேலி)
2. கே.கலைவாணி (தரம் : 9 - மமா/ ஹவ/ கவரவில தமிழ் மகா வித்தியாலயம்)
3. க.பரிந்திகா (தரம் 9 - மு/ முல்லைத்தீவு றோ.க.த.க.பாடசாலை).

**மேற்பிரிவு :**

**முதலாம் இடம்** - தர்ஷாயினி ஜெகதாஸ் (தரம் : 13 - யா/ வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி)

**இரண்டாம் இடம்** - செ.சேதுசன் (தரம் : 12 - வ/ புதுக்குளம் மகா வித்தியாலயம் - வவுனியா.)

**மூன்றாம் இடம்** - விஸ்ணுகா விக்னேஸ்வரன் (தரம் : 13 - யா/ இணுவில் மத்திய கல்லூரி)

**ஆறுதல் பரிசுகள் :**

1. நாகேந்திரராஜா தக்ஷாலினி (தரம் 12 - மாத்/ பாக்கியம் தேசிய கல்லூரி – மாத்தளை)
2. ராஜேந்திரன் சிவதர்ஷிகா (தரம் 13 - மாத்/ பாக்கியம் தேசிய கல்லூரி – மாத்தளை)
3. துரைசிங்கம் சுபாசினி (தரம் உயர்தரம் - யா/இராமநாதன் கல்லூரி).

## சித்திரப் போட்டியின் முடிவுகள்

**கீழ்ப்பிரிவு**

**முதலாம் இடம்** - பெயர் : பி.மோகனாம்பாள் (தரம் : 8 – இரத்தோட்டை இந்து மகாவித்தியாலயம்)

**இரண்டாம் இடம்** - பெயர் : என். தர்சன் (தரம் : 8 - யா/கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலயம்)

**மூன்றாம் இடம்** - பெயர் : வி.தர்மிகன் (தரம் : 8 - பாடசாலை : மன்/தட்சனாமருதமடு மகா வித்தியாலயம்)

**ஆறுதல் பரிசுகள்**

1. சந்திரகுமார் ரம்யா (தரம் : 8 - மாத்/பாக்கியம் தேசிய பாடசாலை)
2. துலக்சினி கோகிலன் (தரம் : 7 - யா/ வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை)
3. பா.அபிஷானி (தரம் : 7 - மாத்/பாக்கியம் தேசிய பாடசாலை)

**மத்தியபிரிவு**

**முதலாம் இடம்** - பெயர் : தங்கையா திலக்சன் (தரம் : 10 - யா/ மயிலணி சைவ மகாவித்தியாலயம்)

**இரண்டாம் இடம்** - பெயர் : ராஜ்குமார் கஸ்தூரி (தரம் : 10 - யா/ வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை)

**மூன்றாம் இடம்** - பெயர் : சண்முகநாதன் சரண்ராஜ் (தரம் : 10 - யா/ கற்கோவளம் த.ம.மி.த.க பாடசாலை)

**ஆறுதல் பரிசுகள்**

1. வே.கவினுஜன் (தரம் : 10 - கவரவில தமிழ் மகா வித்தியாலயம் - சாமிமலை)
2. தி.தனுஜா (யா. வடமராட்சி இந்து மகளிர் பாடசாலை)
3. ஜெ.சரணியா (தரம் : 10B - கவரவில தமிழ் மகா வித்தியாலயம் - சாமிமலை)

**மேற்பிரிவு**

**முதலாம் இடம்** - பெயர் : அ.குகவேதனன் (தரம் : உயர்தரம் - யா/ அராலி சரஸ்வதி மகா வித்தியாலயம்)

**இரண்டாம் இடம்** - பெயர் : சி.பிரபானுயா (தரம் : உயர்தரம் - யா/ இராமநாதன் கல்லூரி)

**மூன்றாம் இடம்** - பெயர் : பி.கஜானி (தரம் : உயர்தரம் - யா/ மானிப்பாய் இந்துக் கல்லூரி)

**ஆறுதல் பரிசுகள்**

1. ஸ்ரீகாந்தன் நிவேதன் (தரம் : 12 - யா/இணுவில் மத்திய கல்லூரி)
2. ஆர். ராகுலன் (தரம் : 12 - யா/ மானிப்பாய் இந்துக் கல்லூரி)
3. பிரியதர்ஷினி (தரம் : 12 - யா/ இராமநாதன் கல்லூரி)

தமது முழுத்திறனையும் வெளிக்கொணர்ந்து தங்கள் ஆக்கங்களை மிக விருப்புடன் அனுப்பிவைத்து இப்போட்டிகளில் கலந்து கொண்ட மாணவர்களுக்கும், அவர்களுக்கு உறுதுணையாக இருந்த ஆசிரியர்கள் அதிபர் மற்றும் ஏனையோருக்கும் மாமன்றம் தனது வாழ்த்துக்களையும் பாராட்டுதல்களையும் தெரிவிப்பதுடன் அவர்கள் மேலும் சகல செல்வங்களும் பெற்றுவாழ சிவகாமி அம்பாள் சமேத ஸ்ரீ நடராஜப்பெருமான் பாதாரவிந்தங்களைப் பணிந்து வணங்குகின்றோம்.

கந்தையா நீலகண்டன்
தலைவர்

வே.கந்தசாமி
பொதுச் செயலாளர

# மாதங்களின் சிறப்புகள்

## சித்திரை, வைகாசி

முதன்முதலில் ஆண்டுகள், மாதங்களை கண்டறிந்தவர்கள் மெசபடோமியர்கள் என்பது ஆங்கில மாதங்களை பயன் படுத்துவோரின் கருத்தாகும். ஆனால் உண்மை என்னவெனில் நமது தமிழர்களைப் பொறுத்தவரை மிகவும் பழங்காலத்திலிருந்தே மாதங்களைப் பயன் படுத்தி வருகின்றனர் என்பதைச் சங்க இலக்கியங்கள் மூலம் அறியலாம்.

தமிழ் மாதங்கள் மொத்தம் பன்னிரெண்டு ஆகும். அவையாவன சித்திரை, வைகாசி, ஆனி, ஆடி, ஆவணி, புரட்டாதி, ஐப்பசி, கார்த்திகை, மார்கழி, தை, மாசி, பங்குனி என்பனவாகும். பண்டைய தமிழர்கள் இரண்டு வகையாக மாதங்களைக் குறித்து வந்துள்ளார்கள், பூமிக்குச் சார்பாக சூரியனின் இயக்கத்தை வைத்தும், பூமிக்கு சார்பாக சந்திரனின் இயக்கத்தை வைத்தும் மாதங்களைக் கணக்கிட்டார்கள். அவையாவன சூரிய மாதம் என்றும் சந்திர மாதம் என்றும் வழங்கப்படுகிறது.

**சூரியமாதம் :**

சூரியமாதங்கள் பூமிக்குச் சார்பாகச் சூரியனுடைய இயக்கத்தை அடிப்படையாகக் கொண்டே வகுக்கப்பட்டுள்ளன பூமியிலிருந்து பார்க்கும் போது பூமியைச் சுற்றி வருவது போல் தோன்றும் சூரியன் அவ்வாறு ஒருமுறை சுற்ற எடுக்கும் காலம் ஒரு ஆண்டாகும். அவையாவன

| சூரியமாதப்பெயர் | சூரியமாதத்தமிழ்ப் பெயர் |
|---|---|
| 1. மேஷம் | மேலம் |
| 2. விடை | விடை |
| 3. மிதுனம் | ஆடவை |
| 4. கர்க்கடகம் | கடகம் |
| 5. சிம்மம் | மடங்கல் |
| 6. கன்னி | கன்னி |
| 7. துலாம் | துலை |
| 8. விருச்சிகம் | நளி |
| 9. தனுசு | சிலை |
| 10. மகரம் | சுறவம் |
| 11. கும்பம் | கும்பம் |
| 12. மீனம் | மீனம் |

**சந்திரமாதம் :**

ஒரு சூரிய மாதத்தில் சந்திரன் பூரணை (பௌர்ணமி) அடையும் நாள் எந்த நட்சத்திரத்தில் வருகிறதோ அந்நட்சத்திரத்தின் பெயரே சந்திரமாதப் பெயராகக் கொள்ளப்பட்டது. உதாரணமாக, சூரியன் மேட இராசியில் பயணம் செய்யும்போது சந்திரன் பூரணை அடையும் நாளில் சித்திரை நட்சத்திரம் வரும் என்பதால் சூரியமாதமான மேஷ மாதத்திற்கு உரிய சந்திரமாதம் சித்திரையாகும்.

நாம் சந்திர மதங்களின் பெயர்களிலேயே மாதங்களை கடைபிடிக்கிறோம், அவையாவன நாம் நன்கு அறிந்த

1. சித்திரை
2. வைகாசி
3. ஆனி
4. ஆடி
5. ஆவணி
6. புரட்டாதி
7. ஐப்பசி,
8. கார்த்திகை
9. மார்கழி
10. தை
11. மாசி
12. பங்குனி.

ஆகியவையாகும்.

ஒரு காலகட்டத்தில் நமது தமிழகத்தின் ஒருபகுதியாக இருந்த தற்போதைய அண்டைமாநிலமான கேரளாவில் சூரியமாதப் பெயர்களே பயன்படுத்தப்படுகிறது.

இனி நாம் மாதங்களில் சித்திரை மற்றும் வைகாசி ஆகியவற்றின் சிறப்புக்கள் சிலவற்றைப் பார்ப்போம்..

**சித்திரை:**

இராசிச் சக்கரத்தில் மேடராசியில் சூரியன் நுழைவதி லிருந்து அந்த இராசியைவிட்டுவெளியேறும் வரையில் உள்ளகாலம் சித்திரை மாதமாகும். சித்திரைமாதம் 31 நாட்களைக் கொண்டது. ஆங்கில நாட்காட்டியில் ஏப்ரல் மாதம் 14 ஆம் நாள் முதல் மேமாதம் 14 ஆம் நாள் வரை தமிழ் சித்திரை மாதமாகும் .

சூரியன் மேட இராசிக்குள் நுழைவது சித்திரை மாதப் பிறப்பு ஆகும். அத்துடன் சித்திரை முதல் மாதம் என்பதால் இதுவே புதிய ஆண்டின் தொடக்கமும் ஆகும். இதனால் சித்திரை மாதம் முதல் நாளைத் தமிழர்கள் புத்தாண்டாகக் கொண்டாடுவர்.

மேலும் இந்த மாதத்தில் இந்திரா விழா என்ற மிகப்பெரும் விழாவையும் பழந்தமிழ் மக்கள் கொண்டாடி வந்துள்ளனர்,

இந்திரவிழா என்பது இந்திரனைச் சிறப்பிக்கும் வகையில் பழந்தமிழர்களால் கொண்டாடப்பட்ட விழாவாகும். பசி, பிணி, பகை முதலியவற்றால் துன்பம் அடையாது இருத்தற் பொருட்டுத் தெய்வத்தைக் கருதிச் செய்யும் சாந்திப் பெருவிழாவே இந்திர விழாவாகும். தூங்கெயிலெறிந்த தொடித்தோள் செம்பியன் என்ற சோழ மன்னன் இதைத் தொடங்கினான்.

இவ்விழாவைத் "தீவகச் சாந்திசெய்தருநன்னாள்" என்று சாத்தனார் கூறுகின்றார்.

மாதம் தோறும் தான் பௌர்ணமி வருகிறது. சித்திரைமாதப் பௌர்ணமியில் அப்படியென்னசிறப்பு? சித்திரைமாதம் சித்திரை நட்சத்திரம்கூடி வரும் பௌர்ணமி நாள் சித்திராபௌர்ணமி நாளாகும்.

இது வசந்தகாலம். காலங்களில் நான் வசந்தகாலமாக இருக்கிறேன் என்று கண்ணன் பகவத்கீதையில் கூறுகிறார். இவ்வசந்தகாலத்தில் தான் பெரும்பாலும் ஆலயங்களில் பிரம்மோற்சவம் (திருவிழா) நடைபெறுகிறது. அடுத்தடுத்து தானதர்மங்கள் செய்ய அக்ஷய திருதியை, சித்திரா பௌர்ணமி என்று எவ்வளவு புண்ணியநாட்கள்!

வானமண்டலத்தில் சூரியனுக்கும், சந்திரனுக்கும் இடைப்பட்ட தூரத்தை "திதி" என்கிறோம் அமாவாசையன்று சூரியனும் சந்திரனும் இணையும் நாளில் மூதாதையர்களுக்கு "திதி" கொடுப்பதும், (அன்று சூரிய-சந்திரர்கள் ஒரே டிகிரியில் இணைந்திருப்பார்கள்.) பௌர்ணமியன்று சிறப்பான பூஜைகள், வழிபாடுகள் செய்வதும் சிறந்தது. (அன்று சூரிய சந்திரர்கள் சமசப்தமமாக இருப்பார்கள்.)

அமாவாசையில் சூரியனுடன் 0 டிகிரியில் இணைந்த சந்திரன்,தினமும் 12 டிகிரிநகர்ந்து 15ம் நாளான பௌர்ணமி அன்று 180ம் டிகிரியை அடைகிறது சூரியனுக்கு சமசப்தமமாகிமுழுமையான ஈர்ப்புசக்தியைவெளிப்படுத்துகிறது. அதனால் அன்றுசெய்யும் பூஜைகள்,வழிபாடுகள் சிறப்பைப் பெறுகின்றன.

**வைகாசிமாதம் :**

தமிழர் காலக் கணிப்புமுறையின்படி ஆண்டின் இரண்டாவது மாதம் வைகாசி ஆகும். இம்மாதப் பெயர் விசாக நட்சத்திரத்தின் பெயரை யொட்டி ஏற்பட்டது. சூரியன் மேட இராசியைவிட்டு, இடப இராசிக்குள் புகும் நேரம் வைகாசிமாதப் பிறப்பு ஆகும். சூரியன் இடப இராசிக்குள் பயணம் செய்யும் காலப்பகுதியே இம் மாதம் ஆகும்.

இம்மாதத்தில் தமிழர்கள் தமிழ் கடவுளான முருகப் பெருமானின் பிறந்த நட்சத்திரமான விசாக நட்சத்திரத்தில் விழா எடுத்து அனைவரும் ஒன்று கூடி மகிழ்கின்றனர் .

வைகாசிமாதம் என்றாலே நல்ல காரியங்கள் செய்ய ஏற்ற மாதம் என்று கருதப்படுகிறது. வைகாசி மாதத்தை மாதவமாதம் என்றும்,வைசாகம் என்றும் அழைப்பார்கள்.

இந்தமாதத்தில் வரும் விசாகநட்சத்திரம், ஞானச் சிறப்பு பெற்றது. சரவணப் பொய்கையில் முருகப் பெருமான் அவதரித்தது இந்தப் புனிதநாளில்தான். இந்தத் திருநாளில் முருகப் பெருமானின் திருத்தலங்களில் சிறப்புவழிபாடுகள் நடைபெறும்.

பெரும் தவமிருந்து 1008 அண்டங்களை 108 யுகங்களாக ஆட்சி புரிந்து உயிரினங்களை வதைத்த சூரபத்மனை அழிக்க, ஈசனின் நெற்றிக் கண்ணிலிருந்து ஆறு தீப்பொறிகளாக ஆறுமுகன் அவதரித்த நாள் தான் வைகாசிவிசாகம்.

சக்தியின் துணையால் சக்திவேல் பெற்றுச் சூரனின் ஆணவத்தை அழித்து ஆட்கொண்ட ஆறுமுகனை வைகாசி விசாகத்தன்று வழிபட்டால் நம் துன்பங்களும் தீயகுணங்களும் அழியும்.

அன்று அதிகாலை எழுந்துநீராடி, "முருகா" எனக் கூறி திருநீறு அணிந்து, முருகன் முன் நைவேத்தியம் வைத்து, முதலில் விநாயகர் அகவல் பாடி கணபதியை வழிபட்டு, பின் முருகனுக்குரிய ஸ்லோகங்கள், கந்தசஷ்டி கவசம், கந்தகுரு கவசம், கந்தர் அனுபூதி, சுப்பிரமணிய சோடச நாமங்கள் கூறி அர்ச்சித்து, தூப தீபம் காட்டி நைவேத்தியம் செய்து பூசித்தால் நல்லபலன் பெறலாம்.

சரவணப் பொய்கையில் தோன்றியதால் சரவணபவன், கார்த்திகைப் பெண்களால் பாலூட்டப் பெற்றதால் கார்த்திகேயன், விசாக நட்சத்திரத்தில் அவதரித்ததால் விசாகன், இளமையாகவும் அழகாகவும் இருப்பதால் முருகன், குமரன் என்று இன்னும் பல பெயர்களும் முருகனுக்குஉண்டு. விசாக நட்சத்திரத்தின் அதிபதி பிரகஸ்பதி என்ற குரு தேவதை முருகன். முருகு என்ற சொல்லே அழகு. முருகன் கைவேல் ஆயுத எழுத்தாகும். முருகு என்றசொல் தமிழில் உள்ள வல்லின, மெல்லின, இடையின எழுத்துகள் ஒன்றாக இணைந்து உருவானது தான்.

முத்து பிறவியிலேயே ஒளியுடையது. தீப்பொறியில் தோன்றிய முருகன் ஒளிமயமானவனானதால் முத்தையன் என்ற பெயரும் உண்டு. முருகன் மும்மூர்த்திகளின் சொரூபம். மு- முகுந்தன் ரு- ருத்ரன் க- கமலாசனன் (பிரம்மா). எனவே முருகனை வணங்கினால் மும்மூர்த்திகளை வணங்கியதற்கு இணையாகும்.

வைகாசி விசாகத்தன்று திருத்தணியில் வழங்கப்படும் விபூதியும் பாதரேணு எனப்படும் சந்தனமும் தீராத வியாதிகளைத் தீர்க்கும்.

வைகாசியில் செய்யும் தானத்திற்கு மிகுந்த பலனுண்டு. தேவர்களும் அசுரர்களும் இணைந்து பாற்கடலைக் கடைந்த போது அமுதம் வெளிப்பட்டது வைகாசி மாத ஏகாதசியன்று, இறைவன் அதைக் காத்தது துவாதசியன்று. தேவர்கள் அமுதத்தை உண்டது திரயோதசி, பௌர்ணமி தினங்களில். எனவே வைகாசி மாதத்தில் வரும் ஏகாதசி, துவாதசி, த்ரயோதசி, பௌர்ணமி தினங்களில் செய்யப்படும் தானத்திற்கு ஒன்றிற்குப் பலவாக பலன் கிட்டும் என்பது ஐதீகம்.




# யோகர்சுவாமிகளின் வாழ்வுடன் பின்னிப்பிணைந்துவிட்ட கொழும்புத்துறை

தனஞ்சயன் இராமநாதன்
(நூலக தகவல் உதவியாளர் - யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்)
சுவமியார் வீதி, கொழும்புத்துறை

### சமாதிக்கோவில்

சுவாமிகளின் மறைவுக்குப் பின்னர் அவர் வாழ்ந்த குடிசை இருந்த அதே இடத்தில் 1964ம் ஆண்டு புதிதாகக் கட்டடம் ஒன்று, சுவாமிகளால் உருவாக்கப்பட்ட சிவதொண்டன் நிலையத்தால் கட்டப்பட்டு யோகர்சுவாமி சமாதிக்கோயிலாக தற்போதும் சிறப்பாகப் பராமரிக்கப்பட்டு வருகின்றது. அதிலே தீயுடன் ஐக்கியமான சுவாமிகளின் அஸ்தி வைத்துக் கட்டப்பட்டு அதன் மேல் சுவாமிகளின் திருவடியும் வைக்கப்பட்டுள்ளது. இச் சமாதிக்கோவிலில் இருக்கும் கதவு, நிலை என்பன சுவாமிகள் வாழ்ந்த குடிசையில் இருந்த கதவு, நிலை ஆகியவற்றைக் கொண்டே அமைக்கப்பட்டது இதன் சிறப்பம்சமாகும். நீண்டகால புனரமைப்பு இன்றிக் காணப்பட்ட இச் சமாதிக் கோயிலானது, போர்க்காலச்சூழலுக்குப் பின்னர் 2014 ம் ஆண்டு சுவாமிகளின் ஐம்பதாவது குருபூசை தினத்தை முன்னிட்டு புனரமைப்பு மற்றும் கும்பாபிடேகம் செய்யப்பட்டது. சமாதிக்கோயிலிலே தினந்தோறும் காலை, மாலை பூசை வழிபாடுகள் நடைபெறுகின்றன. திருவடிபூசை, குருபூசை, நடேசர்அபிடேகம் என்பனவும் நடைபெறுகின்றது. சுவாமிகளின் குருபூசைதினத்தில் விசேட அபிடேகம், பூசை, என்பன இடம்பெறும். பங்குனி மாதத்து ஆயிலிய நட்சத்திரம் அன்று பாதயாத்திரை ஒன்றும் இடம்பெறும். செல்லப்பா சுவாமிகளால் யோகர்சுவாமிகளிற்கு உபதேசம் செய்யப்பட்ட இடமான நல்லூர் தேரடியில் இருந்து ஆரம்பிக்கப்படு, பருத்தித்துறை வீதி, கச்சேரி நல்லூர் வீதி, நாவலர் வீதி, மாம்பழம் சந்தி, ,லந்தைக்குளம் வீதிவழியே சுவாமிகளின் சமாதிக்கோயிலை பாதயாத்திரை வந்தடையும். இதிலே சுவாமிகளின் அடியவர்கள் கொழும்புத்துறைஇந்துமகா வித்தியாலையமாணவர்கள் எனப் பலரும் பங்குபற்றுவார்கள். சிறிய சகடையினிலே சுவாமிகளின் திருவுருவப்படம் அமைக்கப்பட்டு மலர்மாலைகளால் அலங்கரிக்கப்பட்டு இவ் வீதிவழியே பவனிவரும். வீதிதோறும் வீட்டுவாயில்களில் அடியவர்களினால் பூரணகும்பம் வைககப்பட்டிருககும். சமாதிநிலையத்திற்கு பாதயாத்திரை வந்தடைந்த பின்னர் சுவாமிகளின் திருவடிக்கு விசேட அபிடேகம் மற்றும் பூசைகள் நடைபெற்று மகேஸ்வர பூசையும் இடம்பெறும்.




சுவாமிகளின் சமாதி கோயில்

அடியவர்களினால் நற்சிந்தனைப் பாடல் பஜனைகளும் பாடப்படும். சுவாமிகளின் நல்லாசிகளுடன் சமாதிக்கோவில் தனது சேவையினை தொடர்ச்சியாக செயற்படுத்திவருகின்றது.


### செல்லப்பாசுவாமிகளின் திருவடி

சுவாமிகள் தான் வாழ்ந்த குடிசை அமைந்த இடத்திற்கு வடக்குப்பக்கமாக இலந்தைக்குளம் பிள்ளையார் ஆலயத்தின் பூந்தோட்டத்தில் தனது குரு செல்லப்பா சுவாமிகளின் திருவடியினை பதித்து வழிபட்டு வந்தார். ஓர் கருங்கல்லின்மேல் அவரது பாதம் பதியப்பட்டு இருக்கின்றது. ஏறத்தாழ 100 வருடங்கள் பழமை வாய்ந்ததாக காணப்படுவதும் சுவாமிகளினால் உருவாக்கி பராமரிக்கப்பட்டு வந்ததும் மேலும் சிறப்பைக் கூட்டுகின்றது. பங்குனி மாதம் இரண்டாம்





செல்லப்பா சுவாமிகளின் திருவடியும் கோவிலும்



யோகர்சுவாமிகள் வாழந்த குடிசை

திங்கள் திருவடி பூசை சுவாமிகளால் நடாத்தப்பட்டது. தற்போது 2016ம் ஆண்டு இத் திருவடி புனர்நிர்மானம் செய்யப்பட்டு கற்சுவர் மூலம் ஓர் சிறிய கோயிலாக கட்டப்பட்டுள்ளது. தற்போதும் சுவாமிகளின் அடியவர்களினால் தினந்தோறும் மலர்கள் வைத்து வணங்கப்படு வருகின்றது. யோகசுவாமிகள் "தாயினும் நல்ல தலைவன் என்று" தனது குரு செல்லப்பா சுவாமிகள் உபதேசத்தையும் அவர் வழிகாட்டலிலும் சென்று ஞானத்தையும் பெற்றதுமல்லாமல் தனது குருவின் மேல் உள்ள பக்தியினாலும் அன்பினாலும் குருவின் திருவடியினை தான் வாழ்ந்த குடிசைக்கு அருகில் வைத்து வழிபட்டுவந்தமை செல்லப்பா சுவாமிகளின் மேல் யோகசுவாமிகளின் பக்தியினை எடுத்துகாட்டி நிற்கின்றது.

**கொழும்புத்துறை மேற்கு வதரிபீட விநாயகர் கோவில்**

யோகர்சுவாமிகள்தனது ஆரம்பநிலைக் கல்விக்காக தனது ஐந்து வயதில் கொழும்புத்துறைக்கு வந்ததுமுதல் வதரிபீட விநாயகரை வழிபட்டு வந்தார் என அறியமுடிகின்றது. ஆலயத்தின் தென்திசையில் சுவாமிகள் வாழ்ந்த குடிசையும் பிற்பட்ட காலத்தில் சுவாமிகளின் அஸ்தியை கொண்டு கட்டப்பட்ட சமாதிக்கோயிலும் அமைந்துள்ளது. இவ் ஆலயத்தினிலே புராணவிற்பனர்களின் உதவியுடன் கந்தபுராணபடனம், திருப்புகழ் பாடல்பாடும் நிகழ்வுகள் நடைபெற்று வந்தன. இதில் முக்கிய பங்கு சுவாமிகளையே சாரும். இக் கோவிலில் மகாசிவராத்திரி தினத்தில் சுவாமிகளால் சிவபுராணம் படிக்கப்பட்டுவந்ததாக இன்றும் ஆலயத்தைச் சார்ந்த பெரியோர்கள் தமது பசுமையான எண்ணங்களை மீட்டுகின்றனர். இவற்றில் அப்பகுதி மக்கள், அடியவர்கள் அனைவரும் கலந்துகொள்வர். சிவபுராணத்தை தான் முதலில் படித்துவிட்டு மீண்டும் அங்குகூடியுள்ள அடியவர்களைப் பாடுமாறும் தங்களை கேட்டதாகவும் அதில் பங்குபற்றிய அடியவர்கள் இன்றும் கூறுவர். சிவபுராணத்தின் பொருளினை எடுத்துரைத்தும், பண்முறைப்படி பாடல் பாடவேண்டும் என்றும் வலியுறுத்துவார் சுவாமிகள். ஒவ்வொரு வருடமும் இவ் ஆலயத்தில் சிவராத்திரி பூசை வழிபாட்டில் கலந்துகொள்ள தவறமாட்டார். தன் குடிசைக்கு வரும் அடியவர்கள் கொண்டுவரும் பழம் பாக்கு வெத்திலை கற்பூரம் போன்ற பொருட்களை "கொண்டுபோய் அங்க குடுங்கோ" என்று வதரிபீட விநாயகர் ஆலயத்தை நோக்கி கைகாட்டுவார் என்றும் சுவாமிகளின் அன்பர்கள் கூற்றினால் அறியமுடிகின்றது. வண்ணார்பண்ணை வைத்தீஸ்வரன், கீரிமலை நகுலேஸ்வரம் போன்ற சிவன் ஆலயங்களையும், நல்லூர்க் கந்தன், மாவை முருகன், கதிர்காமக் கந்தன் போன்ற முருகன் ஆலயங்களையும், பன்றித்தலைச்சி அம்மன் ஆலயத்தையும், கொழும்புத்துறை வதரிபீட விநாயகர் ஆலயத்தினையும் சுவாமிகளால் அதிகம் பற்றுவைத்து வணங்கிய ஆலயங்களாகும். சுவாமிகள் கொழும்புத்துறைக்கு வருவதற்கு முன்னரே வதரிபீட விநாயகர் ஆலயம் அமைந்திருந்தாலும் சுவாமிகளின் மூலம் மேலும் ஆன்மீகமும் பக்தி நெறியும் ஆலயச்சூழலில் மேலும் பரவியது என்றால் அது மிகையாகாது. இக்கூற்றுக்கு மேலும் உறுதி செய்வதாக வதரிபீட விநாயகர் ஆலயத்தின் இராஜ கோபுரத்திலே யோகர்சுவாமிகள் தியானத்தில் அமர்ந்திருக்கும் நிலையினை சிலைவடிவிலே செய்து வைக்கப்பட்டுள்ளது. மேலும் சுவாமிகளின் குரு செல்லப்பா சுவாமிகளின் சிலையும் ஆலயத்தின் இராஜ கோபுரத்தில் வைக்கப்பட்டுள்ளது. ஆலயத்தின் பஞ்சமுக விநாயகருக்கான தெற்கு வாசல் மணிமண்டபத்திலும் சுவாமிகளின் மேலுமொரு திருவுருவச் சிலை வைக்கப்பட்டுள்ளது. அதுமட்டுமல்லாது சமயக்குரவர்கள் நால்வரில் அப்பர், சுந்தரர் ஆலயத்தின் தெற்குப்பக்க மணிமண்டபத்திலும் திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர் ஆகியோரின் திருவுருவங்கள் சுவாமிகளின் சமாதிக்கோயிலிலும் அமைக்கப்பட்டுள்ளது. இது யோகசுவாமிகள் வாழ்ந்த காலப்பகுதியில் வதரிபீட விநாயகர் ஆலயத்திற்கும் சுவாமிகளுக்குமான நெருக்கமான பக்தியினை சான்றுபகிர்வதாக உள்ளது.

**கொழும்புத்துறை இந்துமகா வித்தியாலயம்**

பாடசாலை அமைந்துள்ள இடத்திற்கு முன்பக்கமாகவே யோகசுவாமிகள் பெரியதோர் இலுப்பை மரத்தடியில் அமர்ந்து தியானத்தில் ஈடுபட்டார். அவர் வாழ்ந்த குடிசையும் இப் பாடசாலைக்கு முன் பக்கமாகவே அமைந்திருந்தது. 1993ம் ஆண்டு தொடக்கம் இப்பாடசாலையில் சுவாமிகளது குருபூசை தினம் சிறப்பாக ஏற்பாடு செய்யப்பட்டு தொடர்ந்தும் நடைபெற்றுவருகின்றது. குருபூசை தினத்திலே யோகர் சுவாமிகளின் நற்சிந்தனை பாடல்கள், சிறப்பு வழிபாடுகள், யாத்திரை என்பனவும் இப்பாடசாலை ஆசிரியர்களாலும் மாணவர்களாலும் இணைந்து




பாடசாலை முகப்பில் அமைக்கப்பட்டுள்ள யோகர் சுவாமிகளின் உருவம்

செயற்படுத்தப்பட்டு வரப்படுகின்றது. பிரதி வெள்ளிக்கிழமை தோறும் பாடசாலை மாணவிகளால் நற்சிந்தனை பாடல் பஜனைகள் பாடசாலை மண்டபத்திலே பாடப்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. இப்பாடசாலை முகப்பு வாயிலில் 1999ம் ஆண்டு யோகர்சுவாமிகள் தியானத்தில் அமர்ந்திருக்கும் நிலையிலான சிலை வடிவமைப்பு செய்யப்பட்டு திறந்துவைக்கப்பட்டது. இச்சிலையைசிற்பி சிவப்பிரகாசம் என்பவர் வடிவமைத்துள்ளார். இதற்கான நிதி ஞாபகார்த்த நிதியம் மூலம் செல்வி விநாசித்தம்பி அவர்களால் வழங்கப்பட்டது. யோகர்சுவாமிகளது திருவுருவப்படத்தை தாங்கிய பாதயாத்திரை 1980 ம் ஆண்டில் தொடங்கப்பட்டாலும் பின்நாட்களில் ஏற்பட்ட உள்நாட்டு யுத்தம் காரணமாக கைவிடப்பட்டு மீண்டும் 2014ம் ஆண்டு 50வது குருபூசை தினத்தில் இருந்து கிரமமாகவும் சிறப்பாகவும் நடைபெற்று வருகின்றது. இப்பாடசாலையின் பரிசளிப்பு விழாவில் யோகர்சுவாமிகள் தொடர்பான போட்டிகள் நடாத்தப்பட்டு அதற்கான பரிசில்கள் ஞாபகார்த்த நிதியம் மூலம் 1993 ம் ஆண்டில் இருந்து வழங்கப்பட்டு வருவதும் குறிப்பிடதக்கது.

### இலுப்பைமரம்

யோகர்சுவாமி சிறுவயதில் கொழும்புத்துறைக்கு கல்வி கற்பதற்காக வருகைதந்த காலப்பகுதியில் அவரது குடிசைக்கு அருகில் இந்து மகா வித்தியாலயத்திற்கு முன்பாக பெரிய இலுப்பை மரம் ஒன்று காணப்பட்டது. செல்லப்பாசுவாமிகளினால் உபதேசம் பெற்று பதையாத்திரை சென்று மீண்டும் குருவிடம் சென்றபோது "உம் வழியில் நீர் செல்லும்" என்று குருவானவர் கூறவே கொழும்புத்துறை இலுப்பைமரத்தடியில் அமர்ந்து பகல்இரவாக தியானத்தில் ஈடுபட்டார். இதன் பின்னர் சுவாமிகளின் ஆன்மீக ஒளி இலுப்பை மரத்தையும் அந்த கிராமத்தையும் சூழ்ந்து கொண்டது. இலுப்பை மரத்தடியில் அன்பர்கள் சுவாமிகளிடம் இருந்து அருள்ஆசி பெற்றதை இன்றும் கூறுகின்றனர். சுவாமிகள் மறைந்தபின்பு அனைத்து அடியவர்களின் மனங்களிலும் இவ் இலுப்பை மரம் சுவாமிகளை நினைவூட்டி வளர்ந்தது.



யோகர் சுவாமிகள் அமர்ந்து தவம் புரிந்த பழைய இலுப்பை மரம்


1995ம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் இடம் பெற்ற போர் காரணமாக இம் மரம் குண்டுவைத்துத் தகர்த்து வேரோடு சாய்க்கப்பட்டது. சுவாமிகள் அமர்ந்த இலுப்பைமரம் நின்ற அதே இடத்தில் தற்போது புதிய இலுப்பை மரக் கன்று ஒன்று இரு அடியவர்களால் நடப்பட்டு சுவாமிகளின் நினைவாக பராமரிக்கப்பட்டு வளர்க்கப்படுகின்றது.




தற்போது நடப்பட்டு வளர்க்கப்படும் இலுப்பைமரம்

### துண்டி இந்து மயானம்.

சுவாமிகள் தன்னை பராமரித்து வந்த குடும்ப அன்பர்களிடம் ''என் உடலை தீயிலே தகனம் செய்தல் வேண்டும் அதுவே எனது விருப்பம்'' என்று கூறியதாக அக்குடும்ப உறுப்பினரின் தகவலிருந்து அறியமுடிகின்றது. 1964ம் ஆண்டு 23ம் திகதி திங்கட்கிழமை பங்குனி மாதம் அதிகாலை 3.30 மணியளவில் ஆயிலிய நட்சத்திரத்தில் சுவாமிகளின் உடலை விட்டு சீவன் சிவனிடம் சென்றது. மறுநாள் தகனம் செய்வதற்கான ஏற்பாடுகள்





மேற்கொள்ளப்பட்டது. அன்றைய தினம் அப்பகுதியில் இருந்த பாடசாலைகளுக்கு விடுமுறையும் வழங்கப்பட்டு மாணவர்கள் இறுதிக்கிரியைகளில் கலந்து சுவாமிகளுக்கு அஞ்சலி செலுத்தினர். வாழும் கடவுளாக எம்மவர்கள் மத்தியில் வாழ்ந்த யோகர்சுவாமிகளின் மறைவின் பின்



தம் பிறவிப்பயனாகவும், வரமாகவும் ஏற்று சுவாமிகளின் பூதவுடலுக்கு இறுதியஞ்சலி செய்வதற்காக எண்ணற்ற அடியவர்கள் கொழும்புத்துறையில் நெடுவரிசையில் காத்திருந்து அஞ்சலி செய்தனர். மலர்மாலைகளால் அலங்கரிக்கப்பட்ட பூந்தொட்டியில் சுவாமிகள் பூதவுடல் வைக்கப்பட்டிருந்தது. அடியவர்கள் பூந்தொட்டியினை தங்களது தோளிலே சுமந்து தகனம் செய்ய துண்டி இந்துமயானம் வரை கொண்டு சென்றனர். ஏறக்குறைய ஒரு கிலோமீற்றர் தூரம்,யோகர்சுவாமிகளின் குடிசையில் இருந்து துண்டி இந்து மயானம் வரை. அவ்வழி வீதி எங்கும் பூரணகும்பம், வாழை மரங்கள், தென்னோலைத் தோரணம், மலர் மாலைகள் என் பூதவுடல் கொண்டு செல்லப்பட்ட வீதிகள் எங்கும் அலங்கரிக்கப்பட்டிருந்தது. பெண்களும் இந்து மயானம் சென்றனர் என அறியமுடிகின்றது. பெரும் எண்ணிக்கையிலான அடியவர்கள் துண்டி இந்து மயானத்தை சூழ்ந்து நின்றனர். சுவாமிகளை பராமரித்து வந்த குடும்ப உறுப்பினரான திரு.திருநாவுக்கரசர் என்பவரால் சுவாமிகளின் திருவுடலுக்கு தீ மூட்டப்பட்டது. ஈழத்துப்பெரும் சித்தர் தவத்திரு யோகசுவாமியின் திருவுடல் தீயுடன் இணைந்து வெண்நீறானது. பின்னர் ஒரு குடத்தில் சுவாமிகளின் அஸ்தி இடப்பட்டு தட்டால் மூடப்பட்டு சுவாமிகள் வாழ்ந்த குடிசையில் வைக்கப்பட்டது. பிற்பட்ட காலப்பகுதியில் இவ் அஸ்தியினை வைத்தே சமாதிக்கோயில் கட்டப்பட்டது.

சிறுவயதில் தாயையும், இளமையில் தந்தையையும் இழந்தாலும், செல்லப்பா சுவாமிகளால் ஆசீர்வதிக்கப்பட்ட இவர் பெரும் சித்தர் என்று அனைவரும் உணர்ந்துகொள்ளவே, அகன்ற நெற்றியில் வெண்ணீறு தரித்தும், வெள்ளை நிற வேட்டி கட்டி தோளிலே ஓர் துண்டு கையிலே ஒரு குடையுடனும், காலிலே செருப்பு அணியாமலும், சிரித்த முகமும், கனிவான பேச்சுடனும், மேனியெங்கும் தாழம்பூ வாசனையுடன் கொழும்புத்துறையில் குடிசை அமைத்து கற்பூர ஒளி, கற்பூர வாசனை, ஊதுவர்தியின் சுகந்தம், மலர்களின் சுகந்தம், அடியவர் கூட்டம், திருமுறை ஓசை, மந்திர ஒலி, படித்த பெரியவர்கள், பாமர மக்கள், குழந்தைகள், பள்ளிச்சிறுவர்கள், மாணவர்கள், வாலிபர்கள், யுவதிகள், வயதானவர்கள், அரசியல்வாதிகள், வைத்தியர்கள், பண்டிதர்கள், ஆசிரியர்கள், தொழிலதிபர்கள், விவசாயிகள், இன மத நாடு வேறுபாடு கடந்து அனைவரையும் தன் கொழும்புத்துறையில் ஓலைக்குடிசையில் ஒன்றாக்கினார் ஈழத்துச் சித்தர் யோக சுவாமி அவர்கள்.

**உசாத்துணை**


1. "எங்கள் அப்பு" தவத்திரு யோகர் சுவாமிகளின் வரலாறு. த.திருநாவுக்கரசு, கொழும்புத்துறை, 2014
2. சுவாமி சரிதம் என்னும் சிவயோகசுவாமிகள் திறச்சரிதம் க.கி.நடராஜன், ஸ்ரீ சண்முகநாத அச்சகம், 1974
3. என் நெஞ்சில் இடங்கொண்ட ஒரு பெரியர் (யோகர் சுவாமிகள்) மு.வைரமுத்து, குமரபுரம், 1980
4. யோகசுவாமிகள். ச.அம்பிகைபாகன், ஸ்ரீ சண்முகநாத அச்சகம், 1972
5. ஈழத்துச் சிவயோக சுவாமிகள் ஏற்றிய ஞான விளக்கு. க.ந.வேலன், மணிமேகலைப் பிரசுரம், 2000
6. எங்கள் ஆசான் அருள் மொழிகள்: யோகசுவாமிகள் தம் அன்பர்களுக்குக் கூறியவை. சிவதொண்டன் நிலையம், கலைவாணி அச்சகம், 1976.
7. வதரிபீட மன்றுளாடும் விநாயகர் ஆலயம். மு.கனகசபை
8. வதரிபீட மன்றுளாடும் விநாயகர் ஆலயம். பொ. சிவப்பிரகாசம்
9. நேரடி நேர்காணல். செல்வி யோ.விநாசித்தம்பி. யோகசுவாமிகளை கவனித்துவந்த குடும்பம். யோகசுவாமி சமாதிக்கோவில், கொழும்புத்துறை.
10. நேரடி நேர்காணல். பொ.சிவப்பிரகாசம். யோகசுவாமிகள் அடியவர், வதரிபீட மன்றுளாடும் விநாயகர் தேவஸ்தானம்.
11. நேரடி நேர்காணல். க.தவகீஸ்வரன். அதிபர்,இந்து மகா வித்தியாலயம், கொழும்புத்துறை.



# ஆறுமுக நாவலரின் பாலபாடம் கூறும் வாழ்க்கை நெறிகள் சில...

## கொலை

கொலையாவது உயிர்களை அவைகளுக்கு இடமாகிய உடம்பினின்றும் பிரியச் செய்தல். உயிர்களுக்கு இதஞ் செய்தலே புண்ணியமும் அகிதஞ் செய்தலே பாவமுமாம். கொலையைப் பார்க்கினும் அகிதம் வேறில்லாமையால், கொலையே பாவங்களெல்லாவற்றிற்குந் தலையாயுள்ளது. கொல்லாமையைப் பார்க்கினும் இதம் வேறில்லாமையால், கொல்லாமையே புண்ணியங்களெல்லா வற்றிற்குந் தலையா யுள்ளது.

கொலையில்லாத ஞானமே ஞானம், கொலை யில்லாத தவமே தவம், கொலையில்லாத தருமமே தருமம், கொலையில்லாத செல்வமே செல்வம். ஆதலினாலே, சோர்வினாலும் கொலைப்பாவம் சிறிதும் விளையாவண்ணம் எப்பொழுதும் அருளோடுகூடிச் சாவதானமாக இருத்தல் வேண்டும். கொலை செய்ய ஏவினவரும், கொலை செய்யக் கண்டும் அதனைத் தடுக்காதவரும், ஒருவன் செய்த கொலையை மறைத்து அவனை இராசாவுடைய தண்டத்துக்குத் தப்புவித்தவரும், கொலை செய்தவரோடு பழகினவரும் கொலைப் பாவிகளே யாவர்.

கொலைப் பாவிகள் எண்ணில்லாத காலம் நரகத் துன்பத்தை அனுபவித்து, பின்பு பூமியிலே பிறந்து, ஈளை, காசம், குட்டம், பெருவியாதி, நெருப்புச்சுரம், கைப்பிளவை முதலிய நோய்களினால் வருந்தி உழல்வார்கள்.

பிறவுயிரைக் கொல்லுதல் போலத் தன்னுயிரைக் கொல்லுதலும் பெருங்கொடும் பாவம். கடவுளை வழிபட்டு உயிர்க்கு உறுதி செய்துகொள்ளும் பொருட்டுக் கிடைத்த கருவி சரீரம். ஆதலால் எவ்வகைப்பட்ட வியாதிகளினாலே வருத்தமுற்றாலும், சரீரத்தைப் பாதுகாத்துக் கொண்டே இருத்தல் வேண்டும். கோபத்தினாலும் வியாதி முதலிய பீடைகளினாலும் தம்முயிரை வலிய விட்டவர் கும்பிபாகம் முதலிய நரகங்களிலே அறுபதினாயிரம் வருடங்கிடந்து வருந்தி, பின்பு சக்கிரவாளகிரிக்குப் புறத்தில் உள்ள இருட்பூமியிலே எண்ணில்லாத காலங் கிடப்பார்.

## கள்ளுண்ணல்

கள்ளு, அவின், கஞ்சா முதலியவை அறிவை மயக்கும் பொருள்கள். அவைகளை உண்பவர் அறிவையும் நல்லொழுக்கத்தையும் இழந்து, தீயொழுக்கத்தையே அடைவர். கள்ளுண்பவர் தமக்குச் சினேகர் செய்த நன்மையையும் தாங்கற்ற நூற் பொருளையுஞ் சிந்தியார். தம்மைத் தொடர்ந்த பழி பாவங்களையும் அவைகளாலே தமக்கு விளைந்த துன்பத்தையும் அறியார். இவ்வியல் புடையவர் தம்முயிர்க்கு உறுதி செய்துகொள்வது எப்படி! கள்ளுண்பவருக்குக் களிப்பும் மயக்கமுமே இயற்கையாதலால், அவரிடத்துச் சண்டையும், கொலையும், களவும், பொய்யும், வியபிசாரமுமே குடிபுகும்.

கள்ளுண்டவருக்கு மனமொழி மெய்கள் தம் வசப்படாமையால் நாணம் அழியும் அழியவே, அறிவுடையோர் அவரைக் காணுதற்கும் அஞ்சித் தூரத்தே நீங்குவர். யாது செய்யினும் பொறுக்கும் மாதாவும், கள்ளுண்டு களித்தலைப் பொறுக்க மாட்டாள். ஆனபின், குற்றம் யாதும் பொறாத அறிவுடையோரெதிரே கள்ளுண்டு களித்தல் யாதாய் முடியும்? விலைப்பொருளைக் கொடுத்துக் கள்ளினாலே அறிவு மயக்கத்தைக் கொள்ளுவோர் எவ்வளவு அறிவீனர்! கள்ளுண்டவர் அநேகர் தஞ்செல்வமெல்லாம் இழந்து, வறியவராகித் தெருத்தோறும் அலைந்து திரிந்து, பின்னரும் பொருள் யாசித்துக் கள்ளுண்டு மயங்கி விழுந்து கிடந்து, பலராலும் பழிக்கப்படுதலைக் கண்டுங் கண்டும், கள்ளுண்டல் எவ்வளவோரறியாமை!

கள்ளுண்டவரும், கள்ளுண்ணாதவரைக் கள்ளு ண்பித்தவரும், கள் விற்றவரும், கள்ளுண்டவரோடு பழகினவரும், அளவில்லாத காலம் நரகத்திலே கிடந்து வருந்துவார்கள். இயமதூதர்கள் அவர்களுடைய நாக்கை வாளினாலே சேதித்து, உலோகங்கள் உருக்கிய நீரை அவர்கள் வாயிலே வார்ப்பார்கள். அவர்கள் நரகத் துன்பத்தை அநுபவித்த பின்பு பூமியிலே மலப்புழுவாய்ப் பிறந்து மலத்தை உண்டு இறந்து, மனிதராய்ப் பிறந்து, சொத்தைப் பற்குத்து நோயினாலும், பைத்தியத்தினாலும், வயிற்று நோயினாலும் வருந்துவார்கள். அநேகர் வாம மதத்திலே புகுந்து, பிறரையும் தம் வசப்படுத்திக் கெடுத்து, அவரோடு கள்ளுண்டு களிக்கின்றார்கள். வாம மதத்தை அநுட்டித்தவர்கள் பிசாச பதத்தை அடைவார்கள் என்பது நூற்றுணிவு.

## களவு

களவாவது பிறருடைமையால் இருக்கும் பொருளை அவரை வஞ்சித்துக் கொள்ளுதல். களவினால் வரும் பொருள் வளர்வதுபோலத் தோன்றி, தான் போம் பொழுது பாவத்தையும் பழியையுமே நிறுத்திவிட்டு, முன்னுள்ள பொருளையும் தருமத்தையும் உடன்கொண்டு போய்விடும். களவுசெய்பவர், அப்பொழுது, "யாவராயினும், காண்பாரே அடிப்பாரோ, கை கால்களைக் குறைப்பாரோ" என்றும், பின்பும் "இராசா அறிந்து தண்டிப்பானோ" என்றும், பயந்து பயந்து மனந்திடுக்குறுதலினால், எந்நாளும் மனத்துயரமே உடையவராவர். அறியாமையினாலே களவு அப்பொழுது இனிது போலத் தோன்றினும், பின்பு தொலையாத துயரத்தையே கொடுக்கும்.

களவு செய்தவர் இம்மையிலே அரசனாலே தண்டிக்கப் பட்டு எல்லாராலும் இகழப்படுவர். அவரை அவர் பகைவர் மாத்திரமா, உறவினரும் சிறிதாயினும் நம்பாது அவமதிப்பார். களவினாலாகிய இகழ்ச்சியைப் பார்க்கினும் மிக்க இகழ்ச்சி பிறிதில்லை. ஒருகாற் களவு செய்தவரென்று அறியப்பட்டவர் சென்ற சென்ற இடங்களிலெல்லாம், பிறராலே செய்யப் பட்ட களவும் அவராற் செய்யப்பட்டதாகவே நினைக்கப்படும்.

களவென்னும் பெருங்குற்றத்தைச் சிறு பருவத்திற்றானே கடிதல் வேண்டும். கடியா தொழிந்தால், அது மேன்மேலும் வளர்ந்து பெருந்துன்பக்கடலில் வீழ்த்தி விடும். ஆதலாற் சிறுவர்களிடத்தே அற்பக்களவு காணப்படினும், உடனே தாய் தந்தையர்கள் அவர்களைத் தண்டித்துத் திருத்தல் வேண்டும். அப்படிச் செய்யாது விட்டால், அப்பிள்ளைகளுக்குப் பின் விளையும் பெருந்துன்பத்துக்குத் தாய் தந்தையர்களே காரணராவார்கள்.

களவு செய்தவரையும், களவுக்கு உபாயஞ் சொன்ன வரையும், களவு செய்தவருக்கு இடங்கொடுத்தவரையும், நரகத்திலே இயமதூதர்கள், அவயங்களெங்கும் இருப்பு முளைகளை அறைந்து, வருத்துவார்கள், பாசத்தினாலே அவயவங்களெல்லாவற்றையுங் கூட்டிக்கட்டி, அக்கினி நரகத்திலே, குப்புறப்போடுவார்கள். அவர்கள் நெடுங்காலம் நரகத் துன்பம் அனுபவித்த பின்பு, பூமியிலே பிறந்து, குட்டம், காசம், வாதம், மூலரோகம் முதலிய நோய்களினாலே வருந்துவார்கள்.

## பிறன்மனை நயத்தல்

வியபிசாரமாவது காம மயக்கத்தினாலே தன் மனையாளல்லாத மற்றைப் பெண்களை விரும்புதல். மற்றைப் பெண்கள் என்பது கன்னியரையும் பிறன் மனைவியரையும் பொதுப் பெண்களையும். பிறன் மனையாளை விரும்புவோரிடத்தே தருமமும் புகழும் சிநேகமும் பெருமையுமாகிய நான்கும் அடையாவாம். அவரிடத்தே குடி புகுவன பாவமும் பழியும் பகையும் அச்சமுமாகிய நான்குமாம். ஒருவன் தன் மனையாளைப் பிறன் விரும்புதலை அறியும் பொழுது தன் மனம் படுந்துயரத்தைச் சிந்திப்பானாயின், தான் பிறன் மனையாளை விரும்புவானா! விரும்பானே.

## பொய்

பொய்யாவது உள்ளதை இல்லதாகவும் இல்லதை உள்ளதாகவும் சொல்லல். பொய் மிக இழிவுள்ளது. ஒரு பொய் சொன்னவன், அதைத் தாபிக்கப்புகின், ஒன்பது பொய் சொல்லல் வேண்டும். "நான் சொன்ன பொய்யைப் பொறுத்துக் கொள்ளல் வேண்டும்" என்பானாயின், ஒன்றுடனொழியும். பொய் சொல்லத் துணிகின்றவன் களவு முதலிய தீமைகளைச் செய்தற்கு அஞ்சான். பொய் சொல்லலாகிய பாவமொன்றை ஒழிப்பின், அதுவே வழியாக மற்றைப் பாவங்களெல்லாம் தாமே ஒழிந்துவிடும். பொய்யன் மெய்யைச் சொல்லுகிற பொழுதும் பிறர் அதனை நம்பார். ஆதலால், விளையாட்டுக்காயினும் பொய் சொல்லலாகாது.

மெய் சொல்லுகிறவனுக்கு அதனால் ஒரு கேடு வந்த தாயினும், அவனுள்ளத்திலே மகிழ்ச்சி உண்டாகும். அவன் பகைவர்களும் அவனை நன்கு மதிப்பார்கள். பிறராலே நன்கு மதிக்கப்படவும் தன்காரியம் சித்திபெறவும் விரும்புகின்றவன் எப்பொழுதும் தன்மானத்தோடு பொருந்த மெய்யே பேசல் வேண்டும். ஒருவன் தன் மனம் அறிந்ததொன்றைப் பிறர் அறிந்திலர் என்று பொய் சொல்லாதிருக்கக்கடவன். பொய் சொன்னானாயின், அவன் மனமே அப்பாவத்துக்குச் சாக்ஷியாய் நின்று அவனைச் சுடும்.

உண்மை சொல்பவன் இம்மையிற் பொருளையும் மறுமையிற் புண்ணிய லோகத்தையும் அடைவான். சத்தியமே, மேலாகிய தானமும் தவமும் தருமமுமாம். எவனுடைய புத்தி சத்தியத்தில் நிற்குமோ அவன் இகத்திலே தெய்வத் தன்மையை அடைவன். சத்தியத்தின் மிக்க தருமமும் அசத்தியத்தின் மிக்க பாவமும் இல்லை.

பொய்ச்சான்று சொன்னவரும், பொய்வழக்குப் பேசின வரும், வழக்கிலே நடுவுநிலைமையின் வழுவித் தீர்ப்புச் செய்தவரும், ஏழுபிறப்பில் ஈட்டிய எல்லாப் புண்ணியங்களையும் கெடுத்தவராவர். பிரமவதையும், சிசுவதையும் தந்தைவதையும் செய்தவராவர். மிகக் கொடிய ரௌரவ முதலிய நரகங்களை அடைவர். அவரை இயமதூதர்கள் வாயிலே அடித்து, அவருடைய நாக்கையும் அறுத்து, பல துக்கங்களையும் உறுவிப்பார்கள். பின்னும் ஊர்ப்பன்றி, கழுதை, நாய், நீர்க்காக்கை, புழு என்னும் பிறப்புக்களிற் பிறந்து, பின்பு மனிதப் பிறப்பிலே பிறவிக்குருடரும், செவிடரும், குட்டநோயினரும், வாய்ப்புண்ணினரும், ஊமைகளுமாய்ப் பிறப்பர். மிக்க பசிதாகமுடையவராகித் தம் பகைவர் வீட்டிலே தம் மனைவியரோடும் பிச்சையிரந்து உழல்வர்.

பிறன் மனையாளை விரும்பாத ஆண்மையே பேராண்மை. பிறராலே "இவன் பரதாரசகோதரன்" எனப்படுதலே பெரும்புகழ். இப்பேராண்மையையும் பெரும்புகழையும் உடைய மகாவீரனை அவன் பகைவரும் அவன் இருக்குந் திக்கு நோக்கி வணங்குவர். இவ்வாண்மையும் புகழும் இல்லாதவரை, அவருக்குக் கீழ்ப்பட்டோராகிய மனைவியர் பிள்ளைகள் வேலைக்காரர் முதலாயினோரும், நன்கு மதியார். அச்சத்தாலும் பொருளாசையாலும், அவரெதிரே நன்குமதிப்பார் போல நடிப்பினும், தமது உள்ளத்தினும் அவரெதிரல்லாத புறத்தினும் அவமதிப்பே செய்வர். வியபிசாரஞ் செய்வோர் தாமாத்திரமன்றித் தங்கீழுள்ளாரும் வியபிசாரஞ் செய்து கெடுதற்குக் காரணராவர். ஒழுக்கமுடையார் வாய்ச்சொல் அவரின் மூத்தோரிடத்துஞ் செல்லும். ஒழுக்கமில்லாதார் வாய்ச்சொல் அவரின் இளையோரிடத்துஞ் செல்லாது. ஆதலினால், ஒழுக்கமில்லாதவர் பிறரைத் திருத்துதற்கும் வல்லராகார்.

தூர்த்தர்களோடு பழகுதலும், பெண்களுடைய கீதத்தைக் கேட்டலும், பெண்களுடைய நடனத்தைப் பார்த்தலும், சிற்றின்பப் பாடல்களைப் படித்தல் கேட்டல்களும், பார்க்கத் தகாத படங்களையும் பிரதிமைகளையும் பார்த்தலும், பொதுப் பெண்களுடைய தெருவுக்குப் போதலும், பெண்கள் கூட்டத்திலே தனித்துப் போதலும், பெண்களோடு சூது சதுரங்கம் முதலியவை ஆடுதலும் வியபிசாரத்துக்கு ஏதுக்களாம். உயிர்க்கு உறுதி பயக்கும் நூல்களைப் படித்தல் படிப்பித்தல் கேட்டல்களிலும், கடவுளுக்குத் திருத்தொண்டுகள் செய்தலிலும், தரும வழியாகப் பொருள் சம்பாதித்தலிலுமே காலத்தைப் போக்கல்வேண்டும். வயசினாலும் நல்லறிவினாலும் நல்லொழுக்கத்தினாலும் முதிர்ந்த பெரியோரோடு கூடல் வேண்டும். சிறிது நேரமாயினும் சோம்பலாய் இருக்கலாகாது. சோம்பேறிக்கு அச்சோம்பல் வழியாகவே, தீச்சிந்தை நுழையும். அத்தீச்சிந்தை வியபிசாரத்துக்கு ஏதுவாகும்.

வியபிசாரமே கொலைகளுக்கெல்லாம் காரணம். வியபிசாரமே களவுகளுக்கெல்லாம் காரணம். வியப்பிசாரமே அறிவை மயக்கும் பொருள்களாகிய கள்ளு, அவின், கஞ்சா முதலியவைகளை உண்டற்குக் காரணம். வியபிசாரமே பொய் சொல்லற்குக் காரணம். வியபிசாரமே சண்டைக்குக் காரணம். வியபிசாரமே குடும்ப கலகத்திற்குக் காரணம். வியபிசாரமே வியாதிகளெல்லாவற்றிற்குங் காரணம். வியபிசாரமே திரவிய நாசத்திற்குக் காரணம். வியபிசாரமே சந்ததி நாசத்திற்குக் காரணம்.

பிறன் மனையாளைக் கூடினவர் நரகத்திலே அக்கினி மயமாகிய இரும்புப் பாவையைத் தழுவி வருந்துவர். இயமதூதர்கள் அவரை இரும்புக் குடத்தினுள்ளே புகுத்தி அதன் வாயை அடைத்து, அக்கினிமேல் வைத்து எரிப்பார்கள். அவர் சரீரத்தை உரலிலிட்டுஇடிப்பார்கள் அக்கினிமயமாகிய சிலையிலே சிதறும்படி அறைவார்கள். இருட்கிணற்றிலே விழுத்துவார்கள் அங்கே இரத்தவெள்ளம் பெருகும்படி கிருமிகள் அவருடம்பைக் குடையும். பின்னும் அவர் அக்கினி நரகத்திலே வீழ்த்தப்பட்டு "என் செய்தோம் என் செய்தோம்" என்று நினைந்து நினைந்து அழுங்குவர்.

பிறன் மனையாளை இச்சித்துத் தீண்டினவரை, நரகத்திலே இயமதூதர்கள் அக்கினியிற் காய்ச்சிய ஊசிகளினாலே குத்துவார்கள் அவருடம்பிலே தாமிரத்தை உருக்கி வார்ப்பார்கள் அவரை மற்ற நரகங்களிலும் விழுத்தி வருத்துவார்கள். பிறன் மனையாளை இச்சித்துப் பார்த்தவருக்குக் கண்களிலே அக்கினியிற் காய்ச்சிய ஊசிகளினாலே குத்தி, முற்கூறிய மற்றைத் துயரங்களையுஞ் செய்வார்கள்.

வியபிசாரஞ் செய்தவர் பிரமேகம், கிரந்தி, பகந்தரம், கல்லடைப்பு, நீரிழிவு முதலிய வியாதிகளினால் வருந்துவர். பிறன் மனையாளை இச்சித்துப் பார்த்தவர் நேத்திர ரோகங்களினால் வருந்துவர்.

## பசுக்காத்தல்

பசுக்கள் நந்தை, பத்திரை, சுரபி, சுசீலை சுமனை என ஐந்து வகைப்படும். அவைகளுள், நந்தை கபில நிறமும் , பத்திரை கருநிறமும், சுரபி வெண்ணிறமும், சுசீலை புகை நிறமும், சுமனை செந்நிறமும் உடையனவாம். பசுக்கள் இம்மை மறுமை இரண்டினும் பயனைத்தரும். பசுக்களுக்கு சாலையை விதிப்படி செய்வித்து, ஆற்றுமண், ஓடைமண், புற்றுமண், வில்வத்தடிமண், அரசடிமண் என்பவைகளால் நிலம்படுத்தல் வேண்டும். முதிர்கன்று, இளங்கன்று, நோயுற்ற கன்று என்னும் இவைகளுக்கு இடங்கள் வெவ்வேறாக அமைத்தல் வேண்டும். நாடோறும் கோசல கோமயங்களைப் புறத்தே நீக்கிச் சுத்தி செய்தல் வேண்டும். கொசுகு வராமல் தூபம் இடல் வேண்டும். தீபங்கள் ஏற்றல் வேண்டும்.

பசுக்களை இயக்குமிடத்து, சிறிதும் வருத்தஞ் செய்யாமல், இரக்கத்தோடும் பலாசங்கோலினாலே மெல்ல ஓங்கி, போ போ என்று இயக்கல்வேண்டும். இரக்கமின்றிக் கோபித்து அதட்டி அடிப்பவர் நரகத்தில் வீழ்வர் பசுக்களை, சாலையினுள்ளே சுவத்தி என்னுஞ் சொல்லை சொல்லி, மெல்ல மெல்லப் புகுவித்து, சிரத்தையோடும் புல்லைக் கொடுத்தல் வேண்டும். நோயுற்ற பசுக்களுக்கு வேறிடம் அமைத்து, மருந்து கொடுத்து பேணல் வேண்டும். பசுக்களை வேனிற் காலத்திலே சோலைகளிலும், மழைக்காலத்திலே மலைச்சாரல் வனங்களிலும், பனிக்காலத்திலே வெய்யில் மிகுந்த வெளிகளிலும், இடர் உறாவண்ணம் மேய்த்தல் வேண்டும்.

பசுக்களை வலஞ்செய்து வணங்கித் துதித்துப் புல்லுக் கொடுத்தலும், ஆவுரிஞ்சுகல் நாட்டுதலும், கடவுளுக்கும் ஆசாரியருக்கும் பசுவைத் தானஞ்செய்தலும், குற்றமற்ற இலக்கணங்களையுடைய இடபத்தைக் கடவுள் சந்நிதிக்குத் தானஞ் செய்தலும், தேவாலயத் திருப்பணியின் பொருட்டுச் சகடத்திற்கு எருது கொடுத்தலும், இளைத்த பசுவைக் கண்டு இரங்கித்தாம் வாங்கி வளர்த்தலும் பெரும் புண்ணியங்களாம்.

பசுக்கள் தரும் பால், தயிர், நெய்,கோசலம், கோமயம் என்னும் பஞ்சகவ்வியங்களையும் கடவுளுக்கு அபிஷேகம் பண்ணுவித்தல் வேண்டும். பாலை, இரண்டுமாசம்

செல்லும் வரையும் கன்று பருகும்படி விட்டு, பின் கறந்து கடவுளுக்கு அபிஷேகம் பண்ணுவித்தல் வேண்டும். கன்று பாலுண்டு முலையை விடுத்தபோது சலத்தினாலே முலையைக் கழுவிக் கறத்தல் வேண்டும். ஆசை மிகுதியினாலே கன்றுக்குப் பால்விடாது கறந்தவன் நரகத்தில் வீழ்ந்து நெடுங்காலம் வருந்தி, பின்பு பூமியிலே பிறந்து கடும் பசியினாலே வீடுகடோறும் இரப்பன். கபிலையின் பாலைக் கடவுளுக்கே கொடுக்க அதனைத் தாம் பருகில் நரகத்து வீழ்வர். புலையர்கள் பசுக்களின் சாலையிலே புகுந்தார்களாயின், எண்ணில்லாத காலம் எரிவாய் நரகத்து வீழ்ந்து வருந்துவார்கள் அவர்களுக்குப் பரிகாரமில்லை. பசுக்களை இடர் நீங்கக் காக்காதவர்களும், மலட்டுப்பசுவின் மேலேனும் இடபத்தின் மேலேனும் பாரம் ஏற்றினவர்களும், இடபத்தில் ஏறினவர்களும் நரகத்தில் வீழ்வார்கள்.

## பெரியோரரைப் பேணல்

பிதா, மாதா, பாட்டன், பாட்டி, மாமன், மாமி, தமையன், தமக்கை, தமையன் மனைவி, உபாத்தியாயர், குருமுதலாகிய பெரியோர்களை அச்சத்தோடும் அன்போடும் வழிபடல் வேண்டும். அவர்கள் குற்றஞ் செய்தார்களாயினும், அதனைச் சிறிதும் பாராட்டாது பொறுத்துக் கொள்ளல் வேண்டும். இராசா யாது குற்றஞ் செய்யினும் அவனோடு சிறிதும் எதிர்க்காது அவனுக்கு அடங்கி நடத்தல் போலவே பிதா மாதா முதலாயினோருக்கும் அடங்கி நடத்தல் வேண்டும்.

பிதா மாதா முதலாயினோர் முட்டுப்படாவண்ணம் இயன்றமட்டும் அன்னவாஸ்திர முதலியவை கொடுத்து, அவர்களை எந்நாளும் பாதுகாத்தல் வேண்டும். அவர்களுக்கு வியாதி வந்தால், உடனே மனம் பதைபதைத்துச் சிறந்த வைத்தியரைக் கொண்டு மருந்து செய்வித்தல் வேண்டும். அவர்கள் ஏவிய ஏவல்களைக் கூச்சமின்றிச் செய்தல் வேண்டும். பிள்ளைகள் தங்கள் கல்விக்கும் நல்லொழுக்கத்துக்கும் இடையூறாகப் பிதா மாதாக்கள் சொல்லுஞ் சொற்களை மறுத்தல் பாவமாகாது. "தந்தை தாய் பேண்" என்னும் நீதிமொழியைச் சிந்தியாது, மூடர்கள் அநேகர் தங்களை மிக வருந்திப் பெற்றுவளர்த்த பிதா மாதாக்கள் பசித்திருப்பத் தாமும் தம்முடைய பெண்டிர் பிள்ளைகளும் வயிறு நிறையப் புசித்துக்கொண்டு, தம்மையும் பொருளாக எண்ணி, தமக்கு வரும் பழிபாவங்கட்கு அஞ்சாது திரிகின்றார்கள். பிதா மாதாக்களையும் சுற்றத்தாரையும் வஞ்சித்து அன்னியர்களுக்கு உதவி செய்கின்றார்கள்.

பிதா மாதா முதலாயினோர் இறக்கும்பொழுது அவரைப் பிரியாது உடனிருத்தல் வேண்டும். அவர் மனம் கலங்கும்படி அவரெதிரே அழலாகாது. அவர் மனம் கடவுளுடைய திருவடியிலே அழுந்தும்படி, அறிவொழுக்கமுடையவரைக் கொண்டு அருட்பாக்களை ஓதுவிக்கவும் நல்லறிவைப் போதிப்பிக்கவும் வேண்டும். அவர் இறந்த பின்பு உத்தரக்கிரியைகளை உலோபமின்றித் தம் பொருளளவுக்கு ஏற்ப, விதிப்படி சிரத்தையோடு செய்து முடித்தல் வேண்டும். வருடந்தோறும் அவர் இறந்த திதியிலும் புரட்டாசி மாசத்திலும் சிரார்த்தம் தவறாமற் செய்தல் வேண்டும். அநேகர் தங்கள் பிதா மாதாக்கள் சீவந்தர்களாய் இருக்கும்பொழுது அவர்களை அன்னவஸ்திர முதலியவை கொடுத்துப் பேணாது அவர்களுக்குத் துன்பத்தையே விளைவித்து, அவர்கள் இறந்தபின்பு உத்தரக்கிரியைகளை உலகத்தார் மெச்சும் பொருட்டு வெகு திரவியஞ் செலவிட்டுச் செய்கின்றார்கள். ஐயையோ இது எவ்வளவோரறியாமை! இச்செய்கையால் வரும்பயன் யாது? உத்தரக்கிரியைச் சிறிது பொருள் செலவிட்டும் செய்யலாம், அதற்குச் சிரத்தையே முக்கியம். பிதா மாதாக்கள் சீவந்தர்களாய் இருக்கும்பொழுது அவர்களை முட்டுப்படாவண்ணம் அன்னவஸ்திரங் கொடுத்துப் பாதுகாத்தலிலே இயன்றமட்டும் பொருள் செலவிடுதலே ஆவசியம்.

பிதா மாதா முதலிய பெரியோர்களைக் கடுஞ்சொற் சொல்லிக் கோபித்து உறுக்கிய பாவிகள், நரகத்திலே தங்கள் முகத்தை அட்டைகள் குடைந்து இரத்தங்குடிக்க, அதனாற் பதைத்து விழுவார்கள். பின்பு அவர்கள் சரீரம் நடுங்கி அலறும்படி இயமதூதர்கள் சுடுகின்ற காரநீரையும் உருக்கிய தாமிர நீரையும் அவர் கண்மீது வார்ப்பார்கள். அப்பெரியோர்களுக்கு ஏவல் செய்யக் கூசின பாவிகளுடைய முகத்தை இயமதூதர்கள் குடாரியினாலே கொத்துவார்கள் அப்பெரியோர்களைக் கோபத்தினாலே கண் சிவந்து ஏறிட்டுப் பார்த்தவர்களுடைய கண்களிலே இயமதூதர்கள் அக்கினியிற் காய்ச்சிய ஊசிகளை உறுத்திக் காரநீரை வார்ப்பார்கள்.

பிதா மாதா முதலாயினோரை நிந்தித்தவர்களையும், அவர்களைப் பேணாது தள்ளிவிட்டவர்களும், பைத்தியத்தினாலும், நாக்குப் புற்றினாலும், நேத்திர ரோகத்தினாலும், காலிற்புண்ணினாலும், சர்வாங்க வாயு ரோகத்தினாலும், பெருவியாதியினாலும் வருந்துவர்கள். பிதா மாதா முதலாயினோரைப் பேணாதவர்களும் உபாத்தியாயருக்குக் கொடுக்கற்பாலதாகிய வேதனத்தைக் கொடாதவர்களும், குருவுக்குக் கொடுக்கற்பாலதாகிய காணிக்கையைக் கொடாதவர்களும், தரித்திரர்களாய்ப் பசியினால் வருந்திப் பெண்டிரும் பிள்ளைகளும் கதற இரக்கத்தகாத இடங்களெல்லாம் பிச்சையிரந்து உழல்வார்கள்.

பிதா மாதாக்களுக்குச் சிரார்த்தஞ் செய்யாதவர்களும், புரட்டாதி மாசத்திலே மகாளய சிரார்த்தஞ் செய்யாதவர்களும், சிரோரோகங்களினால் வருந்துவார்கள் புலவர்களாயினும், ஞானிகளாயினும், மூடர்களாயினும், பெண்களாயினும், பிரமசாரிகளாயினும், இறந்த தினச் சிராத்தத்தைச் செய்யா தொழிந்தால், கோடி சனனத்திலே சண்டாளராவார்கள்.

எவன் தன்னுடைய தாய் தந்தை முதலிய பந்துக்கள் வறுமையினால் வருந்தும்போது இம்மையிலே புகழின் பொருட்டு அன்னியர்களுக்குத் தானங்கொடுக்கின்றானோ, அந்தத் தானம் தருமமன்று. அது முன்பு தேன்போல இனிதாயிருப்பினும், பின்பு விஷம் போலத் துன்பப்படுத்தும். பார்க்கும்போது புகழுக்கு ஏதுப்போலத் தோன்றினும் பின்பு நரகத் துன்பத்துக்கே ஏதுவாகும் என்பது கருத்து. எவன் தான் ஆவசியகமாகப் பாதுகாக்க வேண்டிய மனைவி பிள்ளை முதலாயினோரைத் துன்பப்படுத்திப் பரலோகத்தின் பொருட்டுத் தானஞ் செய்கின்றானோ, அந்தத் தானமும் அவனுக்கு இம்மையிலும் மறுமையிலும் துன்பத்தையே விளைவிக்கும்.



# “சைவம் வளர்த்த பெண்கள்”

# மங்கையர்க்கரசியார்




“வரிவளையாள் மானிக்கும் (நேசனுக்கும்) அடியேன்”
அவதார தலம் - பழையாறை
முக்தி தலம் - மதுரை
குருபூசை திருநட்சத்திரம்-சித்திரை, ரோகிணி

மங்கையற்கரசியார் சோழமன்னனின் தவக் கொழுந்தாய் அவதரித்தார். அவரது இயற்பெயர் மானி. மங்கையரில் அரசி என்று சமய முதற்குரவரான சம்பந்தர் பெருமானால் மங்கையர்க்கரசி என்று போற்றப்பெற்றவர் அது போதாதென்று சேக்கிழாரடிகள் மங்கையர்க்குத் தனியரசி என்கிறார் .

அவர் சைவ ஒழுக்கத்தில் சிறந்தவராய் வளர்ந்து திருமணப் பருவம் அடைந்தார். சோழமன்னன் அவரை நின்றசீர்நெடுமாறன் என்னும் பாண்டிய மன்னனுக்குத் திருமணஞ் செய்து வைத்தார்.

பாண்டிய மன்னன் தாம் செய்த தீவினைப் பயனாய் சமணசமயத்தைச் சார்ந்திருந்தான். சமணகுருமாரை அவன் பெரிதும் மதித்தான். குடிகளெல்லாரும் சமணராயினர்.

அரசவையில் குலச்சிறையார் என்னும் ஒரு அமைச்சர் தவிர மற்றையோரோருல்லாம் சமண சயத்தவராகவே இருந்தனர்.இவ்வாறு சமண இருள் சூழ்ந்து சைவம் குன்றியிருந்தமை குறித்து மங்கையர்க்கரசியார் மனம் நொந்தார். சைவர்களைப் பார்த்தாலே கண்டுமுட்டு என்றும் ஐந்தெழுத்தை கேட்டாலே கேட்டுமுட்டு என்றும் தீட்டு என்ற அளவில் சைவம் இருந்தது .அந்த நேரத்தில் அவர் பாண்டி நாடெங்கும் சைவ வாய்மை விளங்க வேண்டுமென்ற பேரவாவுள்ளவராய்

இருந்தார்.இவ்வாறிருக்கும் பொழுது அப்பரும் திருஞானசம்பந்தப்பிள்ளையார் அவர்களும் பாண்டி நாட்டுக்கு அருகில் உள்ள திருமறைக்காடு வந்திருப்பதாகக் கேள்விப்பட்டார். இந்த நற்செய்தியைக் கேள்விப்பட்டதும் தன் மனக்கருத்து நிறைவுள்ளது எனக் களிப்புற்றார் சம்பந்தப்பிளையார் தொலைவில் இருந்தாலும் அவர் தம் திருவடியைக் கும்பிட்டதோர் மகிழ்ச்சி கொண்டார். அமைச்சரான குலச்சிறையாரோடு ஆலோசித்துச் சம்பந்தப் பெருமானிடம் பரிசனத்தாரை அனுப்பி வைத்தார். பரிசனத்தார் சென்று சம்பந்தரை வணங்கி மங்கையற்கரசியாரின் மனக்கருத்தைக் கூறினார்கள். சம்பந்தப் பிள்ளையாரும் பாண்டிநாட்டுக்கு எழுந்தருளத் திருவுளம் பற்றினார்.அப்போது சமணர்களின் துன்மதியை எடுத்துகூறி அப்பர்சுவாமிகள் இப்போது நாளும் கோளும் கூட சரியில்லை. தங்களின் பாண்டிநாட்டுப் பயணத்தை பரிசீலிக்கவேண்டும் என்று சம்பந்தரிடம் கூறினார். அப்போது பிள்ளையார் அவர்கள் நாளும் கோளும் அடியாரை என்ன செய்யும் என்று கோளறுபதிகம் பாடியருளினார். சம்பந்தப்பிள்ளையார் பல திருப்பதிகளையும் வணங்கி மதுரையை நெருங்கிய வேளையில் மங்கையற்கரசியாருக்கு நற்சகுனங்கள் தோன்றின. அப்போது திருஞானசம்பந்த மூர்த்திகள் முத்துச் சிவிகை மீதமர்ந்து சிவனடியார் சூழ மதுரை வந்தடைந்தனர் என்ற செய்தியைக் கண்டோர் வந்து கூறினர். அந்த மங்கலகரமான செய்தியைச் சொன்னோர்க்கு மங்கையற்கரசியார் பரிசில் அளித்து மகிழ்ந்தார். அவ்வேளையில் குலச்சிறையாரும் வந்து அடிபணிந்து நின்றார். அவரிடம் 'நமக்கு வாழ்வளிக்க வந்த வள்ளலை எதிர்கொண்டு அழைத்துவாரும்' எனப் பணித்தார். தாமும் ஆலவாய் அண்ணலை வழிபட்டு வருவதாக அரசனிடம் கூறிச் சென்று நல்வரவளிப்பதற்காகக் காத்து நின்றார்.

ஆலவாயமர்ந்த பிரானை வணங்கும் அன்புறு காதலுடன் வருகின்ற சம்பந்தருக்கு எதிர் செல்லாது மங்கையற்கரசியார் ஒரு புறம் ஒதுங்கி நின்றார். வழிபட்டுத் திருப்பதிகமும் பாடிப் பரவி கோயில்முன் வந்தபோது தலைமிசைக் குவித்தகையராய் முன் சென்றார். பிள்ளையாரது அருகில் நின்ற குலச்சிறையார் முன்வரும் இவரே பாண்டி மாதேவியாரெனக் காட்டியதும் பிள்ளையார் விரைவோடும் அரசியார் பக்கமாகச் சென்றார். தேவியார், சிவக்கன்றின் செங்கமலப் பொற்பாதத்தை வீழ்ந்து வணங்கினார். வீழ்ந்து கும்பிட்டுக் கிடக்கும் மங்கையர்க்கரசியாரைப் பிள்ளையார் பெருகிய அருளோடு கைகளால் எடுத்தார். எழுந்து கையாரத்தொழுது நின்ற அரசியார் கண்ணீர் மல்க நானும் என் கணவரும் செய்த தவம் எவ்வளவு பெரியது என வாய்குழறிக் கூறி நின்றார். பிள்ளையாரும் “பரசமயச் சூழலில் தொண்டராய் வாழும் உங்களைக் காண வந்தோம்” என அருள் மொழி கூறினார்.

பிள்ளையார் அருள் பெற்றுப் பாண்டி நாடு உய்ந்ததென்ற உறுதியோடு அரசியார் அரண்மனை புகுந்தார். அன்று பள்ளியறைக்கு வந்த மன்னன் சோகமாயிருந்தான். அரசியார் “மன்ன!. உமக்கு நேர்ந்ததென்ன?. துயரத்துடன் இருக்கிறீரே என விசாரித்தார். அதற்கு அரசன் “சோழ நாட்டுச் சிவவேதியர் ஒருவர் நமது குருமாரை வாதினில் வெல்ல வந்திருக்கின்றார். அவரை அடிகள் மார் 'கண்டு முட்டு' யான் அதனை 'கேட்டு முட்டு' எனக் கூறினான். 'வாதினில் வென்றவர் பக்கம் சேர்தலே முறை. அதன் பொருட்டுக் கவலை ஏன்?. கவலை ஒழிக' என ஆறியிருக்கச் செய்தார் அரசியார். அரசனுக்கு ஆறுதல் கூறினாரெனினும் அன்றிரவு கவலையுடனேயே இருந்தார். வஞ்சனையால் வெல்ல அமணரால் சம்பந்தப்பிள்ளையாருக்கு என்ன ஆபத்து நேருமோ எனபதே அவர்தம் கவலை. அவ்வாறு

ஆபத்தேதும் நேரின் உயிர் துறப்பதே செய்யத்தக்கது எனும் உறுதியும் பூண்டார்.

அரசியார் அஞ்சியவண்ணமே அன்று இரவு அமணதீயர் ஆளுடைய பிள்ளையார் தங்கியிருந்த திருமடத்துக்குத் தீ வைத்தனர். இச்செய்தி மானியாருக்கு எட்டியபொழுது பெரிதும் மனம் வருந்தினார். தாமும் குலச்சிறையாரும் பிள்ளையாரை இத்தீயர் வாழும் நாட்டுக்கு வரவழைத்ததே பெரிதும் பிழையாயிற்று என்றும் இதற்குக் கழுவாய் மாழ்வதே எனவும் துணிந்தார். அப்பொழுது அமணபாதகர் வைத்த தீயால் திருமடத்திற்குத் தீதொன்றும் ஆகவில்லை என்றறிந்து ஆறுதலுற்றார். இந்நிலையிலே மன்னன் வெப்புநோய் பற்றி வருத்தும் செய்தியைக் காவலாளர் வந்து கூறினர். அதுகேட்ட அரசியார் விரைந்து அரசனிடம் சென்றார். மருத்துவராலும் அமண் அடிகளின் மந்திரத்தாலும் வெப்பம் சிறிதும் தணியாது அரசன் வருந்துவது கண்டு அச்சமுற்றார். பிள்ளையார் பொருட்டு வைத்த தீயே இப்படி வெப்புநோயாக வருத்துகிறதென எண்ணியவராய் "திருஞானசம்பந்த மூர்த்தி சுவாமிகளை அழைத்தாலே இந்நோய் தீரும்" எனக் கூறினார். "ஞானசம்பந்தன்" எனும் நாமமந்திரம் காதில் புகுந்த அளவில் அயர்வு நீங்கி உணர்வு பெற்ற பாண்டியன் 'அவரை அழைப்பீராக'எனப் பணித்தான். அரசியார் அமைச்சருடன் அணையுடைத்துப் பாயும் வெள்ளம் போன்றதோர் அன்பு வெள்ளத்துடன் ஆளுடையபிள்ளையார் தங்கியிருக்கும் திருமடத்தை அடைந்தார். அங்கு ஞானத் திருவுருவாயும், வேதகாவலராக வும், மண்ணில் வளரும் மதிக்கொழுந்தாகவும், அரனாரது சீர் பாடும் ஏழிசை அமுதமாயும் தோன்றிய சிவபுரப்பிள்ளையைக் கண்களிப்பக் கண்டார். இச்சிவம்பெருக்கும் பிள்ளைக்கு அமணர் செய்த ஆபத்தை நினைத்துச் சலிப்படைந்து அவர் திருவடிகளில் வீழ்ந்து அழுதரற்றினார். பிள்ளையார் 'தீங்குளவோ?' என வினவினார். அரசியார் 'சமணர் செய்த தீச்செயல் அரசனுக்குத் தீப்பிணியாய்ப் பற்றியது. அப்பிணி தீர்த்து எமதுயிரும் மன்னவனுயிரும் காத்தருள வேண்டும்' எனவேண்டினார் . ஆளுடைய பிள்ளையார் 'நீர் ஒன்றும் அஞ்ச வேண்டாம், அமணரை வாதில் வென்று அரசனைத் திருநீறு அணிவிப்பேன்' என உறுதி மொழி கூறினார்.

சம்பந்தப்பிள்ளையார் முத்துச்சிவிகையிலேறி அரண்மனைக்கு எழுந்தருள அரசியாரும் சிவிகையிலேறி அரண்மனை வந்தார். பாண்டியமன்னன் சம்பந்தப் பிள்ளையாருக்குத் தனது தலைப்புறமாக ஓர் பொன்னாசனம் காட்டினான். பொற்பீடத்தே வீற்றிருக்கும் சம்பந்தரைக் கண்டு பொறாத சமணர்கள் குரைத்தனர். ஏராளமானோர் பிள்ளையாரைச் சூழ்ந்து பதறிக்கதறும் கொடுமை கண்டு மங்கையற்கரசியார் அரசனிடம் "இப்பாலகரை அமணர்கள் திரளாகச் சூழ்ந்து கதறுவது அழகன்று உங்கள் தீப்பிணியைப் பிள்ளையார் தீர்த்த பிறகு சமணர் வல்லமையுடையவரா என வாது செய்யலாம்" எனக் கூறினர். அரசன் அதுவே நன்றென்று அமணரை நோக்கி "நீங்கள் செய்யத்தக்க வாது என் சுரநோயைத் தீர்த்தலே. அதனைச் செய்யுங்கள்" எனக் கூறினான். சமணரது மருந்து மந்திரமெல்லாம் மேலும் சுரத்தை அதிகரிக்கவே செய்தன. சம்பந்தப்பிள்ளையார் திருநீற்றுப்பதிகம் பாடிப் பூசிய திருநீறு மன்னனைக் குணமாக்கியது. அமணர்கள் இவ்வாதத்தில் தோற்றதுடன் அனல்வாதம், புனல்வாதம் என அனைத்திலும் தோற்றுக் கழுவேறினர். பாண்டியமன்னனுக்குப் பரமசமய கோளரியார் திருநீறு அளித்தார். அதுகண்டு மதுரை மாநகர மாந்தரெல்லாம் மங்கல திருநீறணிந்து சைவராயினர். தம்மனக்கருத்து முற்றிய மங்கையற்கரசியார், சம்பந்தப் பெருமான், பாண்டியமன்னன், அமைச்சர் குலச்சிறையார் ஆகியோரோடு அங்கயற்கண்ணி உடனமர்ந்த திருஆலவாய் அண்ணலை வழிபட்டு மகிழ்ந்தனர்.

சம்பந்தப்பிள்ளையார் ஆலவாய்ப் பெருமானை வழிபட்டிருந்த நாளெலாம் மங்கையற்கரசியாரும் சென்று அவர்தம் திருவடிகளை வழிபடும் பாக்கியம் பெற்றார். சம்பந்தப் பிள்ளையார் தென்தமிழ் நாட்டுத் திருத்தலங்கள் பலவற்றையும் வழிபடும் ஆராக்காதலால் புறப்பட்ட பொழுது பாண்டிமாதேவியாரும், மன்னன், மந்திரியார் ஆகியோரும் அவருடன் சேர்ந்து சென்றனர். திருப்பரங்குன்றம் ஆகிய தலங்களை வழிபட்டுக் குலச்சிறையார் அவதரித்த தலமாகிய திருமணமேற்குடியைச் சென்றடைந்தனர். அத்தலத்தை வழிபட்ட பின் சம்பந்தப்பெருமான் சோழநாட்டுத்தலங்களை வழிபடப் புறப்பட்டார். மங்கையற்கரசியாரும் அவருடன் சேர்ந்தோரும் பிள்ளையாருடன் செல்ல முற்பட்டனர். பிள்ளையார் அவர்களின் பேரன்பிற்கு கட்டுப்பட்டவராயினும் அவர்களது கடமையினை வற்புறுத்தும் முறையில் "நீங்கள் பாண்டிநாட்டிலிருந்து சிவநெறியைப் போற்றுவீராக" எனப் பணித்தருளினார். அவர்களும் ஆளுடைய பிள்ளையாரின் ஆணையை மறுத்தற்கஞ்சி தொழுது நின்றனர். பிள்ளையார் விடைபெற்று சோழநாடு சென்றதும் மதுரை வந்து சிவநெறி பற்றி போற்றி இருந்தனர்.

அப்பர் சுவாமிகள் திருவாலவாய் இறைவரைத் தரிசித்திருந்த காலத்தில் தாமும் கணவரோடு சென்று அவர் திருப்பாதத்தைப் பணியும் பாக்கியம் பெற்றார்.

மன்னனுக்கு நெடுங்காலம் சைவவழித் துணையாயிருந்த மங்கையற்கரசியார் மன்னவனோடு ஈசன் இணையடி அடைந்தார்.

மங்கையர்க்குத் தனியரசி எங்கள் தெய்வம்
வளவர் திருக்குலக்கொழுந்து வளைக்கை மானி
செங்கமலத் திருமடந்தை கன்னி நாடாள்
தென்னர்குலப் பழிதீர்த்த தெய்வப் பாவை
எங்கள்பிரான் சண்பையர்கோன் அருளி னாலே
இருந்தமிழ்நாடு உற்ற இடர் நீக்கித் தங்கள்
பொங்கொளிவெண் திருநீறு பரப்பி னாரைப்
போற்றுவார் கழலெம்மாற் போற்ற லாமே.

தெய்வச் சேக்கிழார் தென்னர் பழி தீர்த்த தெய்வப்பாவை என்று பாடினார் என்றால் அவர்தம் பெருமையை யார் அளவிட முடியும்

*-நன்றி : 'சிவனடிமை'*




# பரமபதியிடம் பேரன்பு


(சண்டேசுர நாயனார் சரிதம்.)

(பரம்பொருள் பாதம் பணிந்து அவர் மீது மனம் ஒன்றிவிட்டால் எம்முன் தோன்றும் இடையூறுகள் யாவற்றிலுமிருந்து இறைவனே தாயாகவும் தந்தையாகவும் நின்று காத்தருள்வார்.)

திருச்சேய்ஞலூரிலே ஒரு புண்ணியப் புதல்வர் இருந்தர். அவர் பெயர் விசாரசருமர். விசாரசருமர் ஏழாம் வயதடைந்த போது அவருக்கு வேத சிவகாமங்களை நன்கு பயின்றிருந்தார். அதனால் அவைகளை ஆசிரியர். கற்பிக்கும் முன்னரே தாமே அறியும் ஆற்றல் பெற்றிருந்தார். இவரது ஆசிரியர் இவர் அறிவைக் கண்டு பேராச்சரியமடைந்தார்.

ஒரு நாள் விசாரசருமர், வேதம் படிக்கும் பிராமணச் சிறுவர்களுடன் வழியிற் சென்று கொண்டிருந்தார். அப்போது அவ்வூர்ப் பிராமணர்களின் பசுக்களை மேய்க்கும் இடையன், ஈற்றுப் பசுவைப் பலமாக அடிப்பதைக் கண்டார். அவர் அப்பசுவை மேலும் அடியாதவாறு விரைந்து சென்று அவனைத் தடுத்தார். இடையனைப் பார்த்து 'என்ன பாதகஞ் செய்தாய் பசுக்களின் உறுப்புக்கள் ஒவ்வொன்றிலும் தேவர்களும், தீர்த்தங்களும் இருப்பதை நீ அறியாயோ? பரமபதியாக சிவபிரானுக்கு அபிடேக பொருளைத் தருபவைகளும் பசுக்களல்லவா? எங்கள் பவாங்களை நாசஞ்செய்யும் விபூதிக்கு காரணமாகிய சாணத்தை தருபவைகளும் அவ்வைகளன்றோ. இத்துணைச் சிறந்த பசுக்களை கண் கண்ட தெய்வமாகக் கருதி நாம் வணங்க வேண்டியது அவசியமல்லவா? அவற்றை அடித்த நீ அவற்றை மேய்க்கும் தகுதியுடையவனல்லன். இன்று தொடக்கம் நானே மேய்ப்பேன் ' என்று கூறினார்.

விசாரசருமர் பசுக்களை மேய்க்கும் அரிய பணியை மேற்கொண்டார் மண்ணியாற்றங்கரையிலுள்ள சோலைகளிலும் வயலோரங்களிலும் பசும்புல்லை நன்றாக மேயவிட்டார் நீர்நிலைகளிலே தண்ணீர் பருகவிட்டு நன்கு காப்பாற்றினார் மாலைப் பொழுதிலே உரிய இடங்களில் அவைகளைச் சேர்த்து தன் வீடு சென்றார். இவ்வாறு அதிக உணவும் ஆதரவுங் கிடைக்கப் பெற்ற பசுக்கள் மிகுந்த அழகுடன் விளங்கி அதிக பாலைப் பொழிந்தன. இது கண்ட பிராமணர் பெருமகிழ்ச்சியடந்தார்.



பசுக்கள் விசாரசருமரிடம் அதிக அன்பு கொண்டன. நாடோறும் அந்த அன்பு முதிர்ந்து வந்தது. அதனால் பசுக்கள் தம் அன்பைப் பொழிந்தன. அதனால் பசுக்கள் தம் அன்பை வெளிபடுத்த விசாரசருமர் முன்னிலையிலே தாமாகவே மடிசுரந்து பாலைப் பொழிந்தன. விசாரசருமரும் முற்பிறவிகளில் நீண்டகாலம் சிவ பூசை செய்து அதில் முதிர்ச்சி பெற்றவர். ஆதலால் அபிடேகத் திரவியமாக பாலை வீண்போக விடாது சிவபிரானுக்கு அபிடேகஞ் செய்யவேண்டுமென விரும்பினார்.

மண்ணியாற்றங் கரையிலே திருவாத்தி மரத்தின் கீழே மணலியாற் சிவலிங்கம் திருக்கோயில் கோபுரம் மதில் என்பன வகுத்தார். பூக்களைப் பறித்து வைத்தார். புதிய குடங்களைத் தேடி வாங்கினார். கறவைப்பசுக்களொவ்வொன்றிடமும் போய் அவற்றின் முலையைத் தீண்டினார். அன்புடையவரான விசாரசருமர் தீண்டிய மாத்திரத்தே அவைகள் பாலை மிகுதியாக பொழிந்தன. விசாரசருமர் குடங்களிற் பாலை நிரப்பி ஆலயத்திற்குக் கொண்டு சென்று அபிடேகம் அருச்சனைகள் புரிந்தார். இவ்வாறு நாடோறும் நிகழ்ந்து வந்தது.

விசாரசருமரும் இப்படிச் செய்து வருதலைக் கண்ட ஒருவன் பிரமாணர்களிடம் போய் உங்கள் பசுக்களை மேய்க்குஞ் சிறுவன் அவற்றின் பாலைக் கறந்து மணலில் ஊற்றி விளையாடுகின்றான்' எனத் தெரிவித்தான். அவர்கள் அவருடைய தந்தையாகிய எச்சதத்தனை அழைத்து உம்முடைய மகன் பசுக்களை அன்புடன் மேய்ப்பவன் போல அவைகளைக் கொண்டு போய்ப் பாலைக் கறந்து மணலில் ஊற்றி விளையாடுகின்றான் என்றார். எச்சத்தன் அதைக் கேட்டுப் பயந்து அவன் செயலை இதுவரை நான் அறிந்திலேன் மன்னித்துக்

கொள்ளுங்கள்.இனியும் அவன் அப்படிச் செய்வானாயின் அக்குற்றம் என்னுடையதே எனக் கூறிச்சென்றான்.

எச்சத்தன் தன் மகன் அறியாதவாறு அவர் மாடுமேய்க்குமிடத்தை அடைந்தான் அங்கே நடப்பதைக் காண விரும்பி ஒரு மரத்திலேறி ஒளித்திருந்தான். விசாரசருமர் மணலினால் சிவலிங்கமைத்தார். புஸ்பங்களையும் பாற் குடங்களையும் கொண்டுவந்து வைத்தார்.

பாற்குடங்களை ஒவ்வொன்றாக எடுத்து அபிடேகம் செய்யத் தொடங்கினார்.இதனைக் கண்ட எச்சதத்தன் அதிக கோபத்துடன் இறக்கி விரைந்து சென்று தன் கையில் உள்ள தடியால் மைந்தன் விசாரசருமருக்கு முதுகிற் பலமுறை அடித்தான்.கொடுமொழிகள் கூறினான் .விசாரசருமரோ திடமான அன்பில் சிவபெருமான் திருவடி ஒன்றிலேயே மனம் அழுந்தி நின்றார்.அதனால் தந்தை செய்த ஒன்றையும் அவர் அறியவில்லை.இதைக்கண்ட எச்சதத்தனுக்கு மேலும் கோபம் அதிகரித்தது.அதனாற் பக்கத்திலிருந்த பாற்குடங்களைக் காலினால் இடறினான்.

பால் சிந்தப்படுதலை, விசாரசருமர் கண்டார். அவ்வாறு அடாத செயல் செய்த காலைத் துண்டிக்க எண்ணங்கொண்டு பக்கத்திற் கிடந்த ஒரு கோலை எடுத்து வீசினார் .எம்பெருமான் திருவருளால் அக் கோல் மழுவாக மாறி எச்சதத்தன் காலைத் துண்டித்தது. விசாரசருமர் தம் வழிபாட்டிற்குரிய தடை நீங்கப்பெற்றார்.முன்போல் மனம் ஒன்றி நின்று வழிபாடு செய்தார்.அப்போது சிவபெருமான் உமாதேவியாரோடு இடப வாகனத்தில் அவர்முன் தோன்றினார்.விசாரசருமர் பேரானந்தவசப்பட்டு நிலைமிசை வீழ்ந்து வணங்கினார்.பரமபதியானவர் அவரைத் தம்முடைய திருக்கரத்தாலெடுத்து எம்மீது கொண்ட பேரன்பினால் உனது தந்தையை வெட்டினாய்.இனி உனக்கு நாமே தந்தையாவோம்" என்று கூறி அவர் திருமேனியைத் தடவி உச்சிமோந்தார். தொண்டர்களுக்கெல்லாம் தலைமையாகிய சண்டேசுர பதவியை அவருக்குக் கொடுத்தார்.

எச்சதத்தன் சிவத்திரவியத்தைச் சிந்திய குற்றம் புரிந்தாலும் அதற்கு ஏற்ற தண்டனையைப் பெற்றுக் குற்றம் நீங்கியவனானான்.அதனாலும் சற்புத்திரனைப் பெற்றமையாலும் சிவலோகஞ் சேரும் பேறுபெற்றான்.

*வந்தமண லாலிங்க மண்ணியின்கட் பாலாட்டும்*
*சிந்தைசெய்வோன் தன்கருமந் தேர்ந்துசிதைப்*
*பான்வருமத்*
*தந்தைதனைச் சாடுதலுஞ் சண்டீச னென்றளிக்*
*கொந்தணவு மலர்கொடுத்தான் கோளியெம்*
*பெருமானே.*

## கயிலாஸ் ஆல(ழ)ம் – நினைவு நிகழ்வு

அகில இலங்கை இந்து மாமன்றமும் ஏனைய இந்து அமைப்புக்களும் இணைந்து "மனித நேய மாமணி" "இறைசிரோரத்தினம்" அமரர் வி. கயிலாசபிள்ளை அவர்களுக்கு அஞ்சலி செலுத்துமுகமாக நடாத்திய அஞ்சலி நிகழ்வும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் 26-03-2017 ஞாயிற்றுக்கிழமை பம்பலப்பிட்டியில் அமைந்துள்ள சரஸ்வதி மண்டபத்தில் நடைபெற்றது.

மாமன்றத் தலைவர் திரு.கந்தையா நீலகண்டன் அவர்களின் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வு, அமரரின் திருவுருவப் படத்திற்கு அஞ்சலி செலுத்தியதுடன் ஆரம்பமானது. தொடர்ந்து மாமன்றத் தலைவரின் தொடக்க உரை நடைபெற்றதுடன் திரு.சந்திரா ஜயரட்ணம், திரு. வே.கந்தசாமி ஆகியோர் உரையாற்றினர். ஞாபகார்த்த நினைவுப்பேருரையினை சைவஞானபானு கலாநிதி ஆறு.திருமுருகன் அவர்கள் நிகழ்த்தினார். அமரரின் ஞாபகார்த்தமாக சிவதொண்டர் அணியைச் சோர்ந்த மு/ திருமுறிகண்டி இந்து வித்தியாலயம், மு/கற்சிலைமடு அ.த.க பாடசாலைகளிலிருந்து தலா பத்து மாணவர்களுக்கு கல்விக்கான புலமைப்பரிசிலாக தவணைக்கு 3000 ரூபா வழங்கப்பட்டது. நிறைவாக அமரரின் சகோதரர் வைத்தியகலாநிதி வி.அம்பலவாணர் அவர்களின் ஏற்புரையுடன் நிகழ்வு நிறைவுபெற்றது.

*பத்திரிகைச் செய்தி*

## ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சைத் திகதியும் இந்துக்களின் மனவேதனையும் – இந்து மாமன்றம் வேண்டுகோள்

ஆகஸ்ட் மாதம் 20ந் திகதி 2017 அன்று புனித நல்லூர்க் கந்தசுவாமி கோயில் தேர்த்திருவிழா நடைபெற உள்ளது. அன்றைய தினம் ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையை நடாத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அறிகின்றோம்.

இது நாட்டில் வாழும் இந்துக்களின் மனதில் வேதனையை உண்டாக்கியுள்ளது. நல்லூர்க் கந்தனின் தேர் உற்சவத்திற்கு நாட்டின் வடபகுதியிலிருந்து மட்டுமல்லாது நாட்டின் அனைத்துப் பகுதிகளிலிருந்தும் இந்துக்கள் தங்கள் பிள்ளைகளுடன் கலந்துகொண்டு வழிபடும் ஒரு புனித பெருந்திருவிழாவாகும்.

எனவே ஆகஸ்ட் 20ந் திகதி ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையை நடாத்தத் தீர்மானித்து இருப்பின் அத்திகதியைப் பிற்போட்டு இந்துக்கள் தமது வழிபாட்டுக் கடமையை ஆற்ற நடவடிக்கை எடுக்குமாறு இலங்கைவாழ் இந்து மக்களின் சார்பில் கேட்டுக் கொள்கின்றோம்.

**26-03-2017 அன்று பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் நடைபெற்ற மனிதநேயமாமனிதர் அமரர் வி.கயிலாசபிள்ளை அவர்களின் அஞ்சலி நிகழ்வும் ஆத்ம சாந்திப்பிரார்த்தனை நிகழ்வும் நடைபெற்றது. அந்நிகழ்வில் அமரரின் தம்பியும் வைத்தியகலாநிதியுமாகிய திரு.வி.அம்பலவாணர் அவர்கள் வழங்கிய ஏற்புரை.**

"மனிதநேய மாமணி" "இறை சிரோரத்தினம்" அமரர் வி. கயிலாசபிள்ளை அவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் முகமாக நடைபெற்றுக் கொண்டிருக்கும் அஞ்சலி நிகழ்விற்கும் ஆத்மசாந்தி பிரார்த்தனைக்கும் வருகை தந்து

சிறப்புச் சொற்பொழிவும் ஆற்றிய சைவஞானபானு செஞ்சொற் செல்வர் கலாநிதி ஆறுதிருமுருகன் அவர்களே!

வர்த்தக சம்மேளனத்தின் முன்னாள் தலைவரும் சீ.ரீ.சீ ஈகிள் காப்புறுதியின் முன்னாள் முகாமைத்துவ பணிப்பாளருமாகிய திரு. சந்திரா ஜயரத்ன அவர்களே!

ஓய்வுபெற்ற பிரதம நீதியரசர் கௌரவ ஸ்ரீபவன் அவர்களே!

அகில இலங்கை இந்து மாமன்றத்தின் தலைவர் திரு கந்தையா நீலகண்டன் அவர்களே!

அமரர் கயிலாசபிள்ளையின் பாரியாரான அண்ணி அபிராமி அவர்களே! அவர்தம் குடும்பத்தினரே!

மற்றும் இன்று எங்கள் அழைப்பை ஏற்று வருகை தந்திருக்கும் பெரியோர்களே, தாய்மார்களே, சகோதர சகோதரிகளே, மாணவச் செல்வங்களே ஏனைய சிறார்களே!

முதலில் உங்கள் எல்லோருக்கும் எனது வணக்கத்தைத் தெரிவிக்கிறேன். நன்றி சொல்வது என்பது ஒரு இலகுவான பணியல்ல. அதுவும் எனது தமையனார் அமரர் கயிலாசபிள்ளை அவர்கள் போன்ற பெரியாருடைய ஆத்மசாந்தி நிழ்வுக்கு வருகை தந்த அனைவருக்கும் நன்றி சொல்வதென்றால் அது ஒரு சாமாநியமான காரியம் அல்ல. நான் எனது பணியைத் தொடங்குகையில் எனது அண்ணா பற்றிய சில வார்த்தைகள்.

என்னிலும் 3 வயதும் 3 மாதமும் மூத்தவரான அவரை உங்களெல்லோரிலும் கூடிய காலமான சுமார் 75 ஆண்டுகள்வரை (அதாவது எனக்கு நினைவு தெரிந்த நாளிலிருந்து) நான் அறிவேன். அறியாப் பருவத்திலே எதற்கும் எனக்குப் போட்டியக காரியங்கள் புரிந்து வந்த அவர் வெகு விரைவில் எனக்கு ஒரு வழிகாட்டியாகவும் நிழலாகவும் மாறிவிட்டார். 1956 இல் ஒரு நாள் கொழும்பு கோட்டை தொடரூந்து நிலையத்தில் நான் தொடரூந்தில் ஏற முயற்சிக்கையில் விழுந்ததைக் கண்ட அண்ணா துடிதுடித்துப் போய்விட்டார். அவருடைய இறுதி மூச்சுவரை அவர் எனக்கு ஒரு ஆலமரமாகவே திகழ்ந்தார்.

அவர் ஆற்றிய பணிகளில் ஒன்றான எமது மூதாதையரால் படைக்கப்பட்ட பழைய மறைந்திருக்கும் படைப்புகளை தேடியெடுத்து மீள் பிரசுரம் மூலம் வெளிக் கொண்டுவந்த தொண்டில் அச்சுப் பிழைகளை சரிபார்க்கும் ஒரு சிறுபணி அவர் எனக்குத் தந்ததுண்டு. அதை எனக்கு ஒரு பாக்கியமாக செய்து வந்தேன். இரண்டு நாட்களுக்கு முன்னர் அவைபோன்ற சில படைப்புகளை அகில இலங்கை இந்து மாமன்ற அலுவலகத்தில் சேர்ப்பித்துள்ளேன் என்பதையும் இங்கு தெரிவிக்கின்றேன். இதைவிட தன்னுடைய சமய மற்றும் சமூகப் பணிகளில் தமிழில் அவசரமாக ஏதாவது தட்டச்சு செய்ய வேண்டியிருந்தால் அந்தப்பணி உடனே எனக்கு கொடுத்துவிடுவார். நானோ எனது மனைவியோ தேவையறிந்து அப்பணியை நிறைவேற்றி விடுவோம்.

பிறப்பிலே நான் அவருடைய தம்பி. சமய மற்றும் மனிதநேயப் பணிகளிலே அவருக்கு தம்பிமார்கள் பலர். அவர்களுள் பிரதானமானவர் தம்பி கந்தையா நீலகண்டன் என்று சொன்னால் மிகையாகாது. பல்லாண்டுகளாக அண்ணாவும் நீலகண்டனும் முறையே தலைவராகவும் செயலாளராகவும் பணியாற்றிய அமைப்புகள் இதற்கு சான்றாகும். பெரியவருடைய பணிகள்பற்றி இன்று எழுத்து மூலமாகவும் சொற்பொழிவுகளின் ஊடாகவும் நீங்கள் அறிந்துள்ளீர்கள். நான் கூறித் தெரிய வேண்டியது அதிகம் இல்லை.

கடந்த இரண்டு வருடங்களிற்கு மேலாக அண்ணா கடும் சுகவீனமுற்று இருந்த வேளையில் அவருக்கு சுகம் வருவதற்காக மருமகன் வைத்திய கலாநிதி சிவா செல்லையா அவர்கள் கடமையே கண்ணாக ஆற்றிய உதவிகளை குடும்பத்தினர் அனைவரும் இத்தருணத்தில் நினைவு கூரவேண்டும். அவருக்கு எமது நன்றிகள். அத்துடன் அண்ணாவை பராமரிக்க உதவிய சகலருக்கும் நாம் நன்றிசொல்லுகிறோம்.

மரணச் சடங்குகளில் பங்குபற்ற முடியாத துர்ப்பாக்கிய நிலையில் நான் வெளிநாட்டில் இருந்தேன். அத்தருணம் வருகை தந்து துக்கத்தில் பங்குபற்றி பல்வேறு வழிகளிலும் உதவிய எல்லோருக்கும் நன்றிகள்.

இன்றைய நிகழ்வுகளில் சிறப்புச் சொற்பொழிவாற்றி அண்ணாவின் ஆத்மசாந்திக்கு பிரார்த்தித்த சைவஞானபானு செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறுதிருமுருகன் அவர்களுக்கும், வர்த்தக சம்மேளனத்தின் முன்னாள் தலைவரும் சீ.ரீ.சீ ஈகிள் காப்புறுதியின் முன்னாள் முகாமைத்துவ பணிப்பாளருமாகிய திரு. சந்திரா ஜயரத்ன அவர்களுக்கும், குடும்பத்தினரின் சார்பில் மனமார்ந்த நன்றியைத் தெரிவிக்கின்றேன்.

இன்றைய நிகழ்ச்சிகளில் இந்து ஒளி விசேட மலரை வெளியிட்டு வைத்த ஓய்வுபெற்ற பிரதம நீதியரசர் ஸ்ரீபவன் அவர்களுக்கு எமது நன்றிகள்.

எல்லா நிகழ்ச்சிகளையும் ஒருங்கிணைத்து தன்னுடைய வழமையான இன்முகத்துடன் உதவிய தம்பி நீலகண்டனுக்கு நன்றி சொல்ல வார்த்தைகள் என்னிடம் இல்லை. நன்றி தம்பி.

இறுதியாக இன்றைய நிகழ்வுகள் இனிதே நிறைவேற உதவிய எல்லோருக்கும் வருகை தந்து அண்ணாவின் ஆத்ம சாந்திக்காக பிரார்த்தித்த உங்கள் அனைவருக்கும் எங்கள் நன்றிகள்.

ஏதாவது குறைகள் இருந்தால் பொறுத்து குணத்தைக் காணுங்கள் என்று வேண்டுகின்றேன்.

நன்றி.

**வி. அம்பலவாணர்**

# மாமன்றத்தின் அஞ்சலி



மாத்தளை அருள்மிகு ஸ்ரீ முத்துமாரி அம்மன் தேவஸ்தான தலைவர் திரு விக்னேஸ்வரன் செட்டியார் அவர்களின் பாசமிகு தந்தை திரு லெட்சுமணன் செட்டியார் தியாகராஜா செட்டியார் அவர்கள் 05-04-2017 அன்று இறைவனடி சேர்ந்ததையிட்டு மாமன்றம் தனது அஞ்சலியைத் தெரிவித்திருந்தது.

அன்னார் மாத்தளை மாநகரில் பிரபல்யமான வர்த்தகராக தனது பணியைச் செய்துவந்தாலும் சைவத்திற்கும் தமிழிற்கும் சிறந்த தொண்டனாகவும் இருந்து சிறப்பான தொண்டாற்றியவர். இவர் தனது வாழ்நாளில் எந்தவிதமான பதவிகளையும் ஏற்றுக்கொள்ளாது சேவையாற்றிய ஓர் உன்னத மனிதர். மாத்தளை ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயத்திற்கு அவ்வப்போது சரியான ஆலோசனைகளை வழங்கி ஆலய பரிபாலனம் சிறப்பாக நடைபெற உதவிகள் பலபுரிந்து ஆலயத்தின் வளர்ச்சிக்கு மிகவும் உறுதுணையாக திகழ்ந்தவர் என்பதும் அன்னாரின் தூய்மையான சேவை மனப்பாங்கிற்கு ஓர் எடுத்துக் காட்டு.

இவர்களது புதல்வர்களும் தந்தை காட்டிய நல்வழியில் மாத்தளை கதிர்வேலாயுத சுவாமி கோயில் தலைவராக திரு வசந்தமோகன் செட்டியார் அவர்களும், மாத்தளை முத்துமாரி அம்மன் ஆலயத் தலைவராக மற்றொரு புதல்வர் விக்னேஸ்வரன் செட்டியார் அவர்களும் வாழ்கின்றார்கள்.

அன்னாரின் ஆத்மா எல்லாம்வல்ல பரம்பொருளின் பாதாரவிந்தங்களை அடையப் பிரார்த்திப்பதுடன் அன்னாரின் இழப்பால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு மாமன்றம் தனது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொண்டது.

# ஆன்மீகப் பெரியாரின் மறைவுக்கு அகில இலங்கை இந்து மாமன்றம் அஞ்சலி



யாழ். மண்ணில் பிறந்து ரூபவ் அக்கரைப்பற்றில் இல்லறத்தைத் தொடங்கி கிழக்கு மாகாணத்தில் பல முதலீடுகளைச் செய்து வர்த்தகத் துறையில் விற்பன்னராக விளங்கியதுடன் நின்று விடாது ரூபவ் இந்துமதத்தின் மேம்பாட்டிற்குப் பலவழிகளிலும் அயராது உழைத்து எட்டு தசாப்தங்களாக ஆன்மீக வழிநின்ற ஆன்மீகப் பெரியார் திரு.கதிர்காமர் வேலுப்பிள்ளை சோமசுந்தரம் அவர்களின் மறைவு கேட்டு மிகவும் வருத்தமடைகின்றோம். அமரர் குறிப்பாக சின்மயா மிஷன் மூலம் அளப்பரிய ஆன்மீக அறப்பணி ஆற்றிய சிறந்த மனிதர். அவரின் ஆன்மா சாந்தியடைய எல்லாம்வல்ல ஸ்ரீ சிவகாமி அம்பாள் சமேத ஸ்ரீ நடராஜப் பெருமான் பாதாரவிந்தங்களைப் பிரார்த்தித்து நிற்கின்றோம். அன்னாரின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு இலங்கைவாழ் இந்து மக்கள் சார்பில் எமது இரங்கல்களைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

# அகில இலங்கை இந்து மாமன்றத்தின் அஞ்சலி

தலைநகரில் தமிழ்க் கலைகளின் வளர்ச்சியில் ஆர்வத்துடன் உழைத்த, இலங்கை தமிழ் மாதர் சங்கத்தின் முன்னைநாள் தலைவியும், கலாலயா இசை நடனக் கல்லூரியின் அதிபராக தனது இறுதி மூச்சுவரை பணியாற்றிய திருமதி தயாம்பிகை மகிந்தா அவர்களின் மரணச் செய்தி கேட்டு வருந்துகின்றோம்.

இந்நாட்டின் புகழ்பெற்ற கலைக்குடும்பமான வைத்தியகலாநிதி பாலேந்திரா அவர்களின் புதல்வியான இவர் அகில இலங்கை இந்து மாமன்றச் செயற்பாடுகளிலும் பங்குபற்றி ஊக்கம் தந்த பெருந்தகை.

அவரின் இழப்பால் வாடும் குடும்பத்தினரின் துயரில் நாமும் பங்குகொண்டு அன்னாரின் ஆன்மா சாந்தியடைய எல்லாம்வல்ல ஸ்ரீ சிவகாமி அம்பாள் சமேத ஸ்ரீ நடராஜப்பெருமான் பாதாரவிந்தங்களைப் பிரார்த்தித்து நிற்கின்றோம்.



# சைவமும் கலைகளும்

தொகுப்பு முருகையா பிரணவன்

பண்டைச் சமயத் தோற்றத்திற்கு மானுடவியல் அறிஞர் பல்வேறு காரணங்களைக் காட்டுகின்றனர். அவற்றுள் உலகக் கோட்பாடு, இயற்கைக் கோட்பாடு, முன்னோர் வழிபாட்டுக் கோட்பாடு என்பன சிறப்பாக சுட்டத்தக்கவை. தமிழர் தம் பண்டைச் சமயக்கூறுகளுள், வழிபாட்டுக் கூறும், இயற்கை வழிபாட்டுக் கூறும், முன்னோர் வழிப்பாட்டுக் கூறும் கலந்து இயைந்தே உள்ளன. சமய வாழ்வின் தொடக்க நிலையினை பிரெஞ்சு சமூகவியல் அறிஞர் எமில் துர்க்கேம், குலக்குறியே, அதனைச் சார்ந்த நம்பிக்கையே சமயமாக வளர்ச்சி கொண்டது என்கிறார். ஆஸ்திரேலியாவில் வாழும் அருண்டா பழங்குடிமக்களை ஆதாரமாகக் கொண்டு தம் கொள்கையை அவர் உருவாக்கி விளக்கினார். மக்கள் ஒரே மாதிரியாகப் போய்க் கொண்டிருக்கும் அன்றாட வாழ்க்கையில் சலிப்பு அடைகிறார்கள். அந்தச் சலிப்பில் இருந்து விடுதலை பெற எல்லோரும் ஆட்டம் பாட்டத்தில் கழிக்கிறார்கள். இந்த ஆட்டம்பாட்டம் ஆரவாரத்தோடு வெறித்தனமாக அமைகிறது. எனவே அதில் கலந்து கொள்ள வேகம் வருகிறது. கொஞ்ச நேரத்தில் வந்த வேகம் அடங்க ஆட்டம்பாட்டங்கள் நின்றுபோகின்றன.

எப்படி இந்த வேகம் வருகிறது, எப்படி அது போகிறது என்று அவர்கள் எண்ணத் தொடங்குகிறார்கள். ஏதோ ஒரு நுட்பமான- அருவுருவமான மறைமுக சக்திதான் காரணமாக இருக்க வேண்டும் என்று அவர்கள் கருதினார்கள். அது வெளியே இருந்து மக்கள் உடலில் புகும்போது மக்களுக்கு வேகம் வந்துவிடுகிறது. விலகிப் போகும் போது வேகம் போய்விடுகிறது.

இந்தச் சக்தியை அருண்டா மக்கள் "மானா" என்று குறித்தனர். அதனைப் பூசித்து வழிபட்டனர். அந்த உருவத்தைப் புனிதமாகக் கருதி வழிபட்டனர். அதனை ஒட்டியே பூசைகள் சடங்குகள் தோன்றின. அந்த உருவமே குலக்குறி [totem] எனப்படும். உருவங்கள் மட்டும் அல்லாமல் தாவரங்கள், விலங்குகள், இயற்கைப் பொருள்கள் முதலியனவும் சக்தியின் இருப்பிடமாகக் கருதப்பட்டு, புனிதப்பொருள்களாகப் போற்றினர்.

தமிழர் ஆதி சமயக் கூறுகளிலும் இக்குலக்குறி இருந்ததை நம் பழைய வரலாறு காட்டுகிறது. கல், லிங்கம், புனித மரங்கள் நந்தி, நாகம் போன்ற விலங்குகள், பருந்து, மயில், போன்ற பறவைகள், தமிழர் வழிபாட்டில் வழிபாட்டுக்கூறுகளாக இருப்பதைக் காணலாம்.

தமிழர் சமயத்தில் உருவ வழிபாடு தவிர்க்க முடியாததாயிற்று. இந்த உருவம் அமைக்கும் முறையே சிற்பக் கலைக்கு மூல ஊற்றாக அமைந்திருக்க வேண்டும். சங்க இலக்கியத்தில் போரில் மடிந்த வீரருக்கு நடுகல் நட்டு, பேரும் ஊரும் எழுதி வழிபடப் பெற்றதாக பழைய இலக்கியங்களில் காணலாம். அண்மைக் காலங்களில் வட தமிழகத்தில் கல்வெட்டுகளோடு கூடிய உருவம் பொறித்த நடுகற்கள் கிடைத்துள்ளது. நடுகல் வழிபாடு எனும் முன்னோர் வழிபாடு சிற்பக் கலையோடு சேர்ந்த ஒன்றாகத் திகழ்கிறது.

சைவ சமயத்தில் ஆதி உருவமானதாகக் கருதப்பெறும் சிவலிங்கம் கி.மு 1500க்கு முற்பட்ட சிந்துவெளி நாகரீகத்தில் கிடைத்ததாகச் சொல்வார்கள். பழந்தமிழ் நூலான தொல்காப்பியத்தில் கட்டப்பெறும் "கந்தமி" என்பது சிவனைப் பற்றிய குறிப்பாகும் என்பர்.

தமிழகத்தைப் பொறுத்தவரை லிங்க உருவச் சின்னங்கள் கிறிஸ்வுக்கு முற்பட்ட காலத்தில் உள்ளவை இதுவரை நமக்குக் கிடைக்கவில்லை. அவை அழிக்கப்பட்டிருக்கலாம் என்பதும் உள்ளங்கை நெல்லிக்கனி.

கி.மு முதல் நூற்றாண்டைச் சார்ந்த லிங்க உருவம் ஒன்று பெற்ஸ் [BHETS] எனும் இடத்தில் கிடைத்ததாகவும், அது லக்னோ அருங்காட்சியில் உள்ளதாகவும் தெரிகிறது.

### சைவமும் கலையும்

ஓவியக் கலையைப் பொறுத்தளவில் நடுகல்லில் சங்ககாலத்தில் எழுதப்பட்ட வீரனின் ஓவியங்கள் மிகப் பழங்காலத்தன. சங்க இலக்கியங்களில் ஓவியம் பற்றிய குறிப்புகள் இடம் பெற்றுள்ளன. அகநானூறு, நற்றிணை, பட்டினப்பாலை, மதுரைக் காஞ்சி, நெடுநல்வாடை போன்றவற்றில் ஓவம் - ஓவியம் என்னும் சொற்கள் இடம் பெற்றுள்ளன.

சிலப்பதிகாரத்தில் திரையில் எழுதப்பட்ட ஓவியங்களைப் பற்றிய குறிப்புகள் இடம் பெற்றுள்ளன. கதை ஓவியங்களைப்பற்றி குறிப்புகள் காணப்படுகின்றன. நெடுநல்வாடை, அகம், மணிமேகலை பாடல்களில் ஓவிய நூல் ஒன்று இருந்ததாக அடியார்க்கு நல்லார் உரையில் குறிப்பு ஒன்று வருகிறது. திருப்பரங்குன்றத்தில் கவுதம முனிவர் தம் மனைவி அகலிகையையும், இந்திரனையும்

சபித்த நிகழ்வு ஓவியமாக வரையப்பெற்றிருந்தது எனும் குறிப்பு பரிபாடலில் கூறப்பட்டுள்ளது. மணிமேகலை, சிலப்பதிகாரம், பெருங்கதை, சிந்தாமணி, திவாகர நிகண்டு, கம்பராமாணயம் ஆகியவற்றில் ஓவியம் பற்றிப் பல்வேறு குறிப்புகள் இடம்பெற்றுள்ளன. பல்லவர் காலத்திற்குப் பின்பு காஞ்சிபுரம், பனமலை, ரமாமலை, சித்தன்னவாசல், தஞ்சாவூர், திருமலைபுரம், நர்த்தமலை ஆகிய இடங்களில் கி.பி.7ம் நூற்றாண்டு முதல் 13 ம் நூற்றாண்டு வரையிலான கால கட்டங்களில் வரையப்பட்ட ஓவியங்கள் சில ஆலயங்களிலும், வைணவ ஆலயங்களிலும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. சிற்பக்கலை, ஓவியக்கலை ஆகியவற்றுக்கு அடுத்ததாக அல்லது அதற்கு இணையாக கருதத்தக்க தோற்றமும், வளர்ச்சியும், பெருமையும் உடையது இசைக் கலையாகும்.

**இசை**

தமிழர் வழிபாட்டு முறையை இசையிலிருந்து பிரிக்க முடியாது என்பதைப் பக்தி இலக்கியங்கள் தெளிவுபடுத்துகின்றன. சைவ நாயன்மார்களால் தமிழ் இசை முறைப்படி தேவாரப் பாடல்கள் காலந்தோறும் இசைக்கப்பட்டன.

திருநீலகண்ட யாழ்ப்பாணர் முதலானோர் வரலாறு இசைக்கருவியோடு இணைந்து அமைந்ததாகும்.

பக்தி இலக்கியத்திற்கு முன்பே பரிபாடல் தமிழிசை, தாளம், பண் ஆகிய வகை தொகையோடு அமைக்கப் பட்டிருந்ததைக் காணுகிறோம். கோயில்களில் இசை வல்லார் அமர்த்தப் பெற்றிருந்ததையும், தேவாரம் ஓதப் பெற்றதையும் தஞ்சைப் பெரிய கோயில் முதலான பல கோயில் கல்வெட்டுகள் எடுத்துரைக்கின்றன. பிற்காலத்தில் அருணகிரிநாதர் தம் திருப்புகழ் முழுவதையும் பல்வேறு சிவத் தலங்களில் இசை மழையாகப் பொழிந்து கொட்டியதை அவர்தம் திருப்புகழ் வரலாறு எடுத்துரைக்கிறது.

தமிழ் இசையோடும் சைவத்தோடும் இணைந்த பலரை வரலாற்றில் இருந்து காட்ட முடியும். தெலுங்கு மொழியின் தலையீடும் செல்வாக்கும் தமிழர் வரலாற்றில் குறுக்கிடுகின்ற வரை தமிழருக்கே உரிய இசை சிறந்து வளர்ந்து இருந்தது. தொடக்கத்தில் மானா சக்தி ஆட்டம் பாட்டத்தில் இருந்து அறியப்பெற்றது என்ற வரலாற்றையும் தமிழ் இசை இணைப்பையும் இணைத்துக் கருதின் தமிழர் இசைப்பழைமை தெளிவாகப் புலப்படும்.

**ஆடற்கலை**

இசைக் கலைக்கு இணையாகச் சுட்டிக்காட்ட வேண்டியது ஆடற்கலையாகும். சிவனின் ஒரு தோற்றமான நடராசர் உருவம் உலகப் புகழ்பெற்ற ஒன்றாகும். இந்த ஆடவல்லான் உருவம், சைவ நாயன்மார் காலத்தில் உருக் கொண்டு, பிற்காலச் சோழர் காலத்தில் மிகப் பெரிய அளவு பரவிய ஒன்றாகும். நடராச உருவத்தில் ஆயிரக்கணக்கான வெண்கலப் படிமங்களும் பல்லாயிரக்கணக்கான படைப்பு உருவச் சிற்பங்களும் தமிழகக் கோயில்களில் காணப்படுகின்றன. ஆடற்கலையில் தமிழர் பெரும் வல்லுநர் என்பதைச் சிலப்பத்திகாரமும், குறிப்பாக அரங்கேற்று காதையும் குன்றக் குரவை, ஆய்ச்சியர் குரவையும் எடுத்துக்காட்டும்.

மாதவி ஆடலிலும், யாழ் மீட்டுவத்திலும், இசை பாடுவதிலும் பெரும் ஆற்றல் பெற்றிருந்தாள் என்று சிலப்பதிகாரம் எடுத்துக்காட்டுகின்றது. ஆடல், இசை தொடர்பான இலக்கண நுல்களைத் தமிழர்கள் பெற்றிருந்தனர் என்று அடியார்க்கு நல்லார் உரை தெளிவுபடுத்துகின்றது.

சோழர் காலம் தொடங்கி, கோயில்களில் ஆடல் வல்ல மகளீர் அமர்த்தப் பெற்றிருந்ததைக் கல்வெட்டுச் செய்திகள் வலியுறுத்துகின்றன. கூத்து என்பதே ஆடலையும், நாடகத்தையும் குறிக்கும் சொல்லாகத் தமிழரிடையே புழங்கியது. வேதியல் கூத்து, பொதுவியல் கூத்து என்ற வழக்காறுகளும் இருந்தன. நாடகத்தமிழ் ஒரு காலத்தில் பாட்டும் நடனமுமாகவே இருந்தது.

**புல்லாங்குழல்**

தமிழின் சங்க இலக்கியங்களும் குழல் பற்றிப்பேசுகின்றன. சிலப்பதிகாரத்தில் உள்ள ஆய்ச்சியர் குரவையிலே கொன்றைக்குழல், ஆம்பர்குழல், முல்லைக்குழல் என 3 வகைக் குழல்களைப்பற்றிக் கூறப்பட்டுள்ளது. இந்துக்களின் கடவுளான விஷ்ணு பகவானின் அவதாரமான கண்ணனின் கையிலுள்ளதாகச் சித்தரிக்கப்படும் புல்லாங்குழலுக்கு சமய ரீதியான முக்கியத்துவமும் உண்டு.

முதன்முதலில் புல்லாங்குழல் வாசித்தவர் முருகன். கிருஷ்ணர் இல்லை. கிருஷ்ணர் காலம் ஐயாயிரம் ஆண்டு. முருகப் பெருமான் ஆதியும் அந்தமும் இல்லாதவர். திருமுருகாற்றுப் படையிலே,

"குழலன் கோட்டன் குறும்பல் லியத்தன்"

என வருகிறது. குழல் என்றால் புல்லாங்குழல் என்று அர்த்தம். யாழ் செயற்கை வாத்தியம். குழல் இயற்கை வாத்தியம்.

"குழலினிது யாழினிது என்பதம் மக்கள்
மழலைச்சொல் கேளா தவர்"

என்று வள்ளுவர், முதலில் குழலைச் சொல்லிவிட்டுப் பிறகு யாழைச் சொல்லுகின்றார். எது முக்கியமோ அதை முதலில் சொல்லுகின்றார். முருகப்பெருமான் குறிஞ்சி நிலக் கடவுள். குறிஞ்சி நிலத்திலே (மலையிலே) வாழ்கின்ற தெய்வம், மலையிலே விளைகின்ற மூங்கிலை வெட்டி அதைத் துளையிட்டுப் புல்லாங்குழல் வாசித்தார் சுப்பிரமணிய சுவாமி என்பதாக சங்க இலக்கியங்களில் பல குறிப்புகள் காணப்படுகின்றன.

**கட்டடக்கலை**

தமிழகத்தில் கி.பி. 6,7 ம் நூற்றாண்டு முதல் கட்டப்பட்ட கோயில்கள் கட்டடக்கலைக்குப் பெரும் சான்றாக விளங்குகின்றது. தமிழர் கோயில் கட்டும் கலை நூற்றாண்டு தோறும் தொடர்ந்து இருந்து வந்ததை உலகு எங்கும் பரவியுள்ள கோயில்கள் எடுத்துரைக்கின்றன. பிற்காலச் சோழர்காலத்தில் தாய்லாந்து முதலான தென்கிழக்கு ஆசிய நாடுகளிலும் தமிழருடைய கோயில் கட்டடக்கலை செல்வாக்கோடு போற்றப்பெற்றதை நாம் காணமுடிகிறது. சிற்பக்கலை, ஓவியக்கலை,

இசைக்கலை, கட்டடக்கலை ஆகிய நான்கும் பல நூற்றாண்டுகளாகத் தமிழருக்குரிய பண்பாட்டு முத்திரையுடன் தோன்றி வளர்ந்து வந்ததைக் கண்டோம்.

தமிழரைப் பொறுத்த அளவிற்குச் சைவம் எந்த தனிப்பெயர் சூட்டிக்குறிக்க முடியாவிட்டாலும் தொல் தமிழர் சமயம் பாட்டு, ஆடல் என்ற இரு வகை கலைகளோடு சேர்ந்து பிறந்ததை உறுதியாகச் சுட்டிக்காட்ட முடியும். நடுகற்கள் எந்தச் சமய வழிபாட்டைச் சார்ந்தவை என்று குறிக்க முடியாவிட்டாலும் வழிபாட்டிற்கு உரியதாக இருந்தன என்பதையும் அதனை ஒட்டித் தொடக்கக் காலப்படைப்புச்சிற்பமுறையும்,ஓவியமுறையும் தோன்றி வளர்ந்தன என்பதையும் உறுதியாகச்சொல்ல முடியும். சங்க இலக்கியங்கள் சுட்டும் வேலனாட்டம், முருகனோடு தொடர்புடையதாகும். அருளாடல் ஆடலோடு தொடர்புடையது என்பதை எடுத்துச் சொல்லவேண்டியதில்லை. குன்றக்குரவை, ஆய்ச்சியர் குரவை ஆகியன, பெண்கள் கூட்டமாகக் குழுமி இசையோடு ஆடல் நிகழ்த்தியத்தைக் காட்டும் சான்றுகளாகும் எனவே, பண்டைத்தமிழர் வாழ்வோடு இசையும், ஆடலும் பின்னிப் பிணைந்தே இருந்தன.

மேற்கண்ட இரண்டும் சமண, பௌத்தம் வரும்வரை சிறப்பாய் இருந்தவை. அடுத்த, சில நூற்றாண்டுகளில் ஒடுக்கப்பட்டு இருக்க வாய்ப்பு உண்டு. சமணர்கள், மக்களை உணர்ச்சி வயப்படுத்துவதால் இசைக்கும், ஆடலுக்கும் முன்னுரிமைகொடுத்துப் போற்றுவதில்லை. இலக்கியங்களில் சமணர்கள் தம் கருத்தை மறைமுகமாகவும், வெளிப்படையாகவும் கூறியுள்ளனர்.

சமணரான இளங்கோவடிகளால் எழுதப்பெற்ற சிலப்பதிகாரத்தில் ஆடலிலும், பாடலிலும் வல்ல மாதவி வாழ்க்கையில் தோல்வியுறுவதாக காட்டப்பட்டுஇருக்கிறது. ஆடலில்வல்லமணிமேகலை இந்திர விழாவில் ஆடக்கூடாது என்று மாதவியால் தடுக்கப்பட்ட செய்தியைப் பௌத்தக் காப்பியமான மணிமேகலை எடுத்துக்காட்டுகிறது. யசோதர காவியம் எனும் சமண காப்பியமும் அமிழ்தமதி என்ற பிறிதொரு சமண காப்பியமும் அரசனின் பட்டத்தரசி ஒழுக்கம் குன்றிப்பாடும் ஆற்றல்உள்ள தொழுநோயாளியுடன் தொடர்புகொண்டு தூற்றப்படுவதையும் காட்டுகிறது.

இசைக்கலை நல்லவர்களையும் அல்லவர் ஆக்குகிறது என்பது மேற்கண்ட பௌத்த சமண காப்பியங்கள் புனைந்து காட்ட முற்பட்டு எழுதிய காப்பியத்தின் உட்பொருள்களாகும்.

ஆடல், பாடல் ஆகியவற்றில் போரீடுபாடு கொண்டவராக வாழ்ந்த பண்டைத் தமிழர் இதில் வேறுபட்டு நின்றனர்.

தமிழருக்கு அவற்றை வெறுத்து ஒதுக்கும் சமண,பௌத்தங்கள் வேண்டாதனவாக இருந்ததில் வியப்பு இல்லை. எனவேதான் கி.பி 575 க்குப் பின் பிறகு பாண்டியன் கடுங்கோள் வருகை ஒட்டித்தமிழகத்தில் சமண, பௌத்த மதங்கள் வீழ்ச்சி அடையத்தொடங்கியது. இதன் அடையாளத்தைத் திருஞானசம்பந்தரின் வரலாறிலும், திருநாவுக்கரசரின் வரலாற்றிலும் தெளிவாகப் பார்க்கிறோம். இவ்விருவரும் இன்னிசையால் இறைவனை வணங்கும் நாயன்மார்களாக வாழ்கின்றனர். "நாளும்இன்னிசையால் தமிழ் பரப்பும் ஞானசம்பந்தன்" என்றே பாராட்டப் பெறுகிறார் சம்பந்தப் பெருமான்.

திருவாரூர் கோயிலில் ஆடலிலும், பாடலிலும் வல்லவராக விளங்கி தேவரடியாகத்தொண்டு புரிந்து வந்த பரவை நாச்சியாரைச் சைவ நாயன்மார்களில் ஒருவராகித்சுந்தரர் காதலித்து மணம்முடித்துக் கொள்கிறார். 64 நாயன்மார்களுள் திருநீலகண்டயாழ்ப்பாணர் இசைத் தமிழிழோடு மிக நெருக்கமான தொடர்பு உடையவர். எனவே சமண பௌத்தம் தடுத்து நிறுத்தி இசை ஆடல் கலைகளில் மக்கள் சைவ சமய எழுச்சிக்குப் பிறகு பேரார்வம் காட்டினர் எனலாம்.

இச் சூழலிலே கி.பி. 7 ம் நூற்றாண்டில் பல்லவ நாட்டை ஆண்ட மகேந்திரவர்மனுக்குப் பிறகு தமிழகத்தில் கலைவேலைப்பாட்டுடன் கட்டப்பட்ட சிவன் கோயில்களின் நூற்றுக்கணக்கான கோயில்களை ஒட்டி வளர்க்கப்பட்ட இசை, ஆடல் கலைகளையும் சேர்த்து எண்ணுதல் வேண்டும். பல்லவமன்னர்களால் கட்டப்பட்டதாகக் கருதப்படும் மாமல்லபுரத்தில் தனி இசை மண்டபம் இன்றும் உள்ளது. மகேந்திரவர்மனுக்குச் சித்திரகாரப்புலி என்ற பட்டமே இருந்தது. பல்லவ மன்னர்கள் காலத்துச் சைவ ஆலயங்களும் அவற்றை ஒட்டிய சிற்பங்களும் நிறைய உருவாகின என்பதைப் பிற்காலச் சோழர் வரலாறு எடுத்துக்காட்டுகிறது.

அத்தோடு மட்டுமல்லாது சோழமன்னர்கள் கட்டடக்கலையுடன், சிற்பக்கலை, இசைக்கலை, ஓவியக்கலை ஆகியவற்றையும் சேர்த்து வளர்த்தனர். பல்லவர்கால காஞ்சிபுர கைலாயநாதர்கோயிலும் அதன் உள்மண்டபத்தில் உள்ள ஓவியங்களும் சிவன் கோயில்களுடன் ஓவியக்கலையும் சேர்ந்து வளர்க்கப்பட்டதை எடுத்துரைக்கும். முதல் இராசராசன் தில்லைவாழ் அந்தணர் உதவியுடன் தேவாரத்தைக் கண்டு எடுத்து, இசை அமைத்துப் பல்வேறு தேவார ஓதுவார்களை நியமித்துப் பாடச்செய்தான். தொடர்ந்து சோழ அரசர்களால் இப்பழக்கம் போற்றப் பெற்றதை வரலாறு எடுத்துக் காட்டுகிறது.

தமிழகத்தின் கலை வரலாற்றைக் கூர்ந்து நோக்கினால், அது பெரும்பாலும்சமயத்தைச் சார்ந்தே வளர்ந்து இருக்கிறது என்பதை அறியமுடியும். சமயத்தைவிட்டுவிலகி கலைக்காகவே கலை எனும் பார்வைக்குரிய தமிழர் கலை வரலாறு ஐரோப்பியர் வரவு வரை அமையவில்லை என்றே கூறலாம். அவர்களின் வருகைக்குப் பின்னரே ஒன்றுபட்டு இருந்த மக்கள் பல்வேறு முக்கியத்துவமற்றிருந்த சில காரணிகளை மையப்படுத்தி பிரித்தாளப்பட்டனர். வன்முறைகளாலும், பணம், பதவி என்பவற்றினூடாகவும் மதம் மாற்றப்பட்டனர். எனினும் அம்மக்கள் தமதுகலைகளை விட்டு ஓடவில்லை. கிறித்தவராக மாறி பரதக் கலை பயிலும் பெண்கள் கூட அதன் புனித தெய்வீகத் தன்மையை உணர்ந்து நடராஜரின் பொற்பாதங்களைப் பணிந்து குரு வணக்கம் செலுத்திப்பின் தமது அளிக்கைகளை ஆற்றி வருவதை இன்றும் நாம் கண்கூடாகக் காணக்கூடியதாக உள்ளது.

# இசைத்தமிழ் வித்தகர் விபுலானந்தர்



ஈழத் தமிழ் அறிஞர்கள் தமிழுக்குச் சேர்த்த வளம் குறித்துத் தனியாக பல நூல்கள் எழுதப்பட்டுள்ளன. தமிழுக்கு, குறிப்பாக இசைத் தமிழுக்கு தனது "யாழ் நூல்' என்ற இணையற்ற படைப்பை அளித்து சேவை செய்த சுவாமி விபுலானந்தர் ஈழம் தந்த அரிய தமிழ் மணிகளில் ஒருவர். யாழ் நூல் தவிர மதங்க சூளாமணி, நடராஜ வடிவம் போன்ற அரிய நூல்களை எழுதி இருபதாம் நூற்றாண்டின் தமிழ்ப் பெரும் புலவர் வரிசையில் தன் சுவடுகளைப் பதித்தவர். ராமகிருஷ்ணமடத்தைச் சேர்ந்த உன்னதமான துறவிகளில் ஒருவர். ஆன்மிகத்தையும் தமிழையும் தன் இரு கண்களாகக் கொண்டு வாழ்ந்த பெருமகன்.

அவர் இலங்கை மட்டக்களப்புக்குத் தெற்கே அமைந்துள்ள காரைத்தீவில் சாமித்தம்பி-கண்ணம்மை தம்பதிக்கு 1892-ம் ஆண்டு மார்ச் 27-ம் தேதி பிறந்தார். அவருக்கு தமிழ்க் கடவுள் முருகனின் திருநாமங்களில் ஒன்றான மயில்வாகனன் என்ற பெயரிட்டு வளர்த்தனர். அவர் தொடக்கக் கல்வியை குஞ்சுத்தம்பி என்ற ஆசிரியரிடமும், தமிழையும் வடமொழியையும் புலோலி வைத்தியலிங்கத் தேசிகரிடமும் கற்றார். குறிப்பாக நன்னூல், சூளாமணி நிகண்டு உள்ளிட்டவற்றையும் குறளையும் ஆழ்ந்து கற்றார்.

அவரது ஆழ்ந்த ஆன்மிக உணர்வுக்கான அடித்தளம் அவர் மாமன்களான சிவகுருநாதப் பிள்ளை மற்றும் வரதராசப் பிள்ளை ஆகியோரால் இடப்பட்டது. இவர்களிடம் கந்தபுராணம் மற்றும் பாகவதம் போன்றவற்றை மிக இளம் வயதிலேயே மயில்வாகனன் கற்றார்.

கேம்பிரிட்ஜ் தேர்வில் முதல் வகுப்பில் வென்ற அவர், பின்னர் இலங்கைத் தலைநகர் கொழும்பு சென்று அங்கு ஆங்கில ஆசிரியர் பயிற்சிக் கழகத்தில் படித்துப் பட்டம் பெற்றார். தொடர்ந்து அறிவியல் கல்வியும் கற்று அதில் பட்டயப்படிப்பு ஒன்றையும் முடித்தார். பின்னர் லண்டன் பல்கலைக்கழகத்தின் படிப்பான இளம் அறிவியல் பட்டப் படிப்பிலும் வென்றார். 28-வது வயதிலேயே கல்லூரி ஒன்றின் முதல்வர் பதவி அவரைத் தேடி வந்தது.

கொழும்புக்கு அவர் படிக்க வந்த காலகட்டத்திலேயே கைலாச பிள்ளை, கந்தையா பிள்ளை உள்ளிட்ட சில முக்கியத் தமிழ் அறிஞர்களிடம் நேரடியாகத் தமிழ் கற்றார். அதனால் அவர் ஆழமான தமிழறிவைப் பெற்றார். மதுரையின் புகழ் பெற்ற தமிழ்ச் சங்கத்தின் வித்துவான் தேர்விலும் வென்றார்.

தமிழோடு ஆன்மிகமும் அவரை ஆட்கொண்டகாலம் இதுதான். அதற்கு மூல காரணம் கொழும்பிலிருந்த ராமகிருஷ்ண மடமும் இவரிடம் இயல்பாகவே இருந்த பாமரர்க்குத் தொண்டு செய்யும் மனப்பான்மையும்தான்.

1922-ம் ஆண்டு அவர் சென்னைக்கு வந்து ஶ்ரீராமகிருஷ்ண மடத்தில் சேர்ந்தார். மடத்தின் தமிழ் பத்திரிகையான ராமகிருஷ்ண விஜயம் மற்றும் ஆங்கிலப் பத்திரிகையான வேதாந்தகேசரி ஆகியவற்றின் ஆசிரியரானார்.

1924-ம் ஆ[illegible]வரது வாழ்வில் முக்கியத் திருப்பம் நேர்ந்தது. மயில்வாகனனாக இருந்த இவருக்கு சிவானந்த சுவாமிகள் என்ற துறவி, காவி உடை அளித்து சுவாமி விபுலானந்தராக்கி ராமகிருஷ்ண மடத்தின் துறவிகளில் ஒருவராக்கினார்.

1925-ம் ஆண்டு மீண்டும் கொழும்புக்குத் திரும்பிய விபுலானந்தர் தன் தொண்டு வாழ்வைத் தொடர்ந்தார். 1931-ல் மீண்டும் அவர் தமிழ்நாட்டுக்கு வந்தார். அப்போது அவர் அன்று புகழ் பெற்றுவிளங்கிய அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் பேராசிரியராக 3 ஆண்டுகள் பணியாற்றினார். பல்கலைக்கழகத்துக்கு வந்த புதிதில் அவரை ஒரு கூட்டத்தில் பேச வைத்தனர். பல்கலைக்கழகத்தின் அறிவிப்புப் பலகையில் விபுலானந்தஜி பேசுவார் என்று போட்டிருப்பதைப் பார்த்து யாரோ வடநாட்டு சன்யாசி உரை நிகழ்த்துகிறார் என்று நினைத்தவர்கள் கம்பீரமான தீந்தமிழில் விபுலானந்தரின் முழக்கத்தைக் கேட்டு வியந்தனர்.

இமயமலை யாத்திரை, பிரபுத்த பாரதம் என்ற வேதாந்த இதழின் ஆசிரியர் என இவரது ஆன்மிகப் பணிகளும் ஓசையின்றி நடந்தது வந்தன. விவேகானந்த ஞானதீபம் உள்ளிட்ட மொழி பெயர்ப்பு நூல்கள் இவரது ஆன்மிகப் பணியில் அடங்கும்.

இந்தியாவின் பாரம்பரியத்திலும் சிறப்புகளிலும் மனத்தைப் பறிகொடுத்த விபுலானந்தர், மகாகவி பாரதியிடத்திலும் மனத்தைப் பறி கொடுத்தார். மூத்த தமிழ் அறிஞர்கள் பாரதியைக் கண்டு கொள்ளாமலிருந்த அந்தக் காலத்தில் பாரதியின் படைப்புகளில் ஈடுபட்டு

அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் பாரதி ஆய்வு வட்டம் ஒன்றை உருவாக்கியவர் அடிகளார்.

தமிழில் அறிவியல் இல்லை என்ற அவச் சொல்லைத் தீர்க்கும் முயற்சியில் 1934-ல் உருவான "சொல்லாக்கக் கழக'த்தின் தலைமையை ஏற்றுச் செயல்பட்டவர் அடிகள்.

இசைத் தமிழ் குறித்து கிட்டத்தட்ட தனது 14 ஆண்டுக்கால ஆராய்ச்சியின் விளைவாக மிக முக்கிய இசைத் தமிழ் நூலான யாழ்நூலை விபுலானந்தர் படைத்தார்.

சிலப்பதிகாரத்தில் உள்ள ஏராளமான அரிய இசைச் செய்திகள் குறித்து போதிய அளவுக்கு விரிவான ஆழமான விளக்கங்கள் இல்லாதிருந்த காலகட்டத்தில் சிலம்பின் இசை நுட்பங்களை மிகச் சிறப்பாக வெளிப்படுத்திய பெருமை விபுலானந்தரின் யாழ்நூலுக்கு உண்டு. இதன் மூலம் தமிழ் இசையின் தொன்மையையும் ஆழத்தையும் அவர் நிறுவினார். சிலம்பிலுள்ள இசைத் தகவல்களின் ஆழத்தில் முக்குளிக்கப் போதிய இசைப் புலமை வேண்டும். அதன் பொருட்டு அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் அன்று பணிபுரிந்த இசை மேதை பொன்னையாப் பிள்ளை உள்ளிட்ட சிலரிடம் இசை இலக்கண நுட்பங்களையெல்லாம் அறிந்தார் விபுலானந்தர்.

பாயிரவியல், யாழ் உறுப்பியல், இசை நரம்பியல், பாலைத் திரிபியல், பண்ணியல், தேவார இயல், ஒழிபியல் என 7 இயல்களால் ஆனது இந்த நூல். நாடக இலக்கணங்களை வகுத்துக் கூறும் மதங்க சூளாமணி, விபுலானந்தரின் மற்றோர் அரியபடைப்பு. மதுரைத் தமிழ்ச் சங்கத்தின் 23-வது ஆண்டு விழாவின் போது "ஷேக்ஸ்பியரும் தமிழ் நாடகங்களும்' என்ற தலைப்பில் அங்கு விபுலானந்தர் உரை நிகழ்த்தினார். இந்த உரை விழாவுக்கு வந்திருந்த உ.வே. சாமிநாதய்யரால் மிகவும் பாராட்டப்பட்டது. பின்னாளில் இந்த உரையையே மதங்க சூளாமணி என 3 இயல்களால் ஆன நூலாக விபுலானந்தர் படைத்தார்.

இவரது புகழ் பெற்ற "யாழ் நூல்' கரந்தைத் தமிழ்ச் சங்கத்தின் சார்பில் தமிழ் நாட்டின் திருக்கொள்ளாம் புதூர் கோவிலில் 1947-ம் ஆண்டு மே மாதம் ஐந்தாம் தேதி அரங்கேறியது. இந்த மகத்தான சாதனையைச் செய்து முடித்தபின் ஜுலை மாதமே விபுலானந்தர் காலமானார். வெறும் 55 ஆண்டுகளே வாழ்ந்து தமிழுக்கு இணையற்ற நூலை உருவாக்கிய அவர் பெயர் தமிழ் இலக்கிய வரலாற்றில் நிரந்தரமாக நிலைத்திருக்கும்.

*நன்றி: தமிழ்மணி (தினமணி) — 8 பெப்ரவரி 2009*

*எழுதியவர்: தேசிகன்*

### ஈரேழு உலகங்களில் வசிப்பவர்கள் யாவர்


இறைவன் ஏழு உலகங்களை உருவாக்கி இருக்கிறாராம். சத்தியலோகத்தில் பிரம்மன், தபோலோகத்தில் தேவதைகள், ஜனோலோகத்தில் பித்ருக்கள், சொர்க்கத்தில் இந்திரன் முதலான தேவர்கள், மஹர்லோகத்தில் முனிவர்கள், புனர்லோகத்தில் கிரகங்கள், நட்சத்திர தேவதைகள், பூலோகத்தில் மனிதர்கள், விலங்குகள் வசிக்கின்றனர். இவையெல்லாம் பூமிக்கு மேலிருப்பவை. பாதாளத்திலும் இதே போல ஏழு லோகங்கள் உண்டு. இதனால் தான் அசுரர்கள் ஈரேழு 14 லோகங்களையும் அடக்கியாண்டதாக புராணங்களில் சொல்லப்படும். கீழுள்ள அதல, விதல லோகங்களில் அரக்கர்கள், சுதல லோகத்தில் அரக்கர் குலத்தில் பிறந்தாலும் உலகளந்த நாயகனால் ஆட்கொள்ளப்பட்ட மகாபலி, தலாதல லோகத்தில் மாயாவிகள், மகாதல லோகத்தில் புகழ்பெற்ற அசுரர்கள், பாதாள லோகத்தில் வாசுகி முதலான பாம்புகள், ரஸாதல லோகத்தில் அசுர ஆசான்கள் வசிப்பதாக நம்பிக்கை

### சுப்ரபாதம் என்பதன் பொருள்

பா எனில் வெளிச்சம். ப்ரபாதம் எனில் காலைப்பொழுது. சுப்ரபாதம் எனில் இனிய காலைப்பொழுது என்று அர்த்தம். வடமொழியில் "சு" எனும் எழுத்து ஒரு சொல்லுக்கு முன்னர் சேர்க்கப்பட்டால் உயர்ந்த பொருளை நல்கும். பாக்ஷிதம் - வார்த்தைகள், சுபாக்ஷிதம் - நல்வார்த்தைகள். கன்யா - பெண், சுகன்யா - நல்லப் பெண். இதுபோன்று சுப்ரபாதம் என்பது நல்ல இனிய காலைப் பொழுது. காலையில் கடவுளை இத்துதிகளால் வழிபடுவதன் மூலம் நாம் கடவுளுக்கு காலை வணக்கம் சொல்வதாகவும், இவை கடவுளுக்கு மட்டுமல்லாமல் அனைத்து ஜீவராசிகளையும் எழுப்பும் விதமாகவும் இதனால் நாமும் புத்துணர்ச்சி பெறுவதும் அனுபவ உண்மை. இவை அனைத்து கடவுளுக்கும் பல மகான்கள் அருளியிருக்கிறார்கள். இவற்றை காலையில் கேட்பதே உயர்ந்தது. எனினும், மற்ற காலங்களில் கடவுளின் நாமாவளிகளின் தொகுப்பு என்ற மட்டில் கேட்கலாம் தவறில்லை. எனினும், விடியற்காலையில் கேட்பதே பொருத்தமானது

# "ஸ்ரீ" எனும் அணையாத சுடர்

**திருமதி நீலா தயாபரன்**
(உப தலைவி - கொழும்பு மகளிர் இந்து மன்றம்)



*(கொழும்பு மகளிர் இந்து மன்றத் தலைவியாக விளங்கிய திருமதி ஸ்ரீரஞ்சனி விஷ்ணுகாந்தன் அவர்களிற்கு அஞ்சலி செலுத்துமுகமாக இக் கட்டுரை பிரசுரிக்கப்படுகின்றது.)*

தீபமொன்று அணையுமுன் சுடர்விட்டுப் பிரகாசிக்கும் என்பது யாமறிந்த உண்மை ஸ்ரீயின் வாழ்வு இதற்கு ஒரு எடுத்துக்காட்டவே அமைந்தது. கொழும்பு மகளிர் இந்து மன்றத்தின் தலைமைப் பதவியை ஏற்று ஏழு மாதங்களே முடிவடைந்த நிலையில் எத்துனை சாதனைகளை நடத்தி முடித்தா். சிரித்த முகத்துடன் அன்பான பேச்சுடன் தகுந்த அணுகு முறையுடன் நிர்வாகக் குழுவில் அனைவரையும் தன்வசப்படுத்தி அவர்களது முழு அளவிலான ஒத்துழைப்புடன் பல சிறந்த நிகழ்வுகளை நடத்தி வந்தார். 2017ஆம் 2018ஆம் ஆண்டுகளில் இன்னும் எத்தனையே திட்டங்களை வகுத்து நடைமுறைப்படுத்த வேண்டும், முக்கியமாக மகளிர் அணியினரை உற்சாகம் நிரம்பி வழியும் முகத்துடன் எப்போதும் பார்க்க வேண்டும் என்ற அந்த உத்வேகத்துடன் எத்தனையோ அடுக்கடுக்கான கனவுகளும் கலைந்து அவர் திடீரென இறையடி சேர்ந்தமை எமக்கு ஏற்பட்ட பேரிழப்பாகும்.

ஸ்ரீயின் பதவிக்காலத்தில் எமது மன்றத்திற்கு அகில இலங்கை இந்து மாமன்றம் வழங்கிய ஆதரவும் அனுசரனையும் பெரிதும் பயனளித்தது. கடந்த 2016ம் ஆண்டு நவராத்திரி விழா நாட்களில் ஒன்றினை எமது மன்றத்திற்கு வழங்கி எம்மையே நடாத்துமாறு அளித்த வாய்ப்பினை ஸ்ரீ மிகவும் சிறப்பாக பயன்படுத்தி வெற்றிகண்டா்.

இதையடுத்து இந்து மாமன்றம் அதன் 60வது ஆண்டு நிறைவினையும் மகளிர் இந்து மன்றம் அதன் 50வது ஆண்டு நிறைவினையும் முன்னிட்டு சரஸ்வதி மண்டபத்தில் இணைந்து நடாத்திய "யாழ் அங்காடி " என்றுமில்லா மனமகிழ்வினை எமக்கு தந்தது. ஸ்ரீ இரவு பகல் பாராது எத்தனையோ புதிய நவீன முறைகளையும் அன்றைய யாழ். மண்ணின் பண்பாடு மிக்க பழம் பொருட்களையும் இந்த யாழ் சந்தையில் இணைத்துப் பார்ப்பதற்கு பழமை கலந்த புதுமையான ஒரு நிகழ்வினை மன்ற அங்கத்தவரின் அயராத ஒத்துழைப்புடன் நடத்திய சாதனை அவருக்கும் எமக்கும் மன நிறைவினைத் தந்தது. செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் நினைவு தின நிகழ்வுகளிலும் மாமன்றத்தினர் மகளிர் அணியினை இணைத்துக் கொண்டமை எமக்கு மீண்டும் உரியதோர் சந்தர்ப்பமாக அமைந்தது. இந்த நிகழ்வில் ஒரு முக்கிய அம்சமாக சரஸ்வதி மண்டப விடுதியில் தங்கியிருந்த இளம் யுவதிகளை எமது மன்றத்தின் இளைய தொண்டர் அணியாக இணைத்து அவர்களை அடையாளப்படுத்தி அந்த யுவதிகளின் மனங்களில் தன்னம்பிக்கையையும் மன உற்சாகத்தினையும் ஏற்படுத்துவதற்கு ஒரு சாந்தர்ப்பம் கிடைத்தது. மாமன்றம் அளித்த வாய்ப்புகளை சிறந்த முறையில் ஸ்ரீயின் தலைமையில் எமது மன்றமும் பயன்படுத்திக் கொண்டது.

ஸ்ரீயின் தனிப்பட்ட வாழ்க்கையிலும் இறைவன் எந்தக் குறையினையும் வைக்கவில்லை. அவர் பட்டயக்கணக்காளராக மிகப் பிரபல்யமாகத் திகழ்ந்தார். வழக்கறிஞரான அன்புமிக்க கணவராக திரு. விஷ்ணுகாந்தன் அமைந்தமையும் அவருக்கு கடவுள் கொடுத்த மிகப் பெரிய வரமாகும்.

ஜயிஷ்னி, துவாரகேஷ் எனும் இரு பிள்ளைச் செல்வங்களும் படிப்பில் சிந்து விளங்கி மருத்துவ கல்லூரியில் பயின்று வருகின்றனர். மகளிர் மன்ற உப தலைவியான அவரது அன்புச் சகோதரி குமுதரஞ்சினி நந்தகுமாரன் ஸ்ரீயின் வெற்றிகளின் பின் நிற்கின்ற ஒரு உந்து சக்தியாக விளங்கினார். குறை ஒன்றுமில்லாத வாழ்க்கை வாழ்கின்றேன் என்ற அந்த நிறைந்த மனநிலையில் தான் இந்த உலகியல் வாழ்க்கையை அவர் நீத்தார். ஸ்ரீயெனும் அணையாத சுடர் கொழும்பு மகளிர் இந்து மன்ற வரலாற்றில் எப்போதும் ஒரு அழியாத இடத்தினை பெற்று விளங்கும்.

*"எழுதிவைத்த எழுத்தை மாற்ற ஈசனாலும் ஆகுமோ?*
*என்றதை நாமும் ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும்"*

## இந்து மாமன்றத்தை வளர்த்து வந்த மாமனிதன் கயிலாசபிள்ளை அவர்களின் மறைவு சைவ உலகிற்கு பேரிழப்பாகும்

**ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் சபையின் சர்வதேச இணைப்பாளர் திரு. ஐ.தி.சம்பந்தனின் அனுதாபச் செய்தி**

சைவ உலகில் தலைநிமிர்ந்து பணியாற்றி வரும் அகில இலங்கை இந்து மாமன்றத்தின் தலைவராக அளப்பரிய சமய சமூகப் பணியாற்றி வந்த விசுவநாதர் கயிலாசபிள்ளை அவர்கள் அமரத்துவம் அடைந்தார் என்ற செய்தி அறிந்து வெளிநாடுகளில் வாளும் சைவப்பெருமக்கள் ஆழ்ந்த கவலையடைந்துள்ளனர்.

1934ம் ஆண்டு யாழ்ப்பாணம் அராலிக் கிராமத்தில பிறந்தவர் அமரர் கயிலாசபிள்ளை அவர்கள். தமது ஆரம்ப கல்வியை அராலி சரஸ்வதி வித்தியாசாலையிலும, பின்னா உயர் கல்வியை யாழ்-இந்துக் கல்லூரியிலும் கற்று கொழும்பு பல்கலைக் கழகத்தில் தனது பட்டத்தைப் பெற்றார்.

வரலாற்றுப் பெருமை பெற்ற திருக்கேதீஸ்வரத்தைக் கருங்கல்லால் கட்டியெழுப்ப முன்னின்று உழைத்தவர். சமய நிறுவனுங்கள் மனிதநேய சமூகப்பணியாற்ற வேண்டுமென்பதற்காக அறக்கட்டளையை அமைத்து அதன் தலைவராக வழிநடத்தி வந்தவர். உலகில் பலநாடுகளில் கிளைகள் நிறுவி அவைகள் மூலம் நிதிசேகரித்து பாதிக்கப்பட்ட மக்களின் நல்வாழ்விற்கா உதவிவந்தவர். உள்நாட்டுப்போரில் பாதிக்கப்பட்ட வன்னி, முல்லைத்தீவு, மன்னார், மட்டக்களப்பு ஆகிய பகுதிகளில் பாதிக்கப்பட்ட மக்களின் நல்வாழ்விற்காக முன்னுரிமை கொ டுத்து வந்தவர்.

அமரர் கயிலாசபிள்ளை அவர்களை தலைவராகக் கொண்ட மனிதநேய அறக்கட்டளை உலக அரங்கில நற்பெயர்பெற்ற நிறுவனமாக திகழ்கிறது. அதற்கு தலைவரது நேர்மை, நிதானம், கட்டுப்பாடு ஒழுக்கமுமே காரணம். அன்னார் ஆரம்பித்த மனிதநேயம் அவர்காட்டிய வழியில் செல்வதே அன்னரின் ஆத்ம சாந்திக்கு நாம்செய்யும் பிரார்த்தனையாகும்

# இந்தச் சுடரில்...


| | |
|---|---|
| ❖ பஞ்சபுராணம் | 1 |
| ❖ ஆன்மீகச் சுடரின் அருள்மடல் | 3 |
| ❖ சித்திரா பௌர்ணமி | 5 |
| ❖ சைவ ஆசாரங்களும் சிரார்த்தமும் | 8 |
| ❖ Way of life by doing Kiriyai | 11 |
| ❖ தீபாவளி போட்டி முடிவுகள் - 2016 | 15 |
| ❖ மாதங்களின் சிறப்புகள் | 18 |
| ❖ யோகர்சுவாமிகளின் வாழ்வுடன் பின்னிப்பிணைந்துவிட்ட கொழும்புத்துறை | 20 |
| ❖ ஆறுமுக நாவலரின் பாலபாடம் கூறும் வாழ்க்கை நெறிகள் சில... | 24 |
| ❖ "சைவம் வளர்த்த பெண்கள்" - மங்கையர்க்கரசியார் | 28 |
| ❖ பரமபதியிடம் பேரன்பு | 30 |
| ❖ திரு.வி.அம்பலவாணர் அவர்கள் வழங்கிய ஏற்புரை. | 32 |
| ❖ சைவமும் கலைகளும் | 34 |
| ❖ இசைத்தமிழ் வித்தகர் விபுலானந்தர் | 37 |
| ❖ "ஸ்ரீ" எனும் அணையாத சுடர் | 39 |


இறை நம்பிக்கை இல்லாதவனுக்கு
எதுவுமே இல்லை.
ஆண்டவன் வழிபாடு அறியாமையைப் போக்கும்.

எல்லாவற்றையும் வெல்வது ஞானமே!

குறைய வேண்டியது பாவம்,
நிறைய வேண்டியது புண்ணியம்.

## 26-03-2017 அன்று பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் இடம்பெற்ற, 'மனிதநேயமாமனிதர்' அமரர் திரு. வி.கயிலாசபிள்ளை அவர்களின் அஞ்சலி நிகழ்வும் ஆத்மசாந்திப்பிரார்த்தனையும்



அமரரின் நினைவுச் சிறப்பு 'இந்து ஒளி' யை முன்னைநாள் பிரதம நீதியரசர் மாண்புமிகு க.ஸ்ரீபவன் அவர்களிடமிருந்து பெற்றுக் கொள்ளும் அமரரின் மகள் திருமதி செ.அருந்ததி, மருமகன் வைத்தியகலாநிதி சி.செல்லையா, அமரரின் தம்பி வைத்தியகலாநிதி வி.அம்பலவாணர் மற்றும் ஏஜஈ காப்புறுதி நிறுவன முன்னைநாள் தலைவர் திரு. சந்திரா ஜயரட்ண.



அமரரின் நினைவுச் சிறப்பு 'இந்து ஒளி' யை முன்னைநாள் பிரதம நீதியரசர் மாண்புமிகு க.ஸ்ரீபவன் அவர்களிடமிருந்து பெற்றுக் கொள்ளும் சைவஞானபானு கலாநிதி ஆறு.திருமுருகன், திரு.அ.மாணிக்கவாசகர், பாலையூற்று அம்மா, திரு.வே.கந்தசாமி ஆகியோர்.



சிறப்புரையாற்றும் திரு.சந்திரா ஜயரட்ண



மு/கற்சிலைமடு அ.த.க பாடசாலை, மு/திருமுறிகண்டி இந்து வித்தியலயங்களின் அதிபர்களிடம் திரு.சி.தனபாலா மற்றும் திரு.ஜெ.நிரோஷ்காந்த் மாணவர்களுக்கான இலவச அப்பியாசக் கொப்பிகளை வழங்கி வைத்தனர்.



நினைவுப்பேருரை ஆற்றும் சைவஞானபானு கலாநிதி ஆறு.திருமுருகன் அவர்கள்.



நன்றியுரை ஆற்றும் திரு.வே.கந்தசாமி அவர்கள்.



அமரரின் தம்பி வைத்தியகலாநிதி வி.அம்பலவாணர் அவர்களின் ஏற்புரை

## ஹட்டன் , கொட்டகலை நகரில் மாமன்றத்திற்கு திரு.முத்துசாமி அவர்களிடமிருந்து நன்கொடையாகக் கிடைத்த காணியில் சுற்று மதில் வேலைகள் ஆரம்பிக்கும் சுபநிகழ்வு.



திரு.சி.த.சி.அருளானந்தன், சிவஸ்ரீ கு.வை.க.வைத்தீஸ்வரக் குருக்கள் மற்றும் ஹட்டன் கல்வி வளர்ச்சிப் பணி மன்றத்தினர்.

HINDU OLI - REGISTERED IN THE DEPARTMENT OF POSTS OF SRI LANKA UNDER NO. QD/55/NEWS/2017

**10-03-2017 அன்று மாத்தளை திருவருள்மிகு ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலய வருடாந்த மாசிமக உற்சவத்தை முன்னிட்டு வெளியிடப்பட்ட சிறப்பு 'இந்து ஒளி' இதழ் வெளியீடு.**



சிறப்பிதழை வெளியிட்டு வைக்கும் ஆலய நிர்வாக சபைத் தலைவர் திரு.விக்னேஸ்வரன் செட்டியாருடன் மாமன்ற உபதலைவர்கள் திரு.சி.த.சி. அருளானந்தன், திரு.சி.தனபாலா, திருமதி வசந்தா வைத்தியநாதன், ஆலய நிர்வாக உறுப்பினர்கள் மற்றும் பக்தர்கள்



**திருக்கேதீச்சர ஆலய கருங்கற் திருப்பணிகளின் இரண்டாம் கட்டமாக சிவன் அம்பாள் சந்நிதி விமானங்கள், உட்பிரகார சந்நிதிகள் கருங்கல்லால் அமைப்பதற்கான ஆரம்ப கிரியைகள் 17-04-2017 அன்று நடைபெற்றது.**



**WALK FOR VALUES**

**அமைப்பினால் ஒழுங்குசெய்து நடாத்தப்பட்ட உலக ஒற்றுமை, சாந்தி, சமாதானம் என்பவற்றை வலியுறுத்தி நடாத்தப்பட்ட நடைபவனியில் மாமன்றம் சார்பில் கலந்துகொண்ட சக்தி இல்ல மாணவ மாணவியர்.**






இவ்விதழ் இல. 48B, புளுமெண்டால் வீதி, கொழும்பு - 13, யுனி ஆர்ட்ஸ் (பிறைவேட்) லிமிட்டட் நிறுவனத்தில் அச்சிடப்பட்டு அகில இலங்கை இந்து மாமன்றத்தினால் வெளியிடப்பட்டது.